# திருக்கோயில்

செப்டம்பர் 1975

ரூ. 1




# உங்களுக்கு தெரியுமா?

## உங்களுக்குத் தெரியுமா?

தமிழ்நாடு அரசு பரிசுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருவாய் நாடு செழிக்க உதவும் மக்கள் நல்வாழ்வு திட்டங்களிலேயே செலவிடப்படுகிறது.

## உங்களுக்குத் தெரியுமா?

ஒவ்வொரு மாவட்டத்திலும் திரட்டப்படும் தொகை அந்த மாவட்டத்திலேயே கிராம நலத் திட்டங்களில் செலவிடப்படுகிறது.




## உங்களுக்குத் தெரியுமா?

இத்திட்டத்தில் திரட்டப்படும் வருவாய் மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகளை கட்டவும், சேரிகளை சீரமைக்கவும் மற்றும் பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு ஒன்றை வாங்குங்கள். உங்களுக்கும் நலிவுற்ற உங்களது சோதரர்களுக்கும் நல்வாழ்வு அளிக்க அது உதவும்.

உங்களுக்கு ரூ. ஒரு லட்சம் பரிசு கிடைக்கும் வாய்ப்பும் உள்ளது.

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-600002

# திருக்கோயில்


மாலை 17

இராக்கத — ஆவணி
செப்டம்பர் — 1975

மணி 12


## பொருளடக்கம்


1. சந்திரயோகம் —கு. வரதராசப் பிள்ளை
2. தலவரலாற்றுக் குறிப்புக்கள்
3. திவ்வியப் பிரபந்தச் செழுங்கனிகள் —ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.,
4. பஞ்சாமிர்தம் —டி. என். சுகிசுப்பிரமணியன்
5. திருமுறைச் செழுமலர்கள் —ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.,
6. காலம் சொல்லும் —கே. எஸ். ஜெகன்னாதன்
7. கருக்கினில் அமர்ந்தவள் கோயில் —ஏ. ஏகாம்பரநாதன், எம். ஏ.,
8. அடியார்க்கு நல்லபெருமான் —சம்பந்த சரணாலயன்
9. எனக்கும் ஆதல் வேண்டும் —தே. வீரராகவன், எம். ஏ.,
10. கோசல தேசம் —தமிழ்விரகன்
11. உத்தரமேரூர்க் கல்வெட்டுக்கள்


முகப்பு : **விநாயகர்**


ஆசிரியர் :
**ந. ரா. முருகவேள்,**
எம்.ஏ., எம்.ஓ.எல்.,

உதவி ஆசிரியர் :
**கே. எஸ். ஜெகன்னாதன்**


என் கடன்
பணி செய்து கிடப்பதே

# சந்திரயோகம்

## கு. வரதராசப்பிள்ளை

158606

சந்திர யோகம் என்பது, சந்திரனை உடம்பில் விளங்கச் செய்யும் யோகம் என்றபடி. புறத்தே சந்திரன், சூரியன், அக்கினி முதலியவை இருப்பதைக்காண்கிறோம். அதேபோல அகத்தே சந்திரன், சூரியன், அக்கினி முதலியவை உள்ளன. புறத்தேயுள்ள சந்திரன் வளர்பிறையில் வளர்ந்தும், தேய்பிறையில் தேய்ந்தும் வரும். உடம்பிலேயுள்ள சந்திர கலையும் வளர்ச்சியும் தேய்வும் பெறும். ''அண்டத்திலுள்ள அனைத்தும் பிண்டத்திலுமாம்'' என்பது ஆன்றோர் கண்ட முடிவு. ஆதலால் சந்திரன் முதலிய புறப்பொருளுக்குக் கலை முதலியவை கூறுவது போல அகத்தேயுள்ள சந்திரன் முதலிய பொருளுக்குக் கலை முதலியவை ஆசிரியர் திருமூலர் கூறுகிறார்.

சந்திரன் முதலிய பொருள்களின் இயல்புகளை உணர்ந்தால்தான் அதனால் அடையும் பயனை உணர முடியும். ஆதலின் ஆசிரியர் அவ்வொளிப் பொருள்களின் இயல்புகளை முதற்கண் கூறுகிறார். உடம்பில் மூலாதாரத்திலிருந்து துவாத சாந்தம் வரை செல்லும் கலைகள் சந்திரனுக்குப் பதினாறு என்றும், சூரியனுக்குப் பன்னிரண்டு என்றும், அக்கினிக்குப் பத்து என்றும் அகவுணர்வில் அறிந்த யோகியர் கூறுகின்றனர். இம்மூன்றும் சேர்ந்து ஒன்றுவதில் சந்திர யோகம் அமையும்.

''ஆகின்ற சந்திரன் சூரியன் அங்கியுள்
ஆகின்ற ஈரெட்டெட் டாறிரண் டீரைந்துள்
ஏகின்ற அக்கலை யெல்லா மிடைவழி
ஆகின்ற யோகி அறிந்த அறிவே.'' மந்: 852

பன்னிரண்டு கலைகளையுடைய சூரியனைச் சந்திரன் வழியாகச் செலுத்தப் பயின்றவர் பெரும் பேற்றை எய்துவர். அப்போது சந்திர கலை பதினாறில் சூரியனது கலைகளும், அக்கினியினது கலைகளும் அடங்கிவிடும். இம்மூன்றும் பொருந்தும்போது அறுபத்து நான்கு கலைகளையுடைய பிரணவம் உதிக்கும். சிரசுக்கு மேல் எல்லாக் கலைகளும் கருவாகவுள்ளன. இக்கலைகள் எல்லாம் இடை, பிங்கலை, சுழுமுனை வழியே தொடர்புடையன. இவைகளின் கீழ் நோக்கும் தன்மையைக் கெடுத்து மேலெழச் செய்து பிரமரந்திரப் புழையின் மேல் விளங்கும் சகஸ்ரதளத்தில் கொண்டு சேர்க்க நல்ல சிவயோகியர் சிவத்தியானத்தில் பொருந்தியிருப்பர்.

''எல்லாக் கலையும் இடைபிங் கலைநடுச்
சொல்லா நடுநாடி யூடே தொடர்மூலஞ்
செல்லா எழுப்பிச் சிரத்துடன் சேர்தலால்
நல்லோர் திருவடி நண்ணிநிற் போரே.''......... மந்: 857

இடை பிங்கலையாகிய இரு கலைகளும் ஒளி வடிவில் பின்னி அமைந்து மூலாதாரம் சுவாதிட்டானம் ஆகிய அக்கினி கண்டம் மணிபூரகம் அநாகதம் ஆகிய சூரிய கண்டம், விசுத்தி ஆக்ஞையாகிய சந்திரகண்டம் என்று மூன்று கண்டங்களாக உடம்பைப் பிரித்து நிற்கின்றன. மூலாதாரத்திலுள்ள புருடனோடு ஒளி வடிவில் பொருந்திய சூரிய சந்திர ஒளிகள் சுழுமுனை வழியாகப் பின்னி மேலே சென்று நட்சத்திரங்கள் போல் விளங்கிச் சந்திர மண்டலம் அமைகிறது. இதனால் பூமியிலிருந்து நவமண்டலங்களும் இங்குப் பொருந்தி நிற்கும். பஞ்ச பூதங்களும், சூரியன், சந்திரன், அக்கினி, நட்சத்திரம் ஆகியவை நவமண்டலங்களாகும். இந்நெறியில் சென்றவர்க்குப் பஞ்ச பூத உலகமும், சோம சூரியாக்கினியால் உணர்த்தப்பட்ட சுட்டறிவும் இல்லையாகும்.

இனி, சந்திரன் தேய்பிறையை அனுசரித்துக் கீழ்முகமானபோது மூலாதார சக்தி அதிகரித்துச் சந்திரன் இருளில் செலுத்துவான். சந்திரன் வளர்பிறையை அனுசரித்து மேல் முகமான போது மூலாதார சக்தி பிரகாசமின்றி மனம் மேல் நிலைக்குச் செல்லும். மூலாதார சக்தியின் ஆற்றலே எல்லா உற்பத்திக்கும் காரணமாகும். இம்மூலாதாரத்திலிருந்து மேலெழும் சோடச கலைகளின் (பதினாறு கலைகளின்) தன்மையை அறிந்தவர்களே வளர் பிறைபோல் சிவத்தின் திருவடியை அடைவர். மூலாதாரத்திலுள்ள அக்கினி சூரியனைக் கடந்து சந்திரனை அடைந்த போது பிரணவம் விளங்கும். இவ்வாறு சந்திரனின் பதினாறு கலைகளும் புறம் போகாது அகத்தே நிற்கின்ற தன்மை கண்டும் தாழ் வானவர்கள் உண்மையை நினைக்கவில்லை. அதனால் அவரது வாழ்நாள் வீழ்நாளாகிக் காலனின் கருத்துப்படி சென்று பிறப்பிறப்பில்பட்டு உழல்கின்றார்கள்.

''ஒன்றிய ஈரெண் கலையும் உடலுற
நின்றது கண்டும் நினைக்கிலர் நீதர்கள்
கன்றிய காலன் கருத்துழி வைத்தபின்
சென்றதில் வீழ்வர் திகைப்பொழி யாரே.''.......
மந்: 863

இனி, சூரியனும், சந்திரனும் உடம்பில் எவ்வாறு விளங்குகின்றன என்று கூறுகிறார் ஆசிரியர். சுவாதிட்டானத்தில் சந்திரன் ஒற்றைக் கலைப் பிறையாக உள்ளது. அச்சந்திர கலை மூலாதாரத்தை நோக்கிப் பாய்ந்து பிரமரந்திரம் சென்றால் கதிரொளி கிட்டும். மூலாதாரத்திலுள்ள அக்கினியையும் மணி பூரகத்திலுள்ள சூரியனையும் ஒன்றாகச் சேர்ப்பதில் சந்திரனொளி அமையும். இவ்விரண்டு ஒளிகளும் பிரமரந்திரத்தில் ஒன்றானால் சோமசூரியாக்கினி கூடிய பிரணவம் அமையும். பிரணவமே சிவாலயமாம்.

''அங்கி மதிகூட வாகும் கதிரொளி
அங்கி கதிர்கூட வாகு மதியொளி
அங்கி சசிகதிர் கூடவத் தாரகை
தங்கி யதுவே சகலமு மாமே.'' மந்: 864

பன்னிரண்டு கலைகளையுடைய சூரியன் பெண்ணாகும்; பதினாறு கலைகளையுடைய சந்திரன் ஆணாகும். இவை இரண்டையும் உடம்பை விட்டு அகலாமல் முகத்துக்கு முன்னே தோன்றும் ஒளியில் கலப்பித்தால் தெவிட்டாத திருவடி இன்பம் உண்டாகும்.

இவற்றைச் சேர்க்கும் முறையை அடுத்துக் கூறுகிறார் ஆசிரியர். சூரியன் என்பதும், சந்திரன் என்பதும் எது என்று தெளிவாக ஆசிரியர் விளக்கி விட்டார். அஃதாவது சந்திரன் என்பது இடக் கண்; சூரியன் என்பது வலக் கண்ணாகும். இடக்கண் பார்வையை வலக்கண் பார்வையோடு பொருத்திக் கண்டால் வலக்கண்ணுக்கு மேலே ஒரு சிறு ஒளி தோன்றிவிடும். இதுவே சிரசில் அக்கினி மூலையாகும். இதை அறிந்த பிறகே பிரணவத்தின் விளக்கம் புலனாகும்.

சந்திரனும் சூரியனும் சேர்ந்தபோது உதித்தது பிரணவ சோதி என்ற அக்கினிக் கலை. இது முதல் நிலை. இந்நிலைக்குப் பிறகு வலக்கண் பார்வையை இடக் கண் பார்வையோடு பொருத்த வேண்டும். அவ்வாறு பொருத்தினால் சிரசில் அக்கினி மூலையிலிருந்து முறையாக ஈசான திக்குக்குச் சூரிய கலை பாய்ந்து வட்டம் பூர்த்தியாகும்.

''மாணும் மதியதன் காலை வலத்திட்டு
காணும் பரிதியின் காலை இடத்திட்டு''

என்பது அவர் வாக்கு.

அஃதாவது அக்கினி மூலையிலிருந்து முறையாக ஈசான திக்கை நோக்கிக் கலைகள் பாய்ந்து சந்திர வீதி அமையும் என்பதாம். இவ்வண்ணம் தெற்கிலிருந்து சீவகலை வடக்கு நோக்கிப் பாய்வதே உண்மையான கைலாச யாத்திரையாம். இதை ''அட்டதளகமல முக்குண அவத்தை'' என்ற தலைப்பில் ஆசிரியர் அழகாக் விளக்குகிறார். சிரசின்மேல் வடக்கு முதலான ஏழு திக்குகளும் சகள நிலை; ஈசான திக்கில்தான் நிட்களம் உள்ளது.

''ஏழுஞ் சகளம் இயம்புங் கடந்தெட்டில்
வாழும் பரம்''

என்று ஆசிரியர் கூறுகிறார்.

இவ்வுண்மையை உடலில் கண்டோர் ஒளி நெறி பற்றியவராவர். இம்முறையில் வழுவாது பயிற்சி செய்து வந்தால் ஆயிரம் ஆண்டு இவ்வுடம்பில் வாழலாம். மூச்சுக்கும் இவ்யோகத்துக்கும் சம்பந்தம் இல்லை என்பதை நன்கு அறியவும். இந்நெறி ஒளி பற்றியது; கண்ணாலே காணக் கூடியது என்க.

''காணும் பரிதியின் காலை இடத்திட்டு
மாணும் மதியதன் காலை வலத்திட்டுப்
பேணியே இவ்வாறு பிழையாமற் செய்வீரேல்
ஆணி கலங்காதவ் வாயிரத் தாண்டே.''
மந்:866

முன்னே சொன்ன ஈசான் திக்கில் விளங்கிய சீவகலை பிரமரந்திரப் புழைக்கு மேல் விளங்கும் சகஸ்ர தளத்தை அடையும் போது சிரசைச் சூழவுள்ள எட்டுத் திக்குக்களையும் கடந்து ஒன்பதாவது திக்குக்கு வரும். அப்போது சிரசில் நாதம் முழங்கும். அந்த நாதத்தில் தேவாதிதேவனான சிவபெருமான் களிப்புடன் பொருந்துவான். இந்த மேல் நிலையில் சூரிய சந்திரர்கள் வலப் புறமும் இடப் புறமும் சிறு தீபவொளி போல் விளங்குவர். சூரியன் புறப்படு முன் சங்கோசை மக்களை விழிப்பித்தல் போல ஞான சூரியன் எழுமுன் நாம் உதித்து முன்னர் விளங்கும்.

''பாலிக்கு நெஞ்சம் பறைஓசை ஒன்பதில்
ஆலிக்கும் அங்கே அமரர் பராபரன்
மேலைக்கு முன்னே விளக்கொளி யாய்நிற்குங்
காலைக்குச் சங்கு கதிரவன் தானே.'' மந்:867

மணிவாசகப் பெருமாள் நாதமே பறையோசை என்று திருவாசகத்திற் கூறுகிறார்.

''இன்பால் மொழிக்கிள்ளாய் எங்கள்பெருந்துறைக் கோன்
முன்பால் முழங்கும் முரசியம்பாய்—அன்பால்
பிறவிப்பகை கலங்க பேரின்பத் தோங்கும்
பருமிக்க நாதப் பறை.''

இவ்வெல்லையை அமைத்தவர்க்குச் சந்திரன் என்றும் சூரியன் என்றும் தனியாக இல்லை. அவை தனியாக இருக்கும்வரை சாதகர் கால அளவுக்குக் கட்டுப்பட்டவராவார். சாதனை முற்றி அவை ஒன்றானபோது அவர் கால நியதியைக் கடந்து நிற்பவராவார். சூரியனே நாகமாகவும், சந்திரனே ஒளியாகவும் பிரிப்பற்று விளங்கும்.

அடுத்துச் சந்திரயோகம் பயில்வார்க்கு இரண்டு முக்கியமான குறிப்புக்கள் கொடுக்கிறார் ஆசிரியர். சாதனையின் பயனாகச் சிரசின் மேலே சந்திரன் விளங்குமளவு, உறங்காதிருந்து அச்சந்திரன் கீழே இறங்கிய பின்னரே தூக்கத்துக்குச் செல்ல வேண்டும். அவ்வாறு செய்யின் ஒளி உள்ளத்தே நிலைபெற்றுச் சந்திரன் பூரணை

யாக இருக்கும் என்கிறார். அஃதாவது சிரசின் மேல் ஒளியைக் கண்டு மனம் பதிந்திருக்கும் போது உறக்கத்துக்குச் செல்லலாகாது என்பதாம்.


''அயின்றது வீழ்வள வுந்துயில் இன்றிப்
பயின்ற சசிவீழ் பொழுதில் துயின்று
நயந்தரு பூரணை உள்ள நடத்தி
வியந்தரு பூரணை மேவுஞ் சசியே.'' மந்:872

இனி மற்றொரு குறிப்பு என்னவென்றால், சந்திரன் சிரசில் உதிக்குமளவும் காலை எழுந்ததும் தியானம் செய்து சந்திரன் உதித்த பிறகு உணவை உட்கொள்ள வேண்டும் என்பதாம். அஃதாவது, காலை எழுந்ததும் தியானம் செய்து ஒளி பெற்ற பின்னரே உணவு முதலியவை உட்கொள்ள வேண்டும் என்க.

''சசியுதிக் கும்அள வுந்துயி லின்றிச்
சசியுதித் தானேல் தனதூண் அருந்திச்
சசிசரிக் கின்றள வுந்துயி லாமற்
சசிசரிப் பின்கட்டன் கண்துயில் கொண்டதே.''
மந்:873

என்ற மந்திரத்தால் அறியக் கிடக்கிறது.

இவ்வாறு நாடோறும் செய்து வரும் யோகியர் எமனது வாழ்நாளையும் அளக்கவல்லவராவர். மேலும் முக்காலத்தையும் அமுதக் கிரணத்தைப் பருகிச் சாவா மூவா நிலை எய்தியிருப்பர். ஆதலால் இவர்கட்குக் காமக்கழிவு இல்லை. எனவே சந்திர கலை பூரணமாக இருக்கும். இக்கலையைப் போற்றியிருந்தால் உடம்பு அழியாது. இதுவே சந்திரயோகத்தின் பயன் ஆகும். சந்திரயோகத்தை ஆசாரியன் மூலமாக உபதேசம் பெற்று உய்தி பெறுவோமாக.






## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

* 'திருக்கோயில்' திங்கள் இதழின் 'சந்தாதாரர்கள்' ஆகச் சேர விருப்பமுள்ளவர்கள் ''திரு. ஆணையர், அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034'' என்னும் முகவரிக்கு ரூபாய் பன்னிரண்டு அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

* அந்தந்த வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் சந்தாவைச் செலுத்திச் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

* இதழ்கள் தவறாது கிடைத்திடச் சந்தாதாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

* எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.



**ஆண்டுச் சந்தா ரூ.12/- தனி இதழ் ரூ.1/-**



# தல வரலாற்றுக் குறிப்புக்கள்!

**திருவாழ்கொளிப்புத்தூர் :**

இத்தலம் கொள்ளிட நதியின் தென்கரையில் அமைந்திருக்கின்றது. மாயூரத்தினின்று 6 கி.மீ. தொலேவில், மாயூரம்—பந்தணே நல்லூர்ப் பாதையில் உள்ளது. இது தேவாரத் திருமுறைகளில் திருவாழ்கொளிப்புத்தூர் எனக் குறிக்கப் பெற்றுள்ளது. பொது மக்கள் இதனைத் திருவாளப்புத்தூர் என வழங்கி வருகின்றனர். இங்குள்ள சிவலிங்கம் சுயம்புமூர்த்தி. சுவாமி அருள்திரு இரத்தினபுரீசுவரர். அம்பிகை வண்டார்பூங்குழலி; வண்டமர் பூங்குழல் நாயகி. கும்பகோணம், மாயூரம், வைத்தீசுவரன் கோயில் ஆகிய இடங்களிலிருந்து அடிக்கடி உந்தூர்திகள் இங்குச் செல்கின்றன. 1961-ஆம் ஆண்டின் குடிமக்கள் கணக்கின்படி இங்கு 3,400 பேர் வாழ்கின்றனர். ஊரின் நடுவே கோயில் அழகுற அமைந்திருக்கின்றது.

கோயிலின் பரப்பு 1.27 ஏக்கர். மூன்று பிராகாரங்களும், இரண்டு சந்நிதிகளும், ஒரு மூன்று நிலேக்கோபுரமும், இரண்டு சிறிய விமானங்களும் உடையதாக, இக்கோயில் விளங்குகின்றது. கோபுரத்திலும் விமானங்களிலும் அழகிய சுதை வேலேகள் செய்யப்பட்டுள்ளன. இக்கோயிலில் குறிப்பிடத் தக்க ஒரு சிறப்பாக, திருநந்திதேவரின் திருவுருவம் திகழ்கின்றது. அதனுடைய முகம் தெற்கு நோக்கிச் சிறிது சாய்ந்திருக்கின்றது. வண்டமர் பூங்குழல் நாயகியின் திருவுருவம், சிற்ப வேலேப்பாடுகள் மிக்கு அழகியதாய்த் திகழ்கின்றது. விநாயகர் முருகர் தட்சிணுமூர்த்தி பிட்சாடனர் சூரியன் சந்திரன் சண்டிகேசுவரர் பைரவர் திருவுருவங்கள் உள்ளன. விநாயகர் முருகர் சனீசுவரர் கஜலட்சுமி சரசுவதி ஆகிய கடவுளர்க்குத் தனிச் சந்நிதிகள் இருக்கின்றன. கொற்றவை என்னும் துர்க்கைக்கு இங்கே தனிச் சந்நிதி உள்ளது. துர்க்கையின் திருவுருவம் சிற்பக் கலேத்திறன் மிக்கதாய்ச் சிறந்து விளங்குகின்றது. விழாக் காலங்களில் உலா நிகழ்த்தப் பெறும் வெண்கலப் படிமங்கள் பல உள்ளன. அவைகளுள் பிட்சாடனர், வாசுகி திருவுருவங்கள் சிறப்பாகக் குறிக்கத்தக்கனவாகும்.

இக்கோயிலில் நவக்கிரகங்கள் இல்லாமை குறிப்பிடத்தக்கதொன்று. பரம்பரை உரிமையுள்ள அருச்சகர்களால் நான்கு கால பூசை நடைபெறுகின்றது. பழமையான பொன் வெள்ளி அணிகலங்கள் உள்ளன. அவற்றின் மதிப்பு ரூபாய் ஆயிரமாகும். நன்செய் நிலங்கள் 135.65 ஏக்கரும், புன்செய் நிலங்கள் 127.24 ஏக்கரும், இரண்டு வீடுகளும் உள்ளன. இவற்றின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 42,000 வருவாய் கிடைக்கின்றது. யாத்திரிகர்களுக்காக, இக்கோயில் ஒரு சத்திரத்தை நிர்வகித்து வருகின்றது. உண்டியல் மூலம் ரூபாய் 100-ம், அருச்சனே, அபிடேகம் கட்டணங்களின் மூலம் ரூபாய் 200-ம் ஆண்டு ஒன்றுக்குக் கிடைக்கின்றன. மரத்தால் செய்யப்பெற்ற வாகனங்கள் 10 இருக்கின்றன. வைகாசி விசாகம், கார்த்திகைத் தீபம், பங்குனி உத்திரம், நவராத்திரி, ஆடிப் பூரம், ஆவணி மூலம், விநாயகர் சதுர்த்தி, முருகன் அறுநாட் பெருவிழா, சிவராத்திரி, திருவாதிரை என்னும் விழாக்கள் முறைப்படி ஆண்டுதோறும் நிகழ்கின்றன. இவைகளில் வைகாசி விசாகம் மிகவும் முதன்மையானது.

தலவரலாற்றின்படி, இறைவன் ஒரு சமயம் பாண்டவர்களில் ஒருவனுகிய அருச்சுனனுடைய வலிமை மிக்க வாளே இங்குள்ள ஒரு புற்றில், அவனுடைய பக்திமையை ஆய்வதற்காக மறைத்து வைத்துவிட்டார். அதனுல் திருவாள் ஒளி புற்றூர் என்னும் பெயர் இத்தலத்திற்கு ஏற்பட்டது. இப்பெயரே திருவாழ்கொளி புத்தூர் என்றும், திருவாளப்புத்தூர் என்றும் மருவி வழங்கி வருகின்றன. இத்தலத்தின் புனித மரம் வாகை. இங்கு ஐயன்தீர்த்தம் சக்கர தீர்த்தம், பிரம்ம தீர்த்தம் என்னும் திருக்குளங்கள் உள்ளன. இங்குள்ள துர்க்கையம்மன் அருளாற்றல் மிக்கவளாகப் போற்றப்படுகின்ருள். திருமால் இங்கு விலேயுயர்ந்த இரத்தினம் என்னும் மணியைச் சிவலிங்கமாக அமைத்து வழிபட்டார். ஆதலின் இங்குள்ள இறைவனுக்கு மாணிக்கவண்ணர் (மாணிக்கலிங்கர்) என்று பெயர் வழங்கும். இத்தலத்திற்கு வன்மீகபுரம், துர்க்காபுரம், அரதனபுரம் என்னும் பல பெயர்கள் தலபுராணத்தில் வழங்கும். பிரமன் இந்திரன் துருவாசர் துர்க்கை ஆகியோர் இங்கு இறைவனே வழிபட்டு அருள்பெற்றனர். அறநிலேய ஆட்சித் துறையினரால் நியமிக்கப் பெறும் அறங்காவலர் குழுவினரும், ஒரு செயல் அலுவலரும் இக்கோயிலேக் கண்காணித்து வருகின்றனர். இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் எழுந்தருளி, தேவாரத் திருப்பதிகங்கள் அருளிச் செய்துள்ளனர்.

பொடியுடை மார்பினர் போர்விடையேறிப்
பூதகணம் புடைசூழக் .
கொடியுடை ஊர்திரிந்து ஐயம்கொண்டு
பலபல கூறி,
வடிவுடை வாள்நெடுங் கண் உமை
பாகம் ஆயவன் வாழ்கொளிபுத்தூர்க்
கடிகமழ் மாமலரிட்டுக் கறைமிடற்றான்
அடி காண்பாம். (1)

சாகை ஆயிரம் உடையார்
சாமமும் ஓதுவதுடையார்
ஈகையார் கடைநோக்கி
இரப்பதும் பலபல உடையார்
தோகைமா மயில் அனைய
துடியிடை பாகமும் உடையார்
வாகை நுண்துளிவீசும்
வாழ்கொளி புத்தூர் உளாரே. (2)

—சம்பந்தர்

திருவின் நாயகனாகிய மாலுக்கு
அருள்கள் செய்திடும் தேவர் பிரானை
உருவினானை ஒன்று அறிவொண்ணா
மூர்த்தியை விசயற்கு அருள்செய்வான்
செருவில் ஏந்தி ஓர்கேழற்பின் சென்று
செங்கண் வேடனாய் என்னொடும் வந்து
மருவினான் தனை வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தை மறந்து என்னினைக்கேனே
(3)

— சுந்தரர்

**கோனேரிராசபுரம்:**

இது திருவிடைமருதூரிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ளது. அப்பர் சம்பந்தர் தேவாரப் பாடல்களில், இத்தலம் திருநல்லம் என வழங்கப் பெற்றுள்ளது. 1961-ஆம் ஆண்டின் குடிமக்கள் கணக்கின்படி சுமார் 3,500 பேர் இங்கு வசிக்கின்றனர். இங்குள்ள சுவாமியின் பெயர் உமாமகேசுவரர். அம்பிகை மங்களநாயகி. கோயிலினாலேயே ஊருக்குப் புகழும் சிறப்பும் ஏற்பட்டுள்ளது. சோழர் காலத்தைச் சேர்ந்த இக் கோயிலைச் செம்பியன் மாதேவியார் என்னும் சோழப் பேரரசி, தமது கணவராகிய கண்டராதித்த சோழர் இங்குத் துஞ்சியதன் நினைவாகச் சிறப்புற எடுப்பித்தார். கருவறையைச் சார்ந்துள்ள தெற்குச் சுவரில் கண்டராதித்த சோழர், செம்பியன் மாதேவியார் திருவுருவச் சிற்பங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன.

இக்கோயிலில் இரண்டு பிராகாரங்களும், இரண்டு கருவறைகளும், ஓர் அர்த்த மண்டபமும், ஓர் மகா மண்டபமும் உள்ளன. அருள்திரு உமாமகேசுவரர் என்னும் மூலவர், கிழக்கு நோக்கிச் சிவலிங்க வடிவில் அமைந்து திகழ்கின்றார். கிழக்குப் புறச் சுவர்களில் அழகிய மகரதோரணம் அமைந்துள்ளது. கஜலட்சுமி, தட்சிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், பிரமதேவர், முதலிய திருவுருவங்கள் அழகுற அமைக்கப்பெற்றுள்ளன. அர்த்த மண்டபத்தின் தென்சுவரில் அகத்தியர், விநாயகர், நடராசர் சிற்பங்களும், வடபக்கச் சுவரில் பிட்சாடனர், துர்க்கை, அர்த்தநாரீசுவரர் திருவுருவச் சிற்பங்களும் அழகுற அமைக்கப்பட்டிருக்கின்றன. மூலவர் சந்நிதியின் மேலுள்ள விமானமானது பிற்காலத்தில் கட்டப்பெற்றதாகத் தெரிகின்றது. அஃது எண்கோண வடிவில் அமைந்திருக்கின்றது. கோயிலின் முன்புள்ள முக மண்டபம் சுமார் 38க்கு 33 அடிப் பரப்பு உடையதாக விளங்குகிறது.

மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டுக்கள் இம் முகமண்டபத்தினைப் புகழாபரணன் மண்டபம் என்று குறிப்பிடுகின்றது. இக் கோயில் பண்டைக் காலச் சோழப் பேரரசர்களின் சிறந்த நினைவுச் சின்னங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. சோழப் பேரரசத் தம்பதிகள் ஆகிய கண்டராதித்தர், செம்பியன் மாதேவியார் திருவுருவச் சிற்பங்கள், ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டனவாக இருந்தும், இன்றளவும் மிக்க பொலிவுற்று வனப்பு மிக்குத் திகழ்கின்றன. இக்கோயிலில் நடராசர், கலியாண சுந்தரர் முதலிய அழகு மிக்க வெண்கலப் படிமங்கள் விளங்குகின்றன. தமிழகத்திலுள்ள அழகிய நடராசர் திருவுருவங்களில், கோனேரிராசபுரம் நடராசத் திருவுருவமும், அழகிற் சிறந்த ஒன்றாகப் புகழ்ந்து போற்றப்படுகிறது. இங்குள்ள அழகிய வெண்கலப் படிமங்கள் பலவும் 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை ; 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. பரம்பரை உரிமையில்லாத அர்ச்சகர்களால் நாள்தோறும் ஆறுகால பூசை நிகழ்கிறது. பொன் வெள்ளிகளால் ஆன பழைமையான அணிகலன்கள் பல உள்ளன. அவற்றின் மதிப்பு சுமார் ரூபாய் 30,000 இருக்கும். நன்செய் நிலங்கள் 32.77 ஏக்கர்களும், புன்செய் நிலங்கள் 7.62 ஏக்கர் நிலங்களும், மற்றும் சில காலி மனைகளும் கோயிலுக்கு உரியனவாக உள்ளன. அவைகளின் மூலம் ரூபாய் 6,000 வருவாய் கிடைக்கின்றது. சிறப்பும் வனப்பும் மிக்க 21 வாகனங்கள் உள்ளன. அவைகள் மிகவும் நல்ல முறையில் போற்றிப் பாதுகாக்கப்படுகின்றன. வைகாசிப் பெருவிழா, ஆடிப்பூரம், நவராத்திரி, முருகன் அறுநாட் பெருவிழா, கார்த்திகை விளக்கீடு, திருவாதிரை, மாசிச் சிவராத்திரி முதலிய விழாக்கள் இங்கு நடைபெறுகின்றன. இவைகளில் வைகாசிப் பெருவிழா, மிகவும் முதன்மை வாய்ந்தது. அறநிலையத்துறையினரால் நியமிக்கப்பெறும் ஓர் அறங்காவலரின் பொறுப்பில் இக்கோயில் நடைபெற்று வருகின்றது.

கல்லால் நிழல்மேய கறைசேர்கண்டா என்று
எல்லா மொழியாலும் இமையோர் தொழுதேத்த
வில்லால் அரண்மூன்றும் வெந்து விழ எய்த
நல்லான் நமையாள்வான் நல்ல நகரானே. (1)

நலமார் மறையோர் வாழ் நல்லநகர் மேய
கொலைசேர் மழுவானைக் கொச்சையமர்ந்தோங்கு
தலமார் தமிழ்ஞானசம்பந்தன் சொன்ன
கலைகள் இவைவல்லார் கவலை கழிவாரே. (2)

—சம்பந்தர்

கொல்லத்தான் நமனார் தமர் வந்தக்கால்
இல்லத்தார் செய்யலாவதென் ஏழைகாள்
நல்லத்தான் நமையாளுடையான் கடல்
சொல்லத்தான் வல்லீரேல் துயர் தீருமே. (3)

தமக்கு நல்லது தம் உயிர் போயினும்
இமைக்கும் போதும் இராது இக்குரம்பைதான்
உமைக்கு நல்லவன்தான் உறையும்பதி
நமக்கு நல்லது நல்லம் அடைவதே (4)

உரை தளர்ந்து உடலார் நடுங்காமுனம்
நரைவிடை உடையானிடம் நல்லமே
பரவுமின் பணிமின் பணிவாரொடே
விரவுமின் விரவாரை விடுமினே. (5)

அல்லல் ஆக ஐம்பூதங்கள் ஆட்டினும்
வல்லவாறு சிவாயநம என்று
நல்லம் மேவிய நாதன் அடிதொழ
வெல்லவந்த வினைப்பகை வீடுமே (6)

—அப்பர்.

**திருக்குறுக்கை:**

இத்தலம் மாயூரத்தினின்று வடமேற்கே 8 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குள்ள பழைமை மிக்க கோயில் வீரட்டேசுவரர் (யோகீசுவரர்) கோயில் என வழங்கப்படுகின்றது. சென்னை—திருச்சி இருப்புப் பாதையில், நீடூர் நிலையத்துக்கு வடமேற்கில் 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கோயிலின் முன்புள்ள சூல தீர்த்தம் என்னும் திருக்குளம், கங்கையினும் புனிதமாகக் கருதப்படுகின்றது. இங்குச் சுமார் 1,800 மக்கள் வாழ்கின்றனர்.

தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலங்களுள் ஒன்றாகிய திருக்குறுக்கைக் கோயில் 2.5 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. தருமபுர ஆதீனம் 25-ஆம் குரு முதல்வர் கயிலைக்குருமணி திருவார்திரு சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் இக்கோயிலுக்குச் சிறந்த முறையில் திருப்பணி செய்து, 1959-ஆம் ஆண்டில் திருக்குடமுழுக்கு விழாச் செய்தருளினார்கள். ஓர் அழகிய கோபுரமும், இரண்டு பிராகாரங்களும், இரண்டு கருவறைகளும், இரண்டு அழகிய விமானங்களும் கொண்டதாக இக்கோயில் சிறப்புறத் திகழ்கின்றது. மூலவராகிய அருட்டிருவீரட்டேசுவரர், தானே தோன்றியவர் (சுயம்பு மூர்த்தி). இவ் இலிங்கத்தின் சிறப்பு யாதெனின், இதன் உச்சியில் தாமரை போன்ற ஓர் அழகிய அமைப்பு காணப்படுவதாகும். இத்தகைய ஒரு சிறப்பு அமைப்பு வேறெங்கும் காணப்படுவதாகத் தெரியவில்லை.

இக்கோயிலில் நாடோறும் நான்கு வேளை பூசை நிகழ்கின்றது. பரம்பரை அந்தணர்கள் பூசித்து வருகின்றனர். ரூ. 23,000/- மதிப்புள்ள பொன், வெள்ளி அணிகலன்கள் உள்ளன. இத்தலத்தில் சுவாமியின் நாகாபரணமும், அம்பாளின் வெள்ளிக் கவசமும் குறிப்பிடத்தக்கன. 264 ஏக்கர் நன்செய், புன்செய் நிலங்கள் உள்ளன. இவற்றின் மூலம் ரூ. 24,000/- வருவாய் கிடைக்கின்றது. இதனால் நித்திய நைமித்திக பூசைகள் நடைபெறுகின்றன. இடபம், மயில், அன்னம், பெருச்சாளி, கிளி முதலிய வாகனங்கள் மரத்தால் செய்யப்பட்டவை உள்ளன. யோக தட்சிணாமூர்த்தியாக வீற்றிருந்த சிவபெருமான் காமதகனம் செய்த இடமாக இத்தலம் பெரிதும் போற்றப்பட்டு வருகின்றது.

"நீற்றினை நிறையப் பூசி
நித்தலும் நியமஞ் செய்து
ஆற்றுநீர் பூரித்தாட்டும்
அந்தண னாரைக்கொல்வான்
சாற்றுநாள் அற்றதென்று
தருமராசற்காய்வந்த
கூற்றினைக்குமைப்பர் போலும்
குறுக்கை வீரட்டனாரே. (1)

தழைத்ததோர் ஆத்தியின் கீழ்த்
தாபரம் மண லாற்கூப்பி
அழைத்தங்கே ஆவின் பாலைக்
கறந்துகொண் டாட்டக்கண்டு
பிழைத்ததன் தாதை தாளைப்
பெருங்கொடுமழுவால் வீசக்
குழைத்ததோர் அமுதம் ஈந்தார்
குறுக்கை வீரட்டனாரே. (2)

சிலந்தியும் ஆனைக்காவில்
திருநிழற்பந்தர் செய்து
உலந்தவண் இறந்த போதே
கோச்செங்கணானுமாகக்
கலந்தநீர்க் காவிரி சூழ்
சோணாட்டுச் சோழர்தங்கள்
குலந்தனில் பிறப்பித்திட்டார்
குறுக்கை வீரட்டனாரே (3)

ஏறுடன் ஏழ் அடர்த்தான்
எண்ணி ஆயிரம் பூக்கொண்டு
ஆறுடைச்சடையினானை
அர்ச்சித்தான் அடியிணைக்கீழ்
வேறும் ஓர்பூக்குறைய
மெய்ம்மலர்க் கண்ணை ஈண்டக்
கூறும் ஓர் ஆழி ஈந்தார்.
குறுக்கை வீரட்டனாரே (4)

கல்லினால் எறிந்து கஞ்சி
தாம் உணும் சாக்கியனார்
நெல்லினால் சோறுணாமே
நீள்விசும்பு ஆள வைத்தார்
எல்லியாங்கு எரிகை ஏந்தி
எழில் திகழ் நட்டம் ஆடிக்
கொல்லியாம் பண் உகந்தார்
குறுக்கை வீரட்டனாரே. (5)

காப்பதோர் வில்லும் அம்பும்
கையதோர் இறைச்சிப் பாரம்
தோற்பெரும் செருப்புத்தொட்டுத்
தூயவாய்க் கலசம் ஆட்டித்
தீப்பெரும் கண்கள் செய்ய
குருதிநீர் ஒழுகத் தன்கண்
கோப்பதும் பற்றிக்கொண்டார்
குறுக்கை வீரட்டனாரே. (6)

நிறைமறைக்காடு தன்னில்
நீண்டெரி தீபம் தன்னைக்
கறைநிறத் தெலிதன் மூக்குச்
சுட்டிடக் கனன்று தூண்ட
அறைகடல் மண்ணும் விண்ணும்
அகன்றவான் உலகும் எல்லாம்
குறைவறக் கொடுப்பர் போலும்
குறுக்கை வீரட்டனாரே. (7)

அணங்குமை பாகமாக
அடக்கிய ஆதிமூர்த்தி
வணங்குவார் இடர்கள் தீர்க்கும்
மருந்து நல் அருந்தவத்த
கணம்புல்லர்க்கு அருள்கள் செய்து
காதலாம் அடியார்க்கு என்றும்
குணங்களைக் கொடுப்பர் போலும்
குறுக்கை வீரட்டனாரே (8)

ஆத்தமாம் அயனும் மாலும்,
அன்றிமற்றொழிந்த தேவர்
சோத்தம் எம்பெருமான் என்று
தொழுது தோத்திரங்கள் சொல்ல
தீர்த்தமாம் அட்டமி முன்
சீருடை ஏழுநாளும்
கூத்தராய் வீதி போந்தார்
குறுக்கை வீரட்டனாரே.'' (9)

—அப்பர்.

என்பன போன்ற பல அழகிய திருநேரிசைப் பாடல்களால் திருநாவுக்கரசர் பெருமான் இத் தலத்தினைப் புகழ்ந்து போற்றியுள்ளார்.

இக்கோயிலில் நவராத்திரி, விநாயகர் சதுர்த்தி, சிவராத்திரி முதலிய விழாக்கள் ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்படு கின்றன. காமதகன விழா, மாசி மக உற்சவத் தில் மிகவும் சிறப்பாகக் நடத்தப் பெறுகின்றது. தீர்க்கபாகு (நீண்ட கைகளை உடையவர்) என்னும் முனிவரின் கைகள், இங்குள்ள சூல தீர்த்தத்தின் மகிமையினால் குறுகிய கைகள் ஆயின. ஆதலின் இதற்குக் ''குறுக்கை'' எனப் பெயர் அமைந்தது என்பது, தலவரலாறு.

இக்கோயிலில் முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1070), முதலாம் விக்கிரம சோழன் (கி.பி. 1118-1120), இரண்டாம் இராச ராசன் (கி.பி. 1146-1163), இரண்டாம் இராசாதி ராசன் (கி.பி. 11.63-1178), மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1178-1218), மூன்றாம் இராசராசன் (கி.பி. 1218-1256). புக்கராயர் (கி.பி. 1344-1377), கிருஷ்ணதேவராயர் (கி.பி 1509-1529) ஆகிய அரசர்களின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

கல்வெட்டுக்களில் இவ்வூர், ''விருதராஜ பயங்கரவளநாட்டுக் குறுக்கை நாட்டு விக்கிரம சோழச் சதுர்வேதி மங்கலம் ஆகிய குறுக்கை'' என வழங்கப் பெறுகின்றது. இக்கல்வெட்டுக்கள் பலவும், கோயிலுக்கு வழங்கிய நிலதானங்களைப் பற்றியனவாகவே உள்ளன. மூன்றாம் குலோத் துங்கனின் 29-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று, திருப்பள்ளியறைப் பூசைக்கால ஊழியர் களுக்கு ஊதியமாக அளிக்கப்படும் நெல்லின் அளவை வரையறை செய்கின்றது. மற்றும் ''திருநாவுக்கரசர் திருக்குகை'' என்னும் ஒரு மடம் அமைத்து, அதில் வைகாசித் திரு நாளுக்கு வரும் திக்கற்ற அபூர்விகளுக்கும் மாகேசுவரர்களுக்கும் உணவு அளிப்பதற்கு நில தானம் வழங்கிய செய்தியும், திருத்தாண்டகம் ஓதப்பெற்ற செய்தியும் ஒரு கல்வெட்டில் குறிக்கப் பெற்றுள்ளன.

இரண்டாம் இராசராசனின் ஒன்பதாம் ஆட்சியாண்டின் கல்வெட்டு ஒன்றில், கோயில் ஊழியர்கள் பற்றிய விவரங்கள் தரப்பட்டிருக் கின்றன. மூன்றாம் குலோத்துங்கனின் கல் வெட்டு ஒன்று, இங்குத் ''திருஞானசம்பந்தர் குகை'' என்னும் மடம் ஒன்று இருந்துவந்ததனை அறிவிக்கின்றது. பெரிய அகப்பரிவாரத்தைச் சேர்ந்த அரையன் உமையாள்வி என்னும் அம் மையார், திருச்சாமுண்டீசுவரம் உடையார், திருப்பள்ளியறை நாச்சியார், ஆட்கொண்ட நாயகதேவர் திருவுருவங்களைக் குறுக்கை நாட் டுப் பனையூர்க் கோவிலில் எழுந்தருளச் செய்த தனை, ஒரு கல்வெட்டு அறிவிக்கின்றது.

இக்கோயில், திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தின் 26-ஆம் குருமகாசந்நி தானம் சீலத்திரு சண்முகதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் அருளாட்சியின் கீழ் நன்கினிது செம்மையுறப் புரந்து போற்றப்பட்டு வருகிறது.

—ஆசிரியர்.

—தொடரும்

# திவ்வியப் பிரபந்தச் செழுங்கனிகள்

## காப்பு

### குறள் வெண்செந்துறை

''பல்லாண்டு பல்லாண்டு பல்லாயி ரத்தாண்டு,
பல்கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
செவ்வடி-செவ்விதிருக் காப்பு (1)

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

அடியோ மோடும்நின் னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு,
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு,
வடிவார் சோதிவ லத்துறை யும்சுட
ராழியும் பல்லாண்டு,
படைபோர் புக்குமு ழங்கும்அப் பாஞ்ச
சன்னியமும் பல்லாண்டே. (2)

''அல்வழக் கொன்றுமில் லாஅணி கோட்டியர்
கோன்,அபி மானதுங்கன்,
செல்வனைப் போலத் திருமா லே! நானும்
உனக்குப் பழவடியேன்,
நல்வகை யால்நமோ நாரா யணவென்று
நாமம் பலபரவிப்,
பல்வகை யாலும் பவித்திர னே! உன்னைப்
பல்லாண்டு கூறுவனே. (3)

''பல்லாண் டென்று பவித்திர னைப்பர
மேட்டியைச், சார்ங்கமென்னும்
வில்லாண் டான்தன்னை வில்லிப்புத் தூர்விட்டு
சித்தன் விரும்பியசொல்,
நல்லாண் டென்று நவின்றுரைப் பார்நமோ
நாராய ணயவென்று,
பல்லாண் டும்பர மாத்மனைச் சூழ்ந்திருந்
தேத்துவர் பல்லாண்டே. (4)

''நாஅகாரியம் சொல்லிலாதவர்
நாடொறும்விருந் தோம்புவார்,
தேவகாரியம் செய்துவேதம்
பயின்றுவாழ்திருக் கோட்டியூர்,
மூவர்காரிய மும்திருத்தும்
முதல்வ னைச்சிந்தி யாத,அப்
பாவகாரிக ளைப்படைத்தவன்
எங்ஙனம்படைத் தான்கொலோ! (5)

பூதமைந்தொடு வேள்வியைந்து
புலன்களைந்து பொறிகளால்,
ஏதமொன்றுமி லாதவண்மையி
னார்கள்வாழ்திருக் கோட்டியூர்,
நாதனைநர சிங்கனைநவின்
றேத்துவார்க ளுழக்கிய,
பாததூளி படுதலால்இவ்
வுலகம்பாக்கியம் செய்ததே. (6)

காசின்வாய்க்கரம் விற்கிலும்கர
வாதுமாற்றிலி சோறிட்டு,
தேசவார்த்தை படைக்கும்வண்கையி
னார்கள்பாழ்திருக் கோட்டியூர்
கேசவா! புரு டோத்தமா! கிளர்
சோதியாய்! குற ளாவென்று,
பேசுவாரடி யார்கள்எந்தம்மை
விற்கவும் பெறுவார்களே. (7)

''ஆசை வாய்ச்சென்ற சிந்தைய ராகி
அன்னை யத்தனென் புத்திரர் பூமி,
வாச வார்குழ லாளென்று மயங்கி
மாளு மெல்லைக்கண் வாய்திற வாதே,
கேச வாபுரு டோத்தமா என்றும்
கேழ லாகிய கேடிலீ யென்றும்,
பேசு வாரவ ரெய்தும் பெருமை
பேசு வான்புகில் நம்பர மன்றே. (8)

சோர்வி னல்பொருள் வைத்ததுண் டாகில்
சொல்லு சொல்லென்று சுற்று மிருந்து,
ஆர்வி னவிலும் வாய்திற வாதே
அந்த கால மடைவதன் முன்னம்,
மார்வ மென்பதோர் கோயி லமைத்து
மாதவ னென்னும் தெய்வத்தை நாட்டி,
ஆர்வ மென்பதோர் பூவிட வல்லார்க்கு
அரவ தண்டத்தி லுய்யலு மாமே. (9)

மேலெ ழுந்ததோர் வாயுக் கிளர்ந்து
மேல்மி டற்றினை யுள்ளெழ வாங்கிக்,
காலும் கையும் விதிர்விதிர்த் தேறிக்
கண்ணு றக்கம தாவதன் முன்னம்,
மூல மாகிய ஒற்றை யெழுத்தை
மூன்று மாத்திரை யுள்ளெழ வாங்கி,
வேலை வண்ணனை மேவுதி ராகில்
விண்ண கத்தினில் மேவலு மாமே. (10)

''தன்னடியார் திறத்தகத்துத் தாமரையா
ளாகிலும் சிதகு ரைக்குமேல்,
என்னடியா ரதுசெய்யார் செய்தாரேல்
நன்றுசெய்தா ரென்பர் போலும்,
மன்னுடைய விபீடணற்காய் மதிலிலங்கைத்
திசைநோக்கி மலர்க்கண் வைத்த,
என்னுடைய திருவரங்கற் கன்றியும்
மற்றொருவர்க் காளா வாரே? (11)

''துப்புடை யாரை யடைவ தெல்லாம்
சோர்விடத் துத்துணை யாவ ரென்றே,
ஒப்பிலே னாகிலும் நின்ன டைந்தேன்
ஆனைக்கு நீயருள் செய்த மையால்,
எய்ப்பென்னை வந்து நலியும் போதங்
கேதும்நா னுன்னை நினைக்க மாட்டேன்,
அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன்
அரங்கத் தரவணைப் பள்ளி யானே! (12)

வாக்குத் தூய்மை யிலாமையி னாலே
மாத வா! உன்னை வாய்க்கொள்ள மாட்டேன்,
நாக்கு நின்னையல் லாலறி யாது
நான தஞ்சுவ னென்வச மன்று,
மூர்க்குப் பேசுகின் றானிவ னென்று
முனிவா யேலுமென் நாவினுக் காற்றேன்.
காக்கை வாயிலும் கட்டுரை கொள்வர்
கார ணாகரு ளக்கொடி யானே! (13)

சழக்கு நாக்கொடு புன்கவி சொன்னேன்
சங்கு சக்கர மேந்துகை யானே,
பிழைப்ப ராகிலும் தம்மடி யார்சொல்
பொறுப்ப துபெரி யோர்கட னன்றே,
விழிக்குங் கண்ணிலேன் நின்கண்மற் றல்லால்
வேறொ ருவரோ டென்மனம் பற்றாது,
உழைக்கோர் புள்ளி மிகையன்று கண்டாய்
ஊழி யேழுல குண்டுமிழ்ந் தானே! (14)

கண்ணு! நான்முக னைப்படைத் தானே!
கார ணு! கரி யாய்! அடி யேன்நான்,
உண்ணு நாள்பசி யாவதொன் றில்லை
ஓவா தே'நமோ நாரணு!' என்று,
எண்ணு நாளும் இருக்கெசுச் சாம
வேத நாண்மலர் கொண்டுன பாதம்
நண்ணு நாள், அவை தத்துறு மாகில்
அன்று எனக்கவை பட்டினி நாளே. (15)

வெள்ளை வெள்ளத்தின் மேலொரு பாம்பை
மெத்தை யாகவிரித்து, அதன் மேலே
கள்ள நித்திரை கொள்கின்ற மார்க்கம்
காண லாங்கொலென் றுசையி னுலே,
உள்ளஞ் சோர வுகந்தெதிர் விம்மி
உரோம கூபங்க ளாய், கண்ண நீர்கள்
துள்ளம் சோரத் துயிலணை கொள்ளேன்
சொல்லாய் யானுன்னைத் தத்துறு மாறே. (16)

''உனக்குப் பணிசெய் திருக்கும்
தவமுடை யேனினிப் போயொருவன்—
றனக்குப் பணிந்து, கடைத்தலை
நிற்கைநின் சாயை யழிவுகண்டாய்,
புனத்தினைக் கிள்ளிப் புதுஅவி
காட்டியுன் பொன்னடி வாழ்கவென்று,
இனக்குற வர்புதிய துண்ணும்
எழில்மாலிருஞ் சோலை எந்தாய்! (17)

பறவையேறு பரமபுருடா!
நீயென்னைக் கைக்கொண்டபின்,
பிறவியென்னும் கடலும்வற்றிப்
பெரும்பத மாகின்றதால்,
இறவுசெய்யும் பாவக்காடு
தீக்கொளீஇ வேகின்றதால்,
அறிவையென்னு மமுதஆறு
தலைப்பற்றி வாய்க்கொண்டதே. (18)

''மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னுளால்,
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்,
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்,
கூர்வேற் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்,
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்,
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்,
நாராயணனே நமக்கே பறைதருவான்,
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய். (19)

''இருளிரியச் சுடர்மணிக ளிமைக்கும் நெற்றி
இனத்துத்தி யணிபணமா யிரங்க ளார்ந்த,
அரவரசப் பெருஞ்சோதி யனந்த னென்னும்
அணிவிளங்கு முயர்வெள்ளை யணையை மேவித்,
திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையா லடிவருடப் பள்ளி கொள்ளும்,
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டுஎன்
கண்ணிணைக ளென்றுகொலோ களிக்கும் நாளே! (20)

மறந்திகழும் மனமொழித்து வஞ்சம் மாற்றி
ஐம்புலன்க ளடக்கியிடர்ப் பாரத் துன்பம்
துறந்து, இருமுப் பொழுதேத்தி யெல்லை யில்லாத்
தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்ட ரான
அறம்திகழும் மனத்தவர்தம் கதியைப் பொன்னி
அணியரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்,
நிறம்திகழும் மாயோனைக் கண்டென் கண்கள்
நீர்மல்க என்றுகொலோ நிற்கும் நாளே! (21)

''தேட்டரும்திறல் தேனினைத்தென்
னரங்கனை, திரு மாதுவாழ்
வாட்டமில்வன மாலைமார்வனை
வாழ்த்திமால்கொள்சிந் தையராய்,
ஆட்டமேவி யலந்தழைத்தயர்
வெய்தும்மெய்யடி யார்கள்தம்,
ஈட்டம்கண்டிடக் கூடுமேலது
காணும்கண்பய னுவதே. (22)

தோடுலாமலர் மங்கைதோளிணை
தோய்ந்ததும்சுடர் வாளியால்
நீடுமாமரம் செற்றதும்நிரை
மேய்த்ததுமிவை யேநினைந்து,
ஆடிப்பாடி அரங்கவோஎன்று
அழைக்கும்தொண்ட ரடிப்பொடி
ஆடநாம்பெறில், கங்கைநீர்குடைந்
தாடும்வேட்கையென் னுவதே. (23)

''மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும், இவ்
வையந் தன்னொடும் கூடுவ தில்லையான்,
'ஐய னே! அரங் கா!' என்ற ழைக்கின்றேன்,
மையல் கொண்டொழிந் தேனென்றன் மாலுக்கே. (24)

பேய ரேயெனக் கியாவரும், யானுமோர்
பேய னேயெவர்க் கும்இது பேசியென்,
'ஆய னே! அரங் கா!' என்ற ழைக்கின்றேன்,
பேய னுயொழிந் தேனெம்பி ரானுக்கே. (25)

''ஊனேறு செல்வத் துடற்பிறவி யான்வேண்டேன்,
ஆனேறேழ் வென்ரு னடிமைத் திறமல்லால்,
கூனேறு சங்க மிடத்தான்தன் வேங்கடத்துக்
கோனேரி வாழும்குருகாய்ப் பிறப்பேனே. (26)

ஆனுத செல்வத் தரம்பையர்கள் தற்சூழ,
வானுளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்,
தேனுர்பூஞ் சோலைத் திருவேங்க டச்சுனையில்,
மீனுய்ப் பிறக்கும் விதியுடையே னுவேனே. (27)

''செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே,
நெடியானே! வேங்கடவா! நின்கோயி லின்வாசல்,
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்,
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே. (28)

''தருதுயரம் தடாயேலுன் சரணல்லால் சரணில்லை,
விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் வித்துவக் கோட் டம்மானே,
அரிசினத்தா லீன்றதாய் அகற்றிடினும், மற்றவள்தன்
அருள்நினைந்தே யழும்குழவி அதுவேபோன் றிருந்தேனே. (29)

கண்டார் இகழ்வனவே காதலன்றுன் செய்திடினும்,
கொண்டானை யல்லா[1] லறியாக் குலமகள்போல்,
விண்டோய்ம தில்புடைசூழ் வித்துவக்கோட் டம்மா, நீ
கொண்டாளா யாகிலுமுன் குரைகழலே கூறுவனே. (30)

வாளா லறுத்துச்சு டினும் மருத்துவன்பால்,
மாளாத காதல்நோ யாளன்போல், மாயத்தால்
மீளாத்து யர்தரினும் வித்துவக்கோட் டம்மா, நீ
ஆளாவு னதருளே பார்ப்பன் அடியேனே. (31)

வெங்கண்திண் களிறடர்த்தாய் வித்துவக்கோட் டம்மானே,
எங்குப்போ யுய்கேனுன் னிணையடியே யடையலல்லால்,
எங்கும்போய்க் கரைகாணு தெறிகடல்வாய் மீண்டேயும்,
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே. (32)

தூய்மையோக மாயினுய்து மூயலங்கல் மாலையாய்,
ஆமையாகி யாழ்கடல்து யின்றஆதி தேவ, நின்
நாமதேய மின்னதென்ன வல்லமல்ல மாகிலும்,
சாம வேத கீதனுய சக்ரபாணி யல்லையே? (33)

நின்றதெந்தை யூரகத்து இருந்ததெந்தை பாடகத்து,
அன்றுவெஃக ணைக்கிடந்த தென்னிலாத முன்னெலாம்,
அன்று—நான்பி றந்திலேன்பி றந்தபின்ம றந்திலேன்
நின்றதும் மிருந்ததும்கி டந்ததும்மென் நெஞ்சுளே. (34)

ஊனில்மேய ஆவிநீ உறக்கமோடு ணர்ச்சிநீ,
ஆனில்மேய ஐந்தும்நீஅ வற்றுள்நின்ற தூய்மைநீ,
வானினோடு மண்ணும்நீ வளங்கடற்ப யனும்நீ,
யானும்நீய தன்றியெம்பி ரானும்நீயி ராமனே! (35)

வைதுநின்னை வல்லவாப ழித்தவர்க்கும் மாறில்போர்,
செய்துநின்னை செற்றத்தீயில் வெந்தவர்க்கும் வந்துனை,
எய்தலாகு மென்பராத லாலெம்மாய! நாயினேன்,
செய்தகுற்றம் நற்றமாக வேகொள்ஞால நாதனே! (36)

''காவலிற் புலனை வைத்துக்
கலிதனைக் கடக்கப் பாய்ந்து,
நாவலிட் டுழிதரு கின்றோம்
நமன்தமர் தலைகள் மீதே,
மூவுல குண்டு மிழ்ந்த
முதல்வ! நின் நாமம் கற்ற,
ஆவலிப் புடைமை கண்டாய்
அரங்கமா நகரு ளானே! (37)

''பச்சைமா மலைபோல் மேனிப்
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமர ரேறே!
ஆயர்தம் கொழுந்தே!'' என்னும்,
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்,
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே! (38)

---

1. ''கொண்டானையல்லதறியா'' என்பதும் பாடம்.

வேதநூற் பிராயம் நூறு
மனிசர்தாம் புகுவ ரேலும்,
பாதியு முறங்கிப் போகும்
நின்றதில் பதினை யாண்டு,
பேதைபா லகன தாகும்
பிணிபசி மூப்புத் துன்பம்,
ஆதலால் பிறவி வேண்டேன்
அரங்கமா நகரு ளானே! (39)

குடதிசை முடியை வைத்துக்
குணதிசை பாதம் நீட்டி,
வடதிசை பின்பு காட்டித்
தென்திசை இலங்கை நோக்கிக்,
கடல்நிறக் கடவு ளெந்தை
அரவணைத் துயிலு மாகண்டு,
உடலெனக் குருகு மாலோ
என்செய்கே னுலகத் தீரே! (40)

ஊரிலேன் காணி யில்லை
உறவுமற் றொருவ ரில்லை,
பாரில்நின் பாத மூலம்
பற்றிலேன் பரம மூர்த்தி,
காரொளி வண்ண னே!ஓ
கண்ணனே! கதறு கின்றேன்,
ஆருளர் களைக ணம்மா!
அரங்கமா நகரு ளானே! (41)

உள்ளத்தே யுறையும் மாலை
உள்ளுவா னுணர்வொன் றில்லாக்,
கள்ளத்தேன் நானும் தொண்டாய்த்
தொண்டுக்கே கோலம் பூண்டேன்,
உள்ளுவா ருள்ளிற் றெல்லாம்
உடனிருந் தறிதி யென்று,
வெள்கிப்போ யென்னுள் ளேநான்
விலவறச் சிரித்திட் டேனே! (42)

''பழுதிலா வொழுக லாற்றுப்
பலசதுப் பேதி மார்கள்,
இழிகுலத் தவர்க ளேலும்
எம்மடி யார்க ளாகில்,
தொழுமின்நீர் கொடுமின் கொள்மின்!''
என்றுநின் னோடு மொக்க,
வழிபட அருவி னாய்போன்ம்
மதிள்திரு வரங்கத் தானே! (43)

கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்
கனஇரு ளகன்றது காலையம் பொழுதாய்,
மதுவிரிந் தொழுகின மாமல ரெல்லாம்
வானவ ரரசர்கள் வந்துவந் தீண்டி,
எதிர்திசை நிறைந்தன ரிவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்,
அதிர்தலில் அலைகடல் போன்றுள தெங்கும்
அரங்கத்தம் மா!பள்ளி யெழுந்தரு ளாயே. (44)

அமல னாதிபிரா னடியார்க் கென்னை யாட்படுத்த
விமலன், விண்ணவர் கோன்விரை யார்பொழில் வேங்கடவன்,
நிமலன், நின்மலன் நீதி வானவன் நீள்மதி ளரங்கத் தம்மான்,திருக்
கமல பாதம்வந் தென்கண்ணி னுள்ளன வொக்கின்றதே. (45)

கண்ணி நுண்சிறுத் தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணி யபெரு மாயன்,என் னப்பனில்,
நண்ணித் தென்குரு கூர்நம்பி யென்றக்கால்,
அண்ணிக் கும்அமு தூறுமென் நாவுக்கே. (46)

குலந்தருஞ் செல்வந் தந்திடும் அடியார்
படுதுய ராயின வெல்லாம்,
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்,
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினு மாயின செய்யும்,
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம். (47)

சொல்லுவன் சொற்பொருள் தானவை யாய்ச்சுவை
யூறொலி நாற்றமும் தோற்றமுமாய்,
நல்லரன் நான்முகன் நாரண னுக்கிடந்
தான்தடஞ் சூழ்ந்தழ காயகச்சி,
பல்லவன் வில்லவ னென்றுல கில்பல
ராய்ப்பல வேந்தர் வணங்குகழற்
பல்லவன், மல்லையர் கோன்பணிந் தபர
மேச்சுர விண்ணக ரமதுவே. (48)

பண்டைநான் மறையும் வேள்வியும் கேள்விப்
பதங்களும் பதங்களின் பொருளும்
பிண்டமாய் விரிந்த பிறங்கொளி யனலும்
பெருகிய புனலொடு நிலனும்,
கொண்டல்மா ருதமும் குரைகட லேழும்
ஏழுமா மலைகளும் விசும்பும்,
அண்டமும் தானாய் நின்றவெம் பெருமான்
அரங்கமா நகரமர்ந் தானே. (49)

இந்திரன் பிரம னீசனென் றிவர்கள்
எண்ணில்பல் குணங்களே யியற்றத்,
தந்தையும் தாயும் மக்களும் மிக்க
சுற்றமும் சுற்றிநின் றகலாப்
பந்தமும், பந்த மறுப்பதோர் மருந்தும்
பான்மையும் பல்லுயிர்க் கெல்லாம்,
அந்தமும் வாழ்வும் ஆயவெம் பெருமான்
அரங்கமா நகரமர்ந் தானே. (50)

ஏழை ஏதலன் கீழ்மகன் என்னா
திரங்கி மற்றவற் கின்னருள் சுரந்து,
'மாழை மான்மட நோக்கியுன் தோழி;
உம்பி எம்பி'என் றொழிந்திலை,உகந்து,
'தோழ னீயெனக் கிங்கொழி', என்ற
சொற்கள் வந்தடி யேன்மனத் திருந்திட,
ஆழி வண்ண!நின் அடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! (51)

கறவா மடநாகுதன் கன்றுள்ளி னாற்போல்,
மறவா தடியே னுன்னையே யழைக்கின்றேன்,
நறவார் பொழில்சூழ் நறையூர் நின்றநம்பி,
பிறவாமை யெனைப்பணி யெந்தை பிரானே! (52)

உள்ளமோ ஒன்றில் நில்லாது
ஓசையி னெரிநின் றுண்ணும்
கொள்ளிமே லெறும்பு போலக்
குழையுமா லென்ற னுள்ளம்,
தெள்ளியீர்! தேவர்க் கெல்லாம்
தேவரா யுலகம் கொண்ட
ஒள்ளியீர், உம்மை யல்லால்
எழுமையும் துணையி லோமே. (53)

வையம் தகளியா வார்கடலே நெய்யாக,
வெய்ய கதிரோன் விளக்காகச்,—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன்சொன் மாலை,
இடராழி நீங்குகவே என்று. (54)

தெளிவாக வுள்ளத்தைச் செந்நிறீஇ, ஞானத்
தெளிவாக நன்குணர்வார் சிந்தை,—எளிதாகத்
தாய்நாடு கன்றேபோல் தண்டுழா யானடிக்கே,
போய்நாடிக் கொள்ளும் புரிந்து. (55)

குன்றனைய குற்றஞ் செயினும் குணங்கொள்ளும்
இன்று முதலாக என்னெஞ்சே,—என்றும்
புறனுரையே யாயினும் பொன்னாழிக் கையான்
திறனுரையே சிந்தித் திரு. (56)

மனமாசு தீரும் மறுவினையும் சாரா,
தனமாய தானேகை கூடும்,—புனமேய
பூந்துழா யானடிக்கே போதொடு நீரேந்தித்,
தாம்தொழா நிற்பார் தமர். (57)

தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவம் தானே,
தமருகந்த தெப்பேர்மற் றப்பேர்,—தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித் திமையா திருப்பரே,
அவ்வண்ணம் ஆழியா னாம். (58)

சென்றால் குடையாம் இருந்தால்சிங் காசனமாம்,
நின்றால் மரவடியாம் நீள்கடலுள்,—என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம், திருமாற் கரவு. (59)

அவன்தமர் எவ்வினைய ராகிலும், எங்கோன்
அவன்தமரே யென்றொழிவ தல்லால்,—நமன்தமரால்
ஆராயப் பட்டறியார் கண்டீர்,அரவணைமேல்
பேராயற் காட்பட்டார் பேர். (60)

பொன்திகழும் மேனிப் புரிசடையம் புண்ணியனும்,
நின்றுலகம் தாய நெடுமாலும்,—என்றும்
இருவரங்கத் தால்திரிவ ரேலும், ஒருவன்
ஒருவனங்கத் தென்று முளன். (61)

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக,
இன்புருகு சிந்தை யிடுதிரியா,—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு,
ஞானத் தமிழ்புரிந்த நான். (62)

யானே தவம்செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவமுடையேன் எம்பெருமான்,—யானே
இருந்தமிழ்நன் மாலை இணையடிக்கே சொன்னேன்,
பெருந்தமிழன் நல்லேன் பெரிது. (63)

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன், திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்,—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று. (64)

தேசும் திறலும் திருவும் உருவமும்,
மாசில் குடிப்பிறப்பும் மற்றவையும்—பேசில்
வலம்புரிந்த வான்சங்கம் கொண்டான்பே ரோத,
நலம்புரிந்து சென்றடையும் நன்கு. (65)

தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்,
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்,—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு,
இரண்டுருவு மொன்றாய் இசைந்து. (66)

பொருப்பிடையே நின்றும் புனல்குளித்தும், ஐந்து
நெருப்பிடையே நிற்கவும்நீர் வேண்டா,—விருப்புடைய
வெஃகாவே சேர்ந்தானை மெய்ம்மலர்தூய்க் கைதொழுதால்,
அஃகாவே தீவினைகள் ஆய்ந்து. (67)

இன்றாக நாளையே யாக, இனிச்சிறிது
நின்றாக நின்னருளென் பாலதே,—நன்றாக
நானுன்னை யன்றி இலேன்கண்டாய், நாரணனே!
நீயென்னை யன்றி யிலை. (68)

'திறம்பேன்மின் கண்டீர் திருவடிதன் நாமம்,
மறந்தும் புறந்தொழா மாந்தர்,—இறைஞ்சியும்
சாதுவராய்ப் போதுமின்கள்,' என்றான், நமனும்தன்
தூதுவரைக் கூவிச் செவிக்கு. (69)

பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கும் அழுக்குடம்பும்,
இந்நின்ற நீர்மை இனியா முறாமை,—உயிரளிப்பான்
எந்நின்ற யோனியு மாய்ப்பிறந் தாயிமை யோர்தலைவா!
மெய்ந்நின்று கேட்டரு ளாய், அடி யேன்செய்யும் விண்ணப்பமே. (70)

வணங்கும் துறைகள் பலபல ஆக்கி, மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபல ஆக்கி, அவையவைதோறு
அணங்கும் பலபல ஆக்கிநின் மூர்த்தி பரப்பிவைத்தாய்
இணங்குநின் னோரையில் லாய், நின்கண் வேட்கை எழுவிப்பனே. (71)

புவியும் இருவிசும்பும் நின்னகத்த, நீயென்
செவியின் வழிபுகுந்தென் னுள்ளாய்,—அவிவின்றி
யான்பெரியன் நீபெரியை என்பதனை யாரறிவார்,
ஊன்பருகு நேமியாய்! உள்ளு. (72)

உயர்வற வுயர்நல முடையவன் யவனவன்,
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்,
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்,
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே! (73)

திடவிசும் பெரிவளி நீர்நில மிவைமிசை,
படர்பொருள் முழுவது மாயவை யவைதொறும்,
உடல்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்,
சுடர்மிகு சுருதியு ளிவையுண்ட சுரனே. (74)

பத்துடை யடியவர்க் கெளியவன், பிறர்களுக் கரிய
வித்தகன், மலர்மகள் விரும்பும்நம் அரும்பெற லடிகள்,
மத்துறு கடைவெண்ணெய் களவினில் உரவிடை யாப்புண்டு,
எத்திறம் உரலினோ டிணைந்திருந் தேங்கிய எளிவே! (75)

நாவினுள் நின்று மலரும்
    ஞானக் கலைகளுக் கெல்லாம்
ஆவியும் ஆக்கையும் தானே
    அழிப்போ டளிப்பவன் தானே,
பூவியல் நால்தடந் தோளன்
    பொருபடை யாழிசங் கேந்தும்,
காவிநன் மேனிக் கமலக்
    கண்ணனென் கண்ணினு ளானே. (76)

ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன்,
காணலு மாகான் உளனல்லன் இல்லையல்லன்,
பேணுங்கால் பேணு முருவாகும் அல்லனுமாம்,
கோணை பெரிதுடைத்தெம் பெம்மானைக் கூறுதலே. (77)

உன்னைச் சிந்தை செய்து செய்துன் நெடுமா மொழியிசை பாடி
யாடி, என்
முன்னைத் தீவினைகள் முழுவே ரரிந்தனன்யான்,
உன்னைச் சிந்தையினா லிகழ்ந்த இரணியன் அகல்மார்வங் கீண்ட,
என்
முன்னைக் கோளரியே! முடியாத தென்னெனக்கே. (78)

மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்தடியை யடைந்துள்ளந் தேறி,
ஈறி லின்பத் திருவெள்ளம் யான்மூழ்கினன்,
பாறிப் பாறி யசுரர்தம் பல்குழாங்கள் நீறெழப், பாய்பறவை
யொன்
றேறி வீற்றிருந் தாய்! உன்னை யென்னுள் நீக்கேல் எந்தாய். (79)

தீர்த்தன் உலகளந்த சேவடிமேல் பூந்தாமம்,
சேர்த்தி யவையே சிவன்முடிமேல் தான்கண்டு,
பார்த்தன் தெளிந்தொழிந்த பைந்துழா யான்பெருமை,
பேர்த்தும் ஒருவரால் பேசக் கிடந்ததே? (80)

'எங்கும் உளன்கண்ணன்' என்றமக னைக்காய்ந்து,
'இங்கில்லை யால்' என் றிரணியன் தூண்புடைப்ப,
அங்கப் பொழுதே அவன்வீயத் தோன்றிய, என்
சிங்கப் பிரான்பெருமை யாராயும் சீர்மைத்தே? (81)

எம்மா வீட்டுத் திறமும் செப்பம், நின்
செம்மா பாதபற்புத் தலைசேர்த்து, ஒல்லை
கைம்மா துன்பம் கடிந்த பிரானே,
அம்மா! அடியேன் வேண்டுவது ஈதே. (82)

சிறப்பில் வீடு சுவர்க்கம் நரகம்,
இறப்பில் எய்துக எய்தற்க, யானும்
பிறப்பில் பல்பிற விப்பெரு மானை,
மறப்பொன் றின்றியென் றும்மகிழ் வேனே. (83)

யானே என்னை அறியகி லாதே,
யானே என்றன தேயென் றிருந்தேன்,
யானே நீயென் உடைமையும் நீயே,
வானே ஏத்துமெம் வானவ ரேறே. (84)

ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி,
வழுவிலா அடிமை செய்யவேண்டும்நாம்,
தெழிகு ரல்அரு வித்திரு வேங்கடத்து,
எழில்கொள் சோதி எந்தைதந்தை தந்தைக்கே. (85)

யாவையும் யவரும் தானாய்
    அவரவர் சமயந் தோறும்,
தோய்விலன் புலனைந் துக்கும்
    சொலப்படான் உணர்வின் மூர்த்தி,
ஆவிசேர் உயிரின் உள்ளால்
    ஆதுமோர் பற்றி லாத,
பாவனை அதனைக் கூடில்
    அவனையும் கூட லாமே. (86)

சாது சனத்தை நலியும்
    கஞ்சனைச் சாதிப்ப தற்கு,
ஆதியஞ் சோதி யுருவை
    அங்குவைத் திங்குப் பிறந்த,
வேத முதல்வனைப் பாடி
    வீதிகள் தோறும்துள் ளாதார்,
ஓதி யுணர்ந்தவர் முன்னா
    என்சவிப் பார்ம னிசரே? (87)

பயிலும் சுடரொளி மூர்த்தியைப் பங்கயக் கண்ணனைப்,
பயில இனியநம் பாற்கடல் சேர்ந்த பரமனைப்,
பயிலும் திருவுடை யார்எவ ரேலும் அவர்கண்டீர்,
பயிலும் பிறப்பிடை தோறெம்மை யாளும் பரமரே. (88)

குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந்து, எத்தனை
நலந்தா னிலாதசண் டாளசண் டாளர்க ளாகினும்,
வலந்தாங்கு சக்கரத் தண்ணல் மணிவண்ணற் காளென்றுள்
கலந்தார், அடியார் தம்மடி யாரெம் மடிகளே. (89)

வம்மின் புலவீர்! நும் மெய்வருத் திக்கைசெய் துய்ம்மினோ,
இம்மன் னுலகில் செல்வர்இப் போதில்லை நோக்கினோம்,
நும்மின் கவிகொண்டு நும்நுமிட் டாதெய்வம் ஏத்தினால்,
செம்மின் சுடர்முடி என்திரு மாலுக்குச் சேருமே. (90)

பொலிக பொலிக பொலிக!
    போயிற்று வல்லுயிர்ச் சாபம்,
நலியும் நரகமும் நைந்த,
    நமனுக்கிங் கியாதொன்று மில்லை,
கலியும் கெடும்கண்டு கொள்மின்,
    கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்,
மலியப் புகுந்திசை பாடி
    யாடி யுழிதரக் கண்டோம். (91)

கண்டோம் கண்டோம் கண்டோம்
கண்ணுக் கினியன கண்டோம்,
தொண்டீர்! எல்லீரும் வாரீர்
தொழுது தொழுதுநின் றார்த்தும்,
வண்டார் தண்ணந்து ழாயான்
மாதவன் பூதங்கள் மண்மேல்,
பண்டான் பாடிநின் றாடிப்
பரந்து திரிகின் றனவே. (92)

ஆவி திகைக்க ஐவர் குமைக்கும் சிற்றின்பம்,
பாவி யேனைப் பலநீ காட்டிப் படுப்பாயோ,
தாவி வையம் கொண்ட தடந்தா மரைகட்கே,
கூவிக் கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ? (93)

'அகல கில்லேன் இறையும்' என்
றலர்மேல் மங்கை யுறைமார்பா,
நிகரில் புகழாய்! உலகமூன்
றுடையாய்! என்னை ஆள்வானே,
நிகரில் அமரர் முனிக்கணங்கள்
விரும்பும் திருவேங் கடத்தானே,
புகலொன் றில்லா அடியேனுன்
அடிக்கீ ழமர்ந்து புகுந்தேனே. (94)

கற்பார் இராம பிரானையல் லால்மற்றும் கற்பரோ?
புற்பா முதலாப் புல்லெறும் பாதியொன் றின்றியே,
நற்பால் அயோத்தியிலே வாழும் சராசரம் முற்றவும்
நற்பாலுக் குய்த்தனன் நான்முக னார்பெற்ற நாட்டுளே. (95)

கெடுமிட ராயவெல்லாம் கேசவா வென்ன,நாளும்
கொடுவினை செய்யும்கூற் றின் தமர்களும் குறுககில்லார்,
விடமுடை யரவில்பள்ளி விரும்பினன் சுரும்பலற்றும்,
தடமுடை வயலனந்த புரநகர்ப் புகுதுமின்றே. (96)

அருள்பெறுவார் அடியார்தம் அடியனேற்கு,ஆழியான்
அருள்தருவான் அமைகின்றான் அதுநமது விதிவகையே,
இருள்தருமா ஞாலத்துள் இனிப்பிறவி யான்வேண்டேன்,
மருளொழிநீ மடநெஞ்சே! வாட்டாற்றான் அடிவணங்கே. (97)

முனியே! நான்முக னே!முக்கண் ணப்பா,என் பொல்லாக்
கனிவாய்த் தாமரைக் கட்கரு மாணிக்கமே! என்கள்வா,
தனியேன் ஆருயிரே! என்தலை மிசையாய் வந்திட்டு,
இனிநான் போகலொட் டேன்ஒன்றும் மாயம்செய் யேலென்னையே. (98)

அவாவறச் சூழ்அரியை அயனை அரனை அலற்றி,
அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன் சொன்ன,
அவாவிலந் தாதிகளால் இவையா யிரமும்,முடிந்த
அவாவிலந் தாதியிப் பத்தறிந் தார்பிறந் தார்உயர்ந்தே. (99)

இன்புற்ற சீலத் திராமா னுச,என்றும் எவ்விடத்தும்
என்புற்ற நோயுடல் தோறும் பிறந்திருந்து,எண்ணரிய
துன்புற்று வீயினும் சொல்லுவ தொன்றுண்டுன் தொண்டர்கட்கே
அன்புற்றி ருக்கும் படி,என்னை யாக்கியங் காட்படுத்தே. (100)

[அமிழ்தினும் இனிய நமது தமிழ் மொழிக்குப் பலதிறச் சிறப்புகள் உண்டு. உலக மொழிகளிலேயே பக்தியுணர்விற்கும் ஞான நலத்திற்கும், மிக்க பெருஞ் சிறப்புடையது, நமது தமிழ்மொழி! ஆழ்வார்களும், நாயன்மார்களும், அவர்தம் வழிவழி வந்த அருட்பெருஞ் சான்றோர்களும் அருளிச் செய்த பல்லாயிரக் கணக்கான பக்தி ஞானப் பண்பாட்டுப் பாடல்களைப் போல, வேறு பிற எம்மொழியிலும் காண்டல் அரிது எனத் துணிந்து கூறலாம்.

''சட்டத்தில் லத்தீனம், சால்பறத்தில் ஈப்ருவம்,
தட்பமிகு தத்துவத்தில் சம்ஸ்கிருதம்,—நுட்பமிக
ஆன்ற அறிவியலில் ஆங்கிலம் செர்மன் ஃபிரெஞ்ச்போல்
சான்றஇறை மாண்பில் தமிழ்''

என மொழியியலாராய்ச்சி யறிஞர்கள் எழிலுற விளக்குதற்கேற்ப, சட்டத்துறையில் இலத்தீன் மொழியும், சால்பறத்தில் ஈப்ரு மொழியும், தத்துவத் துறையில் சம்ஸ்கிருதமும், அறிவியல் துறையில் ஆங்கிலம் ஜெர்மன் ஃபிரெஞ்ச் மொழிகளும் போல, உயரிய பக்தி ஞான அநுபவநலத் துறையில், நம் தமிழ்மொழியானது ஒப்புயர்வற்றுத் திகழ்கின்றது. ''இங்கிலாந்து நாடு வேறுபிறிது எதனாலும் அன்றித் தனது கவிதைகளினாலேயே மிக்க புகழ்பெற்றுச் சிறந்து திகழ்கின்றது'' ("By nothing is England so glorious as by her poetry."—MATTHEW ARNOLD) என ஆங்கில அறிஞர் ஒருவர் கூறியிருப்பது, நம் தமிழகத்திற்கே பெரிதும் பொருந்தும்!

தமிழகத்தில், தமிழ்த்தாயின் இரு கண்கள் என விளங்கி வருவன, திருமால் நெறியும், சிவநெறியும் ஆகும். திருமால் நெறிக்கு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும், சிவநெறிக்குப் பன்னிரு திருமுறைகளும், தம் நிகரற்ற தெய்விகப் பனுவல்களாகத் தொன்று தொட்டுப் பெரியோர்களாற் சிறந்தெடுத்துப் பெரிதும் போற்றப்பட்டு வருகின்றன. அவையனைத்தையுமே பயின்று மகிழ்ந்து பயன் கொள்ள வேண்டுவது, நமக்குத் தலையாய பெருங் கடமை! ஆயினும், அனைவர்க்கும் அஃது இயலாது. ஆதலின், அவற்றுள் ஒரு சில விழுமிய சிறந்த கவிமணிகளையேனும் திரட்டித் தொகுத்து வைத்துக் கொண்டு, நாடோறும் ஓதி மகிழ்ந்து வருதல், அன்பர்கள் அனைவருக்கும் பெரும் பயன் விளைக்கும் என்பது திண்ணம்.

நல்ல இனிய சிறந்த கவிதைத் தொகுப்பு நூல்கள், நமக்கு விளைவிக்கும் அளப்பரிய நன்மைத் திறங்களை, மேலைநாட்டு அறிஞர்கள் சாலவும் வியந்து போற்றிப் புகழ்வர்:

"I wish that someone with taste, knowledge and discretion could be found who would make an anthology of Shakespeare's plays and poems, putting in not only the famous passages with which we should all be familar but also fragments, single lines even; so that we might have in a convenient volume, a book to which we could always turn when we wanted the cream of poetry."

—W. S. MAUGHAM.

"Indeed there can be no more useful help for discovering what poetry belongs to the class of truly excellent, and can therefore do us most good, than to have always in one's mind lines and expressions of the great masters, and to apply them as a touchstone to other poetry..."

—MATTHEW ARNOLD

"Poetry gives treasures 'more golden than gold,' leading us in higher and healthier ways than those of the world, and interpreting to us the lessons of Nature...Like the fabled fountain of the Azores, but with a more various power, the magic of this Art of poetry can confer on each period of life its appropriate blessing : on early years Experience, on maturity Calm, on age Youthfulness . . ."

—F. T. PALGRAVE.

ஆதலின், அம்முறையினைத் தழுவித் திருமால் நெறியினர்க்கு மிகவும் சிறந்த தமிழ்வேதம் எனத் திகழும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல்களினின்று, பெரியோர்கள் அடிக்கடி எடுத்துக் கையாள்வனவும், எளிய இனிய அழகிய முதன்மையான விழுமிய கவிமணிகளாக விளங்குவனவும் ஆகிய பாடல்கள் ஒரு சில மட்டும் (100), ஈண்டுத் தொகுத்துத் தரப் பெறுகின்றன. அன்பர்கள் இவற்றை நாள்தோறும் பக்தியுடன் ஓதியுணர்ந்து இன்புறுவார்களாக!

—ஆசிரியர்]

# அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில்

## வீரபாண்டி, மதுரை மாவட்டம்.

மதுரை மாவட்டம், பெரியகுளம் வட்டத்தில் தேனி-கம்பம் சாலையில் பெரியாற்றின் பக்கத்தில் பாங்குற அமைந்து விளங்குவது அன்னை கௌமாரியின் திருக்கோயிலாகும். பாண்டிய மன்னர்கள் காலத்தில் எழுப்பப் பெற்ற இக்கோவில் தற்போது புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மண்டபங்கள், திருச்சுற்றுச் சுவர்களுடன் சிறப்பாக விளங்குகின்றது.

இக்கோயிலில் ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதம் முதல் செவ்வாய்க்கிழமையில் கொடியேற்றப்பட்டு ஒரு மாத காலத்திற்குப் பெருந்திருவிழா நடைபெறுகிறது. சித்திரை நான்காவது செவ்வாய்க்கிழமை முதல் எட்டுத் தினங்கள் இக்கோவில் திருவிழாவில் சிறப்பான நாட்களாகும். அப்போது இப்பகுதியிலுள்ள பக்தர்கள் லட்சக்கணக்கில் குழுமிக் காவடி எடுப்பதும், அக்னிச்சட்டி எடுத்தலும் முடியிறக்கிக் காணிக்கை செலுத்துவதும் காண்போர்க்குக் கண்கொள்ளாக்காட்சியாகும்.

இக்கோவிலில் கோபுரத் திருப்பணிவேலையும் கும்பாபிஷேகமும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இறைப்பற்றுடைய அன்பர்கள் தாராளமாகக் காணிக்கை அளித்து அன்னை கௌமாரியின் அருளைப் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

**எம். மாணிக்கவாசகம்,** பி.எஸ்ஸி.,
நிர்வாக அதிகாரி.

அறங்காவலர் குழு.

**திரு. என் வி. இராமசாமிபிள்ளை,** தலைவர்.
**திரு. வி. கே. சுப்பிரமணியன்,** அறங்காவலர்
**திரு. சு. ந. மாரிச்சாமி பிள்ளை,** ,,
**திரு. கே. ராசப்பன்** ,,
**திரு. கே. கருப்பையா** ,,

# பஞ்சாமிர்தம்

டி.என்.சுகிசுப்பிரமணியன்

**(1) திருவடித் தாமரை**

இந்து சமயத்தில் எந்த வகைக் கடவுளை வழிபட்டாலும் "திருவடித்தாமரையைப் பற்றுக" என்று பக்தர்கள் கூறி வருகிறார்கள்.

கணபதியை வழிபட்டாலும் அவனது காலடியைப் பிடித்துக் கொள்.

முருகனை வழிபட்டாலும் அவனது திருவடித் தாமரையைப் பற்றுக.

சிவனை வழிபட்டாலும், விஷ்ணுவை வழிபட்டாலும், சூரிய பகவானை வழிபட்டாலும் லெட்சுமி, துர்க்கை, அம்பிகையை வழிபட்டாலும் திருவடியைத் தேடிக் கொள் என்றே எல்லா பக்தர்களும் ஏகோபித்துக் கூறுகிறார்கள்.

பக்தியின் காரணமாக முகத்தைப் பார்த்தால் பேதங்கள் தெரிகின்றன. சமய நம்பிக்கை காரணமாக, முகத்திலே சின்னம் தெரிகிறது. நமக்குப் பொருந்தாத கடவுள் என்னும் எண்ணம் பிறந்து வருகிறது.

எனவே முகத்தில் தெரியும் சின்னங்களை மறந்து விட ஒரே இடம், பாதாரவிந்தம்.

எனவே எல்லா மதங்களும் அவற்றின் வழிபாடுகளும், இறைவன் திருவடியைப் பற்றும் படியாகச் சொல்லுகின்றன.

சமய நம்பிக்கையில் காலடி பற்றிக் கலி தீர்ந்தது பற்றிய சம்பவங்கள் வர்ணிக்கப்படுகின்றன.

இராமன் ஆனாலும், வேலன் ஆனாலும் இவர்கள் தாமரைத் திருவடிகளால் நன்மை பெற்றவர்கள் பட்டியல் தெரியும்.

"தாயே! அபிராமி! தாயே தயாபரி உன் பாதங்களை என் இதயக் கல்லில் வைத்து விடு. எனக்கு மலர்ச்சி உண்டு."

இவ்வாறு சொல்லும் சமயக் கவிகள் கவிதைகள் நிரம்ப இருக்கின்றன. தேவியின் பாதம் மெல்லிய பஞ்சு போன்றது. தாமரை போன்றது. பக்தர்களின் இதயமோ கல்லுப் போன்றது. மென்மையான திருவடித் தாமரைகள் கல்லில் பட்டால் வலிக்காதா? இவ்வாறு கற்பனை செய்த கவிஞர்கள் உளர்.

அதற்குரிய விடையும் சொல்லுவார்கள்.

அவர்கள் பாதம் அம்மி மிதித்து அருந்ததி பார்த்துத் திருமணமானவர்கள். அம்மிக்கல்லை மிதித்து ஏறிய பழக்கத்தால் பக்தர்கள் இதயக் கல்லில் நிற்பது கடினமில்லை; பாதங்கள் வலி எடுப்பதில்லை யென்று கூறுவார்கள்!

சரணாகதி அடைவது பாதங்களைப் பற்றுவதுதான். "தாளை வணங்காத்தலை" என்றும் பாடப்படுவதைக் கேட்கிறோம். கால்பட்டு அழியும் கன்ம வினைகளை அறிகிறோம். முகத்தைப் பார்த்தால் அறிவுக் குழப்பங்கள் உண்டாகி விடும். தாளைப் பார்த்தால் தாசமார்க்கம் ஏற்படும். என்மீது எல்லா மதங்களும் முகம் பார்த்து அறிமுகம் வேண்டாம், தன்னை மறந்து தாள் பிடித்து வணங்குங்கள் என்று வற்புறுத்துகின்றன.

அறுவகைச் சமயங்களும் திருவடித்தாமரை கண்டடைவதுதான் பக்தி என்று சுட்டிக் காட்டுகின்றன.

இறைவன் கால் பட்டு உயர்வெய்திய பக்தர்களின் கதைகளும் அனுபவங்களும் தாம் சமயக் கோட்பாடுகள்.

கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே —திருவாய்மொழி

அரன் அடியே அடியேன்
அடைந்து உய்ந்தேனே —தேவாரம்

**(2) பெண்ணாகடத்து மெய் கண்டார்**

எவ்வளவு படித்தாலும் ஆணவம், பாத்திரத்தில் ஒட்டும் களிம்பு போலப்படிதல் இயல்பு. வீட்டிலே ஒட்டடை ஒட்டுவது போல ஆணவம் ஒட்டிக்கொள்வது இயல்பு.

மெய்கண்டார் சிவதத்துவத்தை நன்கு விளக்கிய மெய்ஞானி. இவர்தம் சிறப்பைக் கேட்டார், அருணந்தி சிவம். இருவரும் சிறந்த சிவபக்தர். பரம பக்தர். படித்து உரம் கண்டவர். பல சிஷ்யர்கள் அருணந்தி சிவத்தோடு இருந்தார்கள்.

மெய்கண்டார் திருவெண்ணெய்நல்லூரில் தங்கியிருந்தார்.

அருணந்தி சிவம் திருத்துறையூரிலிருந்து தமது சிஷ்யர்களோடு வந்தார். வந்தவர் தாமே நேரில் போய் மெய்கண்டாரைக் காணாமல் தம் சீடர்களில் ஒருவரை அனுப்பினார். மெய்கண்டாரை நாடிப் போனவர் வரவில்லை. மீண்டும் அடுத்த சீடரை அனுப்பினார் அருணந்தி சிவம். அடுத்த சீடரும் போனார் திரும்பவில்லை. இவ்வாறு ஒவ்வொரு சீடரும் போனவர்கள் திரும்பவில்லை. இறுதியில் அருணந்தி சிவமே நேரில் புறப்பட்டுப் போனார்.

போன இடத்தில், தமது சீடர்கள் அத்தனை பேரும் மெய்கண்டாரின் சிவஞானபோத விளக்கங்களைக் கேட்டு அங்கே அமர்ந்திருப்பதைப் பார்த்தார். அருணந்தி சிவம் ஆணவம் நீங்கி, மெய்கண்டாருக்குச் சீடர் ஆனார்! இது அடியவர் வரலாறு.

மெய்கண்டார் பெண்ணுகடம் (பெண்ணு டம் தவறு) என்னும் ஊரைச் சார்ந்தவர். இந்த ஊருக்கு இப்பெயர் வந்ததற்கு ஒரு வர லாறு உண்டு.

இந்திரன் பூசை செய்ய மலர்பறித்து வரத் தேவ மகளிர் (பெண்), காமதேனு (ஆ) வெள்ளை யானை (கடம்) மூவரையும் அனுப்பி வைத்தான். தேவமகளிர், காமதேனு, வெள்ளானை ஆகிய மூவரும் பூப்பறித்தனர். அந்தவூர்ச் சிவன் கோவிலில் பூசை செய்தனர். தாம் அனுப்பின மூவரையும் காணுது இந்திரனும் வந்தான். சிவனைப் பூசித்து வழிபட்டான். எனவே பெண் ஆகடம்—பெண்ணுகடம் என்ற பெயர் வந்தது.

இந்திரன் அனுப்பிய தேவகணங்கள் இறைவனைப் பூசிக்கத் தங்கினர். எனவே பெண் ணுகடம் என்ற பெயரை அவ்வூர் பெற்றது. இது ஆண்டவன் வரலாறு.

பெண்ணுகடத்தில் பிறந்த மெய்கண் டாரைக் காணத் தூதுபோன சீடர்கள் அவரி டமே தங்கிவிட தூது அனுப்பிய அருணந்தி தாமே சென்று அடியாரானுர்.

ஆண்டவன் எப்படி! அடியவர் அப்படி!

## (3) உடல் உனக்கு உள்ளம் எனக்கு

இராமனுஜர் ஏழைகளிடம் அபாரமான அன்பு கொண்டவர். ''அஷ்ட சகஸ்ர கிராமம்'' என்னும் ஊருக்குப் போனுர். அங்கே அவருக்கு இரண்டு சிஷ்யர்கள். ஒருவர் யக்ஞேசர் ; பணக்காரர். மற்றவர் வரதய்யர் ; பரம ஏழை. இராமானுஜர் தமது இயல்புப்படி வரதய்யர் வீட்டிற்குப் போனுர். அப்போது வரதய்யர் உஞ்ச விருத்திக்காக வெளியே போயிருந்தார். வந்தவர் இராமாநுஜர் என் பதை அறிந்தாள் வரதய்யர் மனைவி. அவள் உடுத்தியிருந்த புடவையோ கிழிசல். இராமா னுஜர் முன்வர நாணி வீட்டிற்குள் இருந்தாள். இராமானுஜர் தமது தலையில் சுற்றியிருந்த ஆடையை வீட்டிற்குள் எறிந்தார். அந்த வஸ்தி ரத்தை அணிந்து கொண்டு வெளியே வந்து மகானை வரவேற்ருள். வீட்டிலே விருந்துண்டு போக வேண்டுமென்ருள். வீட்டிலே ஒன்றும் கிடையாது.

அதே வீதியில் வணிகன் ஒருவன் இருந் தான். அவனுக்கு வரதய்யர் மனைவியின் அழகில் ஒரு கண். ஒரு மயக்கம்.

அதிதியான இராமானுஜரை வீட்டில் உட் கார வைத்துவிட்டு வணிகன் கடைக்குப் போய் உணவுப் பண்டங்கள் வாங்கினுள். அரிசி, உப்பு, பருப்பு, மிளகாய் எல்லாம். அவளிடம் காசில்லை என்பது வணிகனுக்குத் தெரியும். அதற்கு விலை அவள் அழகுதான் என்பதை அவளும் அறிந்தாள். அதிதிக்கு விருந்து செய் வதில் அக்கறை காட்டினுள். விருந்து முடிந்த தும் தான் வந்து சந்திப்பதாக வாக்குத்தந்தாள்.

இராமானுஜருக்கு விருந்து படைத்து அனுப்பி வைத்தாள். பிட்சைக்குப் போன வரதய்யர் வந்தார். வந்தவரிடத்தில் இராமா நுஜர் வந்தது, அவருக்கு விருந்து அளித்தது எல்லாம் சொல்லிய பிறகு, வணிகனிடம் தான் பெற்று வந்த பண்டங்களையும் சொன்னுள்.

கடைக்கு வரதய்யரும் போனுர். மனைவி யும் போனுள். ''ஐயா வணிகரே! விருந்தாளி யாக மகான் வந்தார். அவருக்கு எங்களால் இயன்ற விருந்தைச் செய்தோம். என் மனைவி யின் உடலை நீர் எடுத்துக் கொள்ளலாம். கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் மன தாரப் புரிந்து கொண்ட பின்பு உடல் என்பது தேவையற்ற இடைச் செருகல். நீ அவளுடைய உடலை எடுத்துக்கொள். அவள் உள்ளம் எனக்குச் சொந்தம்'' என்ருர்.

வணிகன் ஆடிப்போனுன். மனைவியைப் பற்றிக் கணவன் அத்தனை மேலான எண்ணம் கொண்டுள்ளான்.

வணிகன் தன்னை மன்னிக்குமாறு இருவர் காலிலும் விழுந்து வணங்கினுன். இச்செய்தி இராமாநுஜர் காதிற்கு எட்டியது.

வணிகனை அழைத்து வரச் சொன்னுர். அவனைத் தமது சீடர்களில் ஒருவராக ஏற்றுக் கொண்டார். மன்னிப்புப் பெற வேண்டுமென்று தவறு செய்கிறவர்கள் எண்ணிவிட்டால், அவர் களைக் கடைத்தேற்றுவது ஞானசிரியன் கடமை. இதனைச் செய்தவர் இராமானுஜர்!

---

வெற்றிகரமாக அறுவை செய்து முடித் தார் டாக்டர். இதற்கு நாலைந்து நபர்களின் உதவி தேவை. ஒரு டாக்டரின் உதவியைக் கொண்டே முடித்தார்.

''இரண்டே பேர் இத்தனை பெரிய அறுவை செய்தது பெரிய வெற்றி''

''மூன்று பேர் இருந்தார்கள்!''

''மூன்ருவது டாக்டர் யார்?''

''எங்கள் இரண்டு பேர் வேலையையும் கவனித்துக் கொண்டிருந்தார் ஒருவர். அதா வது கடவுள்'' என்ருர் நிபுணர்.

---

வைஷ்ணவ சம்பிரதாயத்தில் உண்மை யான வைஷ்ணவனைக் கொக்கோடும், சேவ லோடும், உப்போடும் ஒப்பிட்டுப் பேசுவார்கள். உறுமீன் வருமளவும் காத்திருக்கும் கொக்கு, இதுபோல் அல்ப விஷயங்களைப் பற்றிக் கவலைப் படாமல் ஸத் விஷயங்களை மட்டும் கிரகித்துக் கொள்வான் ஓர் உண்மையான வைஷ்ணவன். குப்பை மேட்டில் தீனியைத் தேடும் சேவலைப் போலக் குப்பை போல மலிந்த சாஸ்திரங்களில் உணவன்ன பொருளை மட்டும் தேடுவான் உண் மையான வைஷ்ணவன்; உப்பில்லாது உணவு ருசிப்பது இல்லை. சமூகத்திற்குத் தன்னை உப்பா கக் கரைத்து ருசி தருபவன் உண்மையான வைஷ்ணவன். அவன் செய்யும் தொண்டுகளே இதற்கு ஆதாரம்.

—இராமானுஜர் வாக்கு.

# திருமுறைச் செழுமலர்கள்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

## திருஞானசம்பந்தர் :

தோடுடைய செவியன் விடையேறி ஓர்தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி என்உள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந்துஏத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன்அன்றே.

தோடு அணிந்த திருச்செவியை உடையவனும், எருதை ஊர்ந்து ஒப்பற்ற தூய்மையுடைய வெண்மையான சந்திரனைத் தலையிற் சூடி, திருநீற்றை அணிந்து என்னைத் தன்வயப்படுத்திக் கொண்டவன். இதழ்களையுடைய மலர்களால் முற்காலத்து அருச்சித்து வழிபட்டதனால் இன்று எனக்கு அருள்செய்த, பெருமையை உடைய பிரமபுரம் என்னும் சீர்காழியில் எழுந்தருளியிருக்கும் பெருமானாகிய இவனே (எனக்கு ஞானப்பாலைத் தந்தான்).

(இப்பாடல், சீர்காழியில் பிரமதீர்த்தக் கரையில் இறைவன் இறைவியால் ஞானப்பால் அளிக்கப்பெற்ற ஞானசம்பந்தர், எச்சில் மயங்கும்படி இப்பாலை உனக்கு அளித்தவர் யாவர் என்று, சிறியதொரு கோல்கொண்டு ஓச்சி வினவிய தம் தந்தையாகிய சிவபாத இருதயருக்கு விடையாகப் பாடிய திருப்பதிகத்தின் முதற் பாடலாகும். சைவ சமயத்திற்குரிய பன்னிரு திருமுறைகளும், இப்பாடலையே முதலாகக் கொண்டு தொடங்குகின்றன. பன்னிரு திருமுறைகளும், இப்பாடலில் 'ஓ' என்று தொடங்கிப் பெரிய புராணத்தின் கடைசிப் பாடலிலுள்ள 'ம்' என்பதனைக் கொண்டு முடிகின்றன. பன்னிரு திருமுறைகளும் 'ஓம்' என்னும் பிரணவத்தின் உள்ளுறையும் விரிவுமாதலை இக்குறிப்பு உணர்த்துகின்றது.) (1)

காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

அன்பு முதிர்ந்து மனம் நெகிழ்ந்து கண்களில் நீர் நிறைந்து பக்தியுடன் ஓதுபவர்களை, நல்ல நெறியாகிய வீடுபேற்று நெறியின்கண் செலுத்துவதும், நான்கு வேதங்களினுள்ளும் உண்மைப் பொருளாக விளங்குவதும், சிவபெருமானின் திருப் பெயராகிய நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தேயாகும்.

(திருஞான சம்பந்தர், திருநல்லூர்ப் பெருமணத்தில் தமது திருமணத்திற்கு வந்திருந்த அனைவருடனும், சிவசோதியிற் கலந்தபோது பாடிய திருப்பதிகம்). (2)

மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய்உமை பங்கன் திருஆலவாயான் திருநீறே.

மந்திரமாக இருப்பதும், தேவர்கள் தம் திருமேனியில் அணிந்திருப்பதும் திருநீறே; அழகாவதும் திருநீறே. புகழ்ந்து போற்றப்படுவதும் திருநீறே. வீடுபேற்றிற்கு உபாயமாவதும் திருநீறே. சமயங்கள் தோறும் உள்ளதாய், பயன்தருவது திருநீறே. இத்தகைய தன்மை வாய்ந்தது, சிவந்த பவளம் போன்ற இதழ்களை உடைய உமாதேவியைத் தன் இடப்பாகத்தில் கொண்டிருப்பவனும், திருவாலவாய் என்னும் மதுரையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானது திருநீறேயாகும்.

(இப்பாடல் ஞானசம்பந்தர் பாண்டியனது வெப்பு நோயைத் தீர்க்கும் பொருட்டு மதுரையில் பாடியருளியது). (3)

வாழ்க அந்தணர் வானவர் ஆன்இனம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது, எல்லாம் அரன்நாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்கவே

அந்தணர்கள் வாழ்க! தேவர்கள் வாழ்க! பசுக்கூட்டங்கள் வாழ்க! குளிர்ந்த மழை பொழிக! அரசனும் உயர்ச்சியுறுக! தீயது அழிக! உயிர்கள் எல்லாம் சிவபிரானின் திருநாமம் ஆகிய திருவைந்தெழுத்தை ஓதி வளர்க! உலக மக்கள் இகத்திலும் பரத்திலும் துயர் நீங்கி, இன்புற்று வாழ்க!

(சமணர்களோடு சம்பந்தர் நிகழ்த்திய புனல் வாதத்தில், இப்பதிகம் எழுதிய ஓலையே, வைகையாற்றில் எதிரேறிச் சென்று திருவேடகம் என்னும் தலத்தில் நின்றது. இச்சிறப்புடைமை கருதியே இதற்குத் 'திருப்பாசுரம்' எனப் பெயர் வழங்கும்.) (4)

மண்ணின்நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணின்நல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

கண்ணிற்கு இனிய நல்ல இயற்கைக் காட்சிகள் பெருகி நிற்கும் திருக்கழுமலம் ஆகிய வளம் நிறைந்த நகரின்கண், பெண்ணின் நல்லாள் ஆகிய உமா தேவியுடன், சிவபெருமான் ஆகிய பெருந்தகை எழுந்தருளி விளங்குகின்றார். ஆதலின், நாம் இவ்வுலகில் நல்லபடியாக இன்புற்று வாழலாம். நாள்தோறும் எண்ணில்லாத நல்ல பேறுகளுக்கும் யாதொரு குறையும் இல்லை. நினைத்து விரும்பும் நலங்களையெல்லாம் குறையில்லாமல் நிரம்பப் பெறலாம்.

(திருமணம் முதலிய நல்ல நிகழ்ச்சிகளில், வாழ்த்துரையாகப் பெரியோர்களாற் பாடப் பெறுவது, இப்பாடல்.) (5)

வேயுறுதோளிபங்கன் விடமுண்டகண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல்அணிந்தென்
உளமே புகுந்தஅதனல்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனி பாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

மூங்கிலைப் போன்ற தோளையுடைய உமா தேவியை ஒரு பாகத்திற் கொண்டவரும், ஆல காலம் என்னும் நஞ்சையுண்ட கண்டத்தை உடையவருமான சிவபெருமான், மிகவும் நல்ல வீணையை மீட்டிக் கொண்டு, என் உள்ளத்திலே வந்து புகுந்தார். ஆதலால், சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது என்னும் நவக்கிரகங்களும், அடியவர்களுக்கு எவ்வகையான இடையூறும் செய்யமாட்டா; நன்மையே செய்யும்.

(மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும், மதுரைக்கு வந்து சமண சமயத்தை வென்று சைவ நெறி பரப்பியருள்க என வேண்டி, ஆள் அனுப்பிய போது, அங்ஙனமே செய்யப் புறப்பட்ட தம்மைத் திருநாவுக்கரசர், நாளும் கோளும் நலமாக இல்லை என்று கூறித் தடுத்தபோது, சம்பந்தர் பாடியருளிய பாடல் இது!) (6)

எந்தை ஈசன்எம் பெருமான் ஏறமர்கடவுள்என் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற் சென்றுகை கூடுவதன்றால்
கந்த மாமலர் உந்திக்கடும்புனல் நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயில் அரத்துறை அடிகள்தம் அருளே.

மணம் மிக்க சிறந்த மலர்களைக் கொழித்துக் கொண்டு வேகமாக வரும் வெள்ளத்தையுடைய நிவா நதியின் கரைமேல் உள்ள, அழகிய குளிர்ந்த சோலைகளையுடைய திருநெல்வாயில் என்னும் தலத்தில், அரத்துறை என்னும் கோயிலில் உள்ள சிவ பெருமானின் திருவருளானது, எங்கள் தந்தை — இறைவன்—எங்கள் தலைவன்—எருதை விரும்புகின்ற கடவுள் என்று துதித்து, நினைத்து வணங்குபவர்களுக்கே யன்றி, மற்றவர்களுக்குக் கிடைப்பது அன்று.

(இறைவன் முத்துச் சிவிகையும் குடையும் கொடுத்தருளியபோது, திருநெல்வாயில் அரத்துறையில், திருஞானசம்பந்தர் பாடிய பதிகத்தின் முதற் பாடல் இது.) (7)

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ வுனதின்னருள் ஆவடுதுறை அரனே

துன்புற்றாலும், தளர்ச்சி யடைந்தாலும், என்னைப் பொருந்திய நோய் பெருகித் தொடர்ந்து வந்தாலும், உன் திருவடிகளில் வீழ்ந்து வணங்குவேன். திருப்பாற் கடலில் அமுதத்தோடு கலந்து வெளிப்பட்ட ஆலகாலம் என்னும் கொடிய விடத்தினைக் கழுத்தில் அடக்கி நிறுத்தியவனே! வேதங்களை அருளிச் செய்தவனே! எங்களை நீ ஆட்கொள்ளும் தன்மை இதுதானோ? எம்மை விரும்பி அடைந்தவர்களுக்கு யாம் கொடுக்க இயலுவது எம்மிடம் ஒன்றும் இல்லை என்றால், திருவாவடுதுறையில் உள்ள சிவபெருமானே! அதுதான் உன்னுடைய இனிய திருவருள் ஆகுமோ?

(தம் தந்தையாகிய சிவபாத இருதயர் வேள்வி செய்ய விரும்பிய போது, திருஞானசம்பந்தர் இப் பதிகத்தினைப் பாடித் திருவாவடுதுறையில் ஆயிரம் பொற்காசு அடங்கிய பொற்கிழி அருளப் பெற்றார். இவ்வருள் நிகழ்ச்சியை, ''கழுமலவூரர்க்கு அம் பொன் ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடுதுறையனாரே'' எனத் திருநாவுக்கரசர், தமது பாடல் ஒன்றிற் குறிப்பிட்டிருக்கின்றார்.) (8)

ஈறாய் முதல்ஒன்றாய் இருபெண்ஆண் குணம்மூன்றாய்
மாறாமறை நான்காய் வருபூதம் அவைஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையோடு எட்டுத்திசை தானாய்
வேறாய் உடன் ஆனான்இடம் வீழிம் மிழலையே.

எல்லாவற்றிற்கும் முதலாகவும் முடிவாகவும், ஒப்பற்ற முழுமுதற் பொருளாகவும் இறைவன் விளங்குகின்றான். ஆண்பெண் என்னும் இரு கூறுகளாகவும், சத்துவம் இராசதம் தாமதம் என்னும் மூன்று குணங்களாகவும், இருக்கு எசுர் சாமம் அதர்வணம் என்னும் நான்கு வேதங்களாகவும், நிலம் நீர் தீ வளி விசும்பு என்னும் ஐந்து பூதங்களாகவும், கைப்பு, கார்ப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என்னும் ஆறு சுவைகளாகவும், குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி தாரம் என்னும் ஏழு இசைகளாகவும், கிழக்கு மேற்கு முதலிய எட்டுத் திசைகளாகவும் அவன் இருக்கின்றான். உயிர்களின்பால் அவன் ஒன்றாகவும் வேறாகவும், உடனாகவும் திகழ்கின்றான். அத்தகைய சிவபெருமான் எழுந்தருளிக் கோயில் கொண்டு வீற்றிருக்கும் இடம், திருவீழிமிழலை என்னும் தலம் ஆகும். (9)

(இறைவன் உயிர்கள்பால் ஒன்றாகவும் வேறாகவும் உடனாகவும் நிற்கின்றான் என்று கூறுகின்றது சைவ சித்தாந்தம். ஆசிரியர் மெய்கண்டார் தமது சிவஞான போதத்தில் விளக்கும் அக்கொள்கைக்கு, அடிப்படைச் சான்றாக அமைந்தது இப்பாடலே யாகும்.)

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே!

நல்ல மனமே! தாம் சாகவுள்ள நாளையும், வாழ இருக்கும் நாளையும் ஆராய்ந்து அறியக் கூடியவர்கள் யார்? ஒருவரும்இலர். ஆதலின் திருச்சாய்க்காட்டில் உள்ள சிவபெருமானுக்கே, நாளும் பூவைத் தலையாற் சுமப்போம்; அவனுடைய புகழையும் திருப்பெயரையும் காதாற் கேட்போம் ; நாவினால் நாள்தோறும் சொல்லித் துதிப்போம். இங்ஙனம் செய்தால் நல்வினைப் பேறு ஆகிய சிறந்த புண்ணியத்தினை நாம் பெறலாம். ஆதலின் நீ நாடோறும் இறைவனை நினைத்து வழிபடுவாயாக! (10)

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளம் குளிரும்மே.

திருச்சிராப்பள்ளிக் குன்றின்மேல் உள்ள சிவ பெருமான், நன்மையுடையவன்; தீமையில்லாதவன்; வெள்ளை ஏறு ஆகிய ஓர் எருதை ஊர்தியாக உடையவன்; உமாதேவியை ஒரு பாகத்திற் கொண்டிருப்பவன்; இயல்பாகவே திருவையுடையவன் ; அவனுடைய திருப்பெயரைக் கூறித் துதிக்குந்தோறும், என்னுள்ளம் கவலைகள் நீங்கிக் களிப்பினாற் குளிர்ச்சி அடைகின்றது. (11)

செல்வ நெடுமாடம் சென்று சேண்ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
செல்வன் கழல்ஏத்துஞ் செல்வம் செல்வமே

செல்வ வளம் நிறைந்த மாடமாளிகைகள் விண்ணளவும் உயர்ந்து சென்று, அழகிய சந்திரனைத் தழுவும்படி, பொருட் செல்வத்தால் நாடோறும் உயர்வு எய்துகின்ற அருட் செல்வர்களாகிய அந்தணர்கள் வாழ்கின்ற தில்லையின்கண், சிற்றம்பலத்திற் பொருந்தியுள்ள கருணைச் செல்வம் ஆகிய சிவபெருமானின் திருவடிகளைப் போற்றி வணங்குகின்ற பண்பாடுடைமையாகிய செல்வமே, எல்லாச் செல்வங்களிலும் மேலான செல்வம் ஆகும்.

(இறைவனை வழிபடுதலே, மிகச் சிறந்த செல்வம் ஆகும்.) (12)

கற்றுங்கு எரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
முற்றா வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

வேதாகமங்களைக் கற்றுணர்ந்து, ஆகவனீயம் தக்கிணாக்கினீயம் காருகபத்தியம் என்னும் முத்தீயையும் வளர்த்து, கலியினது தீங்குகள் வராதபடி தடுப்பவர்களாகிய சிறந்த அந்தணர்கள் வாழ்கின்ற தில்லையின்கண், சிற்றம்பலத்தில் விளங்குகின்றவன், முதிராத வெண்பிறையைச் சூடிய தலைவன் ஆகிய சிவபெருமானின் திருவடிகளையே துணையாகப் பற்றி நிற்பவரைப் பாவங்கள் பற்றமாட்டா. (13)

சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடுபால்
முறையாலே யுணத்தருவன்மொய்பவளத்தொடுதரளம்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற் பேசாயே

இறக்கையையுடைய அழகிய இளங்கிளியே! இங்கே வருக! தேனுடன் பாலும் கலந்து, முறைப்படி நீ உண்ணுவதற்குக் கொடுப்பேன்; பவளமும் முத்தும் திரண்டு வந்து துறையிற் குவிகின்ற கடலுக்கு அருகேயுள்ள தோணிபுரத்து இறைவன்; விளங்குகின்ற இளம்பிறையைச் சூடியவன், அவனுடைய திருப்பெயரை ஒருமுறை சொல்லி என்னை மகிழ்விப்பாயாக! (14)

(தலைவனைப் பிரிந்த தலைவி, தலைவனுடைய பெயரைக் கேட்ட மாத்திரத்தே இன்பம் அடைவாள். இறைவனிடத்து ஈடுபாடு கொண்ட அடியவர்களும், இறைவன் நாமத்தைக் கேட்ட மாத்திரத்தே பேரின்பம் அடைவர். இக்கருத்தை இப்பாடல் தெளிவிக்கின்றது.)

## திருநாவுக்கரசர்:

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய் தனநான் அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும்பகலும்
பிரியாது வணங்குவன் எப் பொழுதும்
தோற்றாது என்வயிற் றின்அகம் படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட் டானத் துறைஅம் மானே

கெடிலம் என்னும் நதியின் கரையிலுள்ள திருவதிகை வீரட்டானம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற எம் தந்தையே! சூலைநோயானது கூற்றுவனைப் போல் வந்து வருத்துகின்ற நிலையை நீக்கியருளுகின்றீரில்லை. அதற்கு ஏதுவாக முன்னே செய்தனவாய பல கொடிய பாவங்களை நான் அறியவில்லை. எனினும், எளியேனை அடிமையாக நீ ஏற்றுக் கொண்டாய். உம்முடைய திருவடியையே இரவும் பகலுமாகிய எக்காலத்திலும் பிரிவில்லாமல் யான் வணங்குகின்றேன். இன்னதன்மையதென்றுஇச்சூலைநோயானதுபுலப்படாமல் எனது வயிற்றின் உள்ளிடத்தே குடரோடு சுற்றி முருக்குகின்றது. அடியேன் இந்நோயின் கொடுமையை இனிச் சிறிதும் தாங்கமாட்டேன். (என்னைக் காத்தருள்க).

(சூலைநோய் எய்திய திருநாவுக்கரசர் திலகவதி அம்மையாருடன் திருவதிகைக் கோயிலுக்குச் சென்று அங்குள்ள வீரட்டானேசுவரரை வணங்கித் தமது சூலைநோய் தீரப் பெற்றார். அப்போது பாடிய திருப்பதிகத்தின் முதல் திருப்பாடல் இது.) (15)

நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின்று ஏத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

நமச்சிவாய மந்திரமே ஞானத்தையும் கல்வியையும் தரும்; நான் அறிகின்ற பலவேறு கலைகளும் ஆகும்; அதனையே என்னுடைய நாக்கானது இடைவிடாது ஓதித் துதிக்கும் ; அதுவே எல்லோரும் உய்யக் கூடிய நல்வழியைக் காட்டியுதவும்!

(திருவைந்தெழுத்தின் பெருமையை, எளிதாகவும் இனிதாகவும் விளக்குவது இப்பாடல்!) (16)

தொழுது மாமலர் தூவித் துதித்துநின்று
அழுது காமுற்று அரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே.

இன்னம்பர் என்னும் தலத்தில் உள்ள சிவபெருமான், தன்னை வணங்கி, தூய மலர்களால் அருச்சித்து, போற்றிப் புகழ்ந்து, அன்பினால் அழுது நேசித்து, அருளைப் பெறுவதற்காகக் கதறிப் புலம்புகின்றவர்களையும், வீணிற் காலங் கழித்து அருள் நெறிக்குப் புறம்பாக நடப்பவர்களையும்,கீழ்க்கணக்கு என்னும் குறிப்பேட்டில் எழுதி வைக்கின்றார்.

(வீண் பொழுது போக்குதல் பெருங் குற்றமும் பாவமும் ஆகும். ஆதலின் காலத்தை வீணே கழியாமல், இறைவனைத் தொழுது உய்ய முற்படுதல் வேண்டும் என்பது கருத்து.) (17)

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே

நம்முடைய, கடம்பமலர் மாலையை அணிகின்ற வனகிய முருகனைப் பெற்றெடுத்தவள், ஆகிய உமாதேவியைத் தனது திருமேனியின் ஒரு பங்கிலே வைத்திருப்பவன் ஆகிய சிவபெருமான், சிறந்த கடம்பை என்னும் தலத்தில் உள்ள திருக்கரக் கோயிலின்கண் எழுந்தருளியுள்ளான். அவனது கடமை, ஒன்றுக்கும் பற்றாத அடியேனையும் தாங்கிக் காப்பாற்றியருளுவதாகும்; என்னுடைய கடமை, அவனுக்குப் பணிவிடைகள் செய்துகொண்டு, வேறு நினைவும் செயலும் இன்றி, அவனையே பற்றாகக் கொண்டு இருத்தல் ஆகும்.

(தொண்டின் இயல்பையும், பெருமையையும் விளக்க, 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்னும் இப்பாடலின் வரியை, அனைவரும் அடிக்கடி எடுத்துக் கையாளுவர்.) (18)

கனியினும் கட்டி பட்ட கரும்பினும்
பனிமலர்க் குழற் பாவை நல்லாரினும்
தனிமுடி கவித்து ஆளும் அரசினும்
இனியன் தன்னடைந்தார்க்கு இடை மருதனே.

திருவிடைமருதூரில் உள்ள சிவபெருமான், தன்னை அடைந்த அன்பர்களுக்கு, கனி வகைகளைக் காட்டிலும், கருப்பங்கட்டியைக் காட்டிலும்,

குளிர்ந்த மலர் சூடிய கூந்தலையுடையராய்ப் பாவை போன்று அழகியராய் உள்ள இளநலம் மிக்க பெண்களைக் காட்டிலும், தனி ஆணை செலுத்தும் திறனுடையராய் முடிசூடி ஆளுகின்ற அரசாட்சியைக் காட்டிலும், மிகப் பெரிய இன்பத்தை வழங்கும் தன்மையுடையவன்.

(இறைவனே எல்லா இன்பங்களுக்கும் மேலான, அழியாத சிறந்த பேரின்பங்களை நமக்கு வழங்கியருளவல்லான் என்பது இப்பாடலின் கருத்து.) (19)

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

சிவபெருமானின் வளைந்த புருவத்தையும், கொவ்வைக் கனிபோன்ற சிவந்த திருவாயையும், அதன்கண் குமிழியிட்டுத் தோன்றுகின்ற அழகிய புன்முறுவலையும், குளிர்ச்சி மிக்க சடையையும், பவளம் போன்று சிவந்த திருமேனியையும், அத்திருமேனியிற் பூசப் பெற்றுள்ள பால் போன்ற வெண்மையான திருநீற்றையும், இனிய தன்மையுடைய 'குஞ்சிதபாதம்' ஆகிய ஆட எடுத்த பொன்போன்ற திருவடியையும், காணக்கூடிய பேறு கிடைக்குமாயின், இந்த இழிந்த மனிதப் பிறவியும் கூட, ஒரு வகையில் இந்த நிலவுலகத்தில் விரும்பத்தக்கதேயாகும். (உம்மையாற் பிறவியின் இழிவும், 'காணப் பெற்றால்' என்றதனால் காணப் பெறுதலின் அருமையும் புலப்படுத்தப் பெற்றன.)

இப்பாடல், நடராசப் பெருமானின் அழகிய திருவுருவச் சிறப்பினை நன்கினிது விளக்குகின்றது. (20)

பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தற்குப் பத்தர் ஆகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங்கு ஆர்வத்தை உள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினால் இடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர் வீரட்ட னாரே.

வைகறையிலேயே துயில் எழுந்து நீராடி, பித்தன் ஆகிய சிவபெருமானுக்குப் பக்தியை உடையவர்களாய், நல்ல மலர்களைக் கொண்டு உள்ளத்தில் ஆர்வம் நிலைபெறச் செய்து, பக்தி மேலீட்டால் விருப்பம் கொண்டு, முறைப்படி நல்ல விளக்கும் நல்ல தூபமும் இட்டு வழிபாடு செய்ய வல்ல அடியவர்களுக்குத் திருக்கடவூர் வீரட்டம் என்னும் கோயிலில் உள்ள சிவபெருமான், கரும்பினிற் கட்டிபோல மிக்க இன்பத்தை விளைவிப்பார். (21)

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீறு அணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிக நலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே.

நாம் இறைவனின் திருவைந்தெழுத்தை ஓத வேண்டும்; இறைவனின் புகழைப் பேச வேண்டும்; திருக்கோயிலை வலம் வந்து வணங்க வேண்டும் ; உண்பதற்கு முன்பு இறைவனுக்குப் பூசை புரிய வேண்டும்; திருநீறு அணிய வேண்டும். அதனால் பல கொடிய நோய்கள் நீங்கும். இங்ஙனமெல்லாம் செய்யாதவர்கள், நோயுற்று வருந்துவர்; மாறி மாறிப் பிறந்தும் இறந்தும் உழன்று துன்புறுவர்.

இறைவனை வழிபடும் முறையையும், வழிபடுதலால் அடையும் நன்மையையும், வழிபடாமையினால் நேரும் தீமையையும் இப்பாடல் நன்கு தெரிவிக்கின்றது. (22)

பேராயிரம் பரவி வானோர் ஏத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே.

சிவபெருமான் பேராயிரம் உடையவன். அவனைத் தேவர்களெல்லாரும் போற்றுகின்றனர். அவன் தன் அடியார்களுக்கு எல்லாச் செல்வங்களையும் வருவித்துக் கொடுக்கின்றான். மந்திரம் தந்திரம் மருந்து என்னும் மூன்றாகவும் விளங்கித் தீராத நோய்களையெல்லாம் தீர்த்து அருள் புரிகின்ற வைத்திய நாதப் பெருமானாக விளங்குகின்றான். முப்புரங்களை எரிக்க மேருமலையை வளைத்து வில்லாகக் கொண்டவனும், புள்ளிருக்கு வேளூர் என்னும் வைத்தீசுவரன் கோயிலில் எழுந்தருளியிருப்பவனும் ஆகிய அவனைப் போற்றி வணங்காமல், யான் எவ்வளவோ காலத்தை வீணாக்கிவிட்டேன். (23)

அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலை
திகழொளியைத் தேவர்கள் தங்கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றை
கனைகடலைக் குலவரையைக் கலந்துநின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

புறக் கருவிகளாலும், உயிரறிவினாலும் அறிய முடியாதவனும், அறவோர் நினைவில் தங்குபவனும், வீடு பேற்றைக் கூறும் வேதத்தின் உள்ளீடானவனும், சிறிய அணு போன்றவனும், எத்தகையாராலும் அகப்படுத்து உணரலாகாதவனும், தேனையும், பாலையும் ஒத்தவனும், விளங்கும் அறிவு ஒளியானவனும், வானோர்க்குத் தலைவனும், ஏனைக் காத்தலும், படைத்தலும் இயற்றும் திருமாலும், நான்முகனுமானவனும், தீ, காற்று, ஒலிக்கும் கடல், குலமலைகள் யாவற்றுள்ளும் கலந்து நின்ற அளவிடற் கரியவனும், பெரும்பற்றப் புலியூர் என்னும் தில்லையுள் அருள் வழங்குபவனுமாகிய சிவபெருமானின் புகழைப் பேசாது ஒழிந்த நாட்களெல்லாம், பிறவிப் பயனின்றி ஒழிந்த நாட்களாகவே கருதப்படும். (24)

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்திலிடர்ப் படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரன் நற்சங்க வெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்சே வடியிணையே குறுகி னோமே.

நாம் யாருக்கும் அடிமை அல்ல; எமனுக்கும் கூடப் பயப்பட மாட்டோம்; யாம் பாதுகாவலைப் பெற்றுள்ளோம்; பிறருக்குக் கட்டுப்படுதல் என்பதனை யாம் அறியமாட்டோம்; இன்பத்திலேயே யாம் திளைத்திருப்போம். எந்த நாளிலும் எமக்குத் துன்பம் இல்லை. தாம் எவருக்கும் அடிமையாகாத இயல்பை உடையவரும், தம்மை அடைந்தவர்களுக்கு நன்மை செய்பவரும், நல்ல வெள்ளைச் சங்கினால் அமைந்த குழையை ஒரு காதில் அணிந்த பெருந் தலைவரும் ஆகிய சிவபெருமானுக்கே, எக்காலத்திலும் மீளாத அடிமையாகி, அவருடைய மலர் போன்ற இரண்டு திருவடிகளை நாம் அடைந்து விட்டோம்.

(சமண சமயம் விடுத்துச் சைவ சமயம் சேர்ந்து விட்டார் என்ற செய்தி கேட்டு, மகேந்திர வர்மன் சீற்றமுற்று ஆட்களை அனுப்பி அழைத்து வரச் சொல்லிய போது, அவன்பால் வர

மறுத்து அப்பர் சுவாமிகள் பாடிய சிறந்த பாடல் இது. இது ''மறுமாற்றத் திருத்தாண்டகம்'' என வழங்கப்பெறும்). (25)

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்
உன்னையல்லால் ஒரு தெய்வம் உள்கே னென்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா என்றும்
பொழில் ஆரூரா என்றே போற்று நில்லே.

நம்மைப் பற்றியுள்ள பாவங்களை விலக்கிக் கொள்ள விரும்பினால், மேலான வீடுபேற்று நிலைக்குச் செல்லுகின்ற சிறப்பை விரும்பினால், நம்மைச் சுற்றிக் கொண்டு துன்பங்களை உண்டாக்கும் வழி வகைகளை ஆராய்ந்து கொண்டு இருக்கின்ற கொடிய வினைகளை வீழ்த்தி வெற்றி கொள்ள, விரும்பினால், நெஞ்சமே! நீ இறவாமல் இருக்கும் வழியைச் சொல்லுகின்றேன் கேட்பாயாக. உறவினரும், துணைபுரியும் நண்பரும் நீதான் என்றும், உன்னைத் தவிர வேறு ஒரு தெய்வத்தையும் யான் நினைக்க மாட்டேன் என்றும், புற்றில் வாழும் பாம்பை இடுப்பிற் கச்சு எனும்படி கட்டிய புனிதனே என்றும், சோலைகள் மிக்க திருவாரூரில் வாழ்பவனே என்றும், சிவபிரானைப் போற்றித் தொழுது அவர்தம் திருவருள் நெறியில் நின்று ஒழுகுவாயாக!

(இப்பாடலால், தம் நெஞ்சிற்கு மட்டுமேயன்றி, நம்மனோர்க்கும் அருளுபதேசம் செய்கின்றார் அப்பர் பெருமான்! மிகவும் சிறந்த நல்ல இனிய பாடல்). (26)

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் :

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர்
அருட்டுறையுள்
அத்தா உனக்கு ஆளாய் இனிஅல்லேன் எனலாமே.

பித்தரே! இளம் சந்திரனைச் சடையிற் சூடியவரே! தலைவரே! அருளை ஆளுகின்றவரே! எத்தகைய காரணத்தாலும் உம்மை மறவாமல் நினைக்கின்றவனாகிய எனது மனத்தினிடத்தில் உம்மை எழுந்தருளச் செய்தவரே! பெண்ணையாற்றின் தென் கரையிலுள்ள திருவெண்ணைநல்லூரில், திருவருட்டுறை என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற தந்தையே! உமக்கு முன்பே யான் அடிமைப் பட்டிருக்கவும், இப்பொழுது யான் அடிமையல்லேன் என்று கூறுதல் பொருந்துமோ?

(திருவெண்ணை நல்லூரில் இறைவன் கிழ வேதியரின் வடிவம் கொண்டு வந்து, சுந்தரரின் திருமணத்தைத் தடுத்து ஆட்கொண்டருளிய போது, சுந்தரர் பாடிய திருப்பதிகத்தின் முதற் பாடல் இது.) (27)

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னை என்பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாந் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்றறி யொண்ணா
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம்வைகும் வயற்பழனத்து அணி
ஆரூரானை மறக்கலும் ஆமே.

இறைவன் இம்மைக்குரிய பொருட் செல்வத்தையும், மறுமைக்கு உரிய சிறந்த அருட் செல்வத்தையும் தருவான்; உலகியல் நுகர்ச்சிகளையும், வீடுபேற்று இன்பத்தையும் கூட்டுவிப்பான்; இங்ஙனம் அடியவர்கள் எல்லார் திறத்திலும் செய்வது மட்டுமேயன்றி, அதற்கு மேலும் என்னுடைய பிழைகளைப் பொறுத்தருள்வான்; என்னுடைய பிழைகளை எல்லாம் தவிர்த்து நீங்கும்படி கட்டளை இடுவான்; இப்படிப்பட்ட இயல்பினைத்தான் உடையவன் என்று வரையறுத்து உணர்ந்து கொள்ள முடியாத எம்முடைய தலைவனாகிய அவன், மிகவும் எளியவனாய் வலிந்து எனக்குப் பேருதவிகள் புரிந்தான். அன்னங்கள் நிறைந்த வயல்களையும் நீர்த் திவலைகளையும் உடைய அழகிய அத்தகைய திருவாரூர்ப் பெருமானை யான் மறக்கவும் முடியுமோ? (28)

ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான் செய்யுந் துரிசுகளுக் குடனாகி
மாழையொண்கண் பரவையைத் தந்தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே.

இறைவன் ஏழிசையாய், இசைப்பயனாய், இன்னமுதாய் இருக்கின்றான்; என்னுடைய தோழனாகவும்; யான் செய்யும் குற்றங்களுக்கு உடந்தையாகவும் விளங்குகின்றான்; மான் போன்ற ஒளிவளமிக்க கண்களையுடைய பரவை நாச்சியாரை எனக்குத் திருமணம் செய்து வைத்து என்னை ஆட்கொண்டருளினான். அத்தகைய திருவாரூர்ப் பெருமானை அறிவில்லாத ஏழையாகிய நான் இனியும் பிரிந்திருக்க மாட்டேன்.

(சுந்தரர், திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்து சில காலம் அங்குத் தங்கியிருந்தபோது, திருவாரூரில் நிகழும் பங்குனி உத்திர விழாவின் சிறப்பை நினைந்து, திருவாரூர்ப் பெருமானின் பிரிவாற்றாமையினால் வருந்தி மிகவும் மனமுருகிப் பாடிய பதிகத்தின் பாடல் இது.

இப்பாடலைப் படிக்குங்கால், தம்முடைய கருவி கரணங்களெல்லாம் கரைந்து கரைந்து ஒன்றாகிவிடுவதாக, இராமலிங்க அடிகள் குறிப்பிட்டுப் போற்றியுள்ளார்.) (29)

நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்
நாவினுக் கரையன் நாளைப் போவானும்
கற்ற சூதன் நற்சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம்புல்லன் என்றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதுங்
கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்
பொற்றிரள் மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப்புன் கூருளானே.

திருஞான சம்பந்தர் பதிகந்தோறும் தம்மைப் பெரிதும், புகழ்ந்து கொண்டார்; திருநாவுக்கரசர் சமண சமயம் சார்ந்திருந்தார்; நந்தனார் நாளைப் போவேன் நாளைப் போவேன் என்று சொல்லிக் கொண்டிருந்தார்; மூர்க்க நாயனார் சூதாடினார்; சாக்கிய நாயனார் கல்லால் எறிந்தார்; சிலந்தி திருவானைக்காவில் எச்சிலாகிய வாயின் நூலால் பந்தர் அமைத்தது. கண்ணப்பர் திருக்கோயிலிற் பல அநுசிதங்கள் செய்தார்; கணம்புல்லர் தம் திருமுடியால் விளக்கெரித்தார். திருப்புன்கூரில் உள்ள பெருமானே! இவர்கள் இக்குற்றங்களைச் செய்யினும், பொறுத்தருளிக் குணம் என்றே கொண்டருளும் நின் செயலைக் கண்டு, யான் நின் திருவடிகளை அடைந்தேன். என்னுடைய குற்றங்களையும் தேவரீர் குணம் என்றே கொண்டு அருள் புரிதல் வேண்டும். (30)

அந்தணாளன் உன்னடைக்கலம் புகுத்
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன்றன் ஆருயிரதனை
வவ்வினாய்க்கு உன்றன் வன்மைகண்டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியில்
இவன்மற்றென்னடி யானென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி அடைந்தேன்
செழும்பொழில் திருப்புன்கூருளானே.

திருப்புன்கூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானே; மார்க்கண்டேயன் ஆகிய அந்தணச் சிறுவன், உன்பால் அடைக்கலம் புகுந்ததனால், அவனைக் காத்தற்பொருட்டு, அவனது உயிரைக் கவர வந்த காலனின் அரிய உயிரைப் பற்றி ஈர்த்துக் கொண்ட நினது வலிமையை அறிந்து, என்னை எம தூதர்கள் வந்து துன்புறுத்துவார்களாயின், இவன் என்னுடைய அடியவன், இவனை விட்டு விடுங்கள் என்று கூறி, என் தந்தையாகிய நீ என்னைக் காப்பாற்றியருள்வாய் என்னும் கருத்தினால், யான், நினது திருவடிகளைப் புகலிடமாக வந்து அடைந்து விட்டேன், என்னைக் காத்தருள்க. (31)

**மாணிக்கவாசகர் :**

யானே பொய், என் நெஞ்சும் பொய், என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே?
தேனே! அமுதே! கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந்துறுமாறே.

இறைவனின் அருளைப் பெறுவதற்கு நாம் அளவிலாத பெரிய ஆர்வம் கொள்ளுதல் வேண்டும் ; நாம் செய்த பிழைகளையும் பாவங்களையும் உணர்ந்து, அவற்றிற்காக வருந்த வேண்டும்; இனி அத்தகைய தவறுகளைச் செய்யாதவாறு மனம் திருந்திவிட வேண்டும்; செய்த பிழைகளை மன்னிக்குமாறு இறைவனிடம் பலகாலும் முறையிட்டு அழுது புலம்புதல் வேண்டும். அவ்வழுகைக் கண்ணீர் நம்முடைய பாவங்களைக் கழுவிக் கழுவித் தூய்மைப் படுத்தும், அழுக்குகளைப் போக்கும். நாம் உள்ளும் புறமும் ஒத்த உண்மை வாழ்வைக் கடைப்பிடித்து, நினைவு, பேச்சு, செயல் ஆகிய மூன்றிலும் உண்மையுடையவர்களாய் மாறிப் புனிதம் அடைந்து, இறைவனின் அருளைப் பெற்று உய்யலாம் என்று இப்பாடல் விளக்குகின்றது. (32)

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறெனக் குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

இறைவன்பால் நாம் நம் உடல் பொருள் ஆவி ஆகிய மூன்றினையும் ஒப்படைத்தல் வேண்டும். அங்ஙனம் ஒப்படைத்துவிட்டால், அவன் நமக்கு வரும் துன்பங்களைத் தான் ஏற்றுக்கொண்டு, நமக்கு நலம் புரிகின்றான். அவன் நமக்கு நல்லதே செய்வான் ; பிழை செய்ய் மாட்டான். ஆதலின் இதுபற்றி நாம் ஏதும் எண்ணிக் கவலைப்பட வேண்டுவதில்லை என்பதனை, இத்திருவாசகப் பாடலில் மணிவாசகர் கூறுகின்றார்.

(எல்லாம் இறைவனின் செயல், இறைவனின் பொறுப்பு. அவனையே நம்பி அடைக்கலம் புகுந்து, பணிந்து இருப்பவர்களுக்கு, எத்தகைய துன்பமும் நேராது என்பது கருத்து). (33)

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

உலகில் நம்மிடம் அன்பு செலுத்தி நலம் புரிபவர்களில், தாயைவிட மேலானவர் எவரும் இலர். அவள்தான் நமக்குப் பால் நினைந்து ஊட்டி நம்மைப் பாதுகாத்து வளர்க்கின்றாள். அத்தகைய தாயினும் மேலாக நம்மிடம் சாலவும் பரிவு காட்டித் தண்ணருள் புரிபவன் இறைவன். அவன் ஊனினை உருக்குகின்றான். உள்ளொளியாகிய குணத்தைப் பெருக்குகின்றான். அளவில்லாத ஆனந்தம் என்னும் தேனினைச் சொரிகின்றான். நாம் செல்லுமிடமெல்லாம் நம்முடன் கூடவே புறம்புறம் வந்து திரிகின்றான். அவனை நான் சிக்கெனப் பிடித்துக் கொண்டேன். என்னை விட்டு அவன் இனி எங்கே போக முடியும்?

(இறைவனின் எல்லையற்ற பெருங்கருணையை விளக்குவதற்குப் ''பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து'' என்னும் இத்திருவாசகத் தொடரைப் பெரியோர்கள் அடிக்கடி எடுத்துக் கையாளுவர். ''ஊன் உருகினால் உள்ளொளி பெருகும்'' என்பதும் பிறவும், இப்பாடலின் மூலம் உணர்த்தப்படுகின்றன.) (34)

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்?
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே, ஈசா உடலிடங் கொண்டாய்;
யான் இதற்கிலன் ஓர்கைம்மாறே.

இறைவன் தன்னை எனக்குத் தந்தான்; தான் என்னை எடுத்துக் கொண்டான். அவனால் யான் அளவில்லாத இன்பத்தைப் பெற்றேன்; அவன் என்பால் பெற்றது எதுவும் இல்லை; திருப்பெருந்துறையில் உறையும் சிவபிரான், அடியவர்களின் உள்ளத்தினையே கோயிலாகக் கொண்டவன், இப்போது என் உடலையும் அவன் இடமாகக் கொண்டருளினான். இங்ஙனம் அருள் புரிந்த அப்பெருமானுக்கு யான் புரியும் கைம்மாறு யாதொன்றும் இல்லை. (35)

(இறைவனை வணங்குவதனால், நமக்குப் பயனேயன்றி, நம்மால் அவனுக்கு யாதொரு பயனும் இல்லை என்பதனை, இப்பாடல் திறம்பட இனிது விளக்குகின்றது.)

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சய சய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன் உடை யாய் என்னைக் கண்டு கொள்ளே.

உடம்பானது சிலிர் சிலிர்த்து, உணர்ச்சிப் பெருக்கத்தினால் நடுநடுங்கி, உன்னுடைய மணம் பொருந்திய மலர் போன்ற திருவடிகளுக்கு என்னுடைய கைகளைத் தலைமேல் வைத்து வணக்கம் செலுத்தி, கண்களில் நீர் ததும்பி, உள்ளமானது, வெதும்பி நின்று, பொய்ம்மைத் தன்மைகள் நீங்கி, உன்னைத் துதித்து 'வெல்க, வெல்க, வணக்கம்' என்று சொல்லி நின்னை வழிபடுகின்ற நல்லொழுக்கத்தினை யான் என்றும் தளரவிட மாட்டேன். என்னை அடிமையாக உடையவனே, என்னை நின் கடைக்கண்ணால் நோக்கிக் காத்தருள்க. (36)

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
கலங்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்(டு)
இனியென்னே உய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே.

துணையற்றவனாகிய நான், பிறவியாகிய பெரிய கடலில், துன்பமாகிய பெரிய அலைகளால் தாக்கப்பட்டுத் துணை ஒன்றும் இல்லாமல், கொவ்வைக் கனியையும் பவளத்தையும் போன்ற சிவந்த இதழ்களை உடைய பரத்தையர் என்கின்ற புயற் காற்றினால் கலக்கப்பட்டு, காமம் என்கின்ற கொடிய சுறு

மீனின் வாயில் அகப்பட்டு, இனி நாம் தப்பிப் பிழைக்கும் வழி ஏது என்று பலகாலும் எண்ணி வருந்தி, ஐந்தெழுத்தாகிய தெப்பத்தைத் துணையாகப் பிடித்துக் கிடக்கின்றேன். எல்லோர்க்கும் முற்பட்டுப் பேரறிவு வாய்ந்தவனே, மூர்க்கனாகிய என்னை, முதலும் முடிவும் இல்லாத வளப்பம் மிகுந்த முத்தியாகிய கரையில் சேர்த்து, நீ ஆட்கொண்டருளினாய். உன்னுடைய அருளின் திறத்தை என்னென்பேன்! (37)

## திருவிசைப்பா :

மன்னுக தில்லை! வளர்கநம்
பக்தர்கள்! வஞ்சகர் போய் அகல!
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

—சேந்தனார்.

தில்லையும் அங்குள்ள கோயிலும் நிலை பெறுக, நம்முடைய அடியவர் திருக்கூட்டம் வளர்ந்தோங்குக, அன்பர்கள் அல்லாத வஞ்சகர்கள் நீங்கி ஒழிக, பொன்னம்பலத்திலே தங்கி உலகமெலாம் விளங்கி வாழ்வுறும் பொருட்டு, அன்னம் போன்ற நடையையுடைய உமா தேவியின் கணவராகிய சிவபிரான், அடியவர்களாகிய நமக்கு அருள் புரிந்தான் ;இனி மேற் பிறவி ஏற்படாதபடி, அதனை அறுத்தொழிக்கும் நெறியை அளித்தருளினான். அத்தகைய பித்தனாகிய இறைவனுக்கு நாம் பல்லாண்டு கூறி, அவனை வாழ்த்துவோம்.

(இது சேந்தனார் பாடியது; திருப்பல்லாண்டு என்னும் பெயருடைய பதிகத்தின் முதற் பாடலாக விளங்குவது. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பெரிய புராணம் என்னும் ஐந்தும், 'பஞ்ச புராணம்' என வழங்கப்பெறும்.

அடியவர்கள் தன்பாற் செய்யும் அன்பிலும், தான் அவர்களின்பாற் பேரன்பு செலுத்தும் அளவற்ற பெரும் பரிவுடையவன் ஆதலின் இறைவனைப் 'பித்தன்' என்றே பெரியோர்கள் பலரும் வழங்குவர்.) (38)

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டு உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

—சேந்தனார்.

நல்லறிவு தரக்கூடிய நூல்களைக் கற்றவராகிய மெய்ஞ்ஞானிகள் அனுபவிக்கும்படியான பேரின்ப உணர்வாகி, கற்பக மரத்தின் கனி போன்றுவிரும்பியவற்றைத் தருபவனை; கரையில்லாத கருணை என்னும் பெருமை பொருந்திய கடல் போன்றவனை, அஞ்ஞானிகள் அறியாத மாணிக்கமலை போன்றவனை, அன்பால் நினைப்பவருடைய மனத்தின்கண் மாணிக்கச் சுடர் போன்று ஒளி வீசுபவனை, பகைவர்களாகிய திரிபுராதிகளின் முப்புரங்களை அழித்த எங்கள் சிவபெருமானை, திருவீழிமிழலையின்கண் மேன்மையுற அமர்ந்தருளிய தலைவனாகிய இறைவனை, எனது மனம் இன்பம் அடையுமாறு பலமுறை தரிசித்து, எனது கண்களும் இன்பம் அடைந்தன. (39)

தந்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்டு
அத்தில்அங்கு ஒருகூறு உன்கண்வைத் தவருக்கு
அமருலகு அளிக்கும்நின் பெருமை
பித்தனென்று ஒருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னி வைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே

—கருவூர்த் தேவர்

நாம் இறைவனிடத்தில் ஒரு சிறிதும் அன்பு செலுத்துவதில்லை. ஆனால் பெண்களிடத்திற் காமங் காரணமாக எவ்வளவோ அன்பு செலுத்தி, அவர்களின் காதலைப் பெற எங்ஙனம் எல்லாமோ பணிவிடைகள் புரிகின்றோம். அங்ஙனம் பெண்கள் பால் நாம் செலுத்துகின்ற அன்பை, ஒரு நூறு ஆயிரம் (இலட்சம்) பாகமாகச் செய்து, அதில் ஒரு சிறு பகுதியை மட்டுமேனும், நாம் இறைவனிடம் செலுத்துவோமானால், அவன் நமக்குத் தேவருலகத்தையே அளித்தருள்வான்; புகழாவிட்டாலும் பித்தன் என்று ஒருமுறை இகழ்ந்தாலும் கூட, அதற்காக மகிழ்ந்து, கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள இறைவன், நம்முடைய பிழைகளையெல்லாம் பொறுத்து நமக்குப் பெரிதும் அருள் புரிவான்.

இப்பாடல், கருவூர்த் தேவரால், கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள சிவபெருமானின் மீது பாடப்பெற்றது. (40)

## திருமந்திரம் :

ஒன்றே குலனும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே.

—திருமூலர்

மக்கள் எல்லோருக்கும் குலம் ஒன்றேயாகும் ; அவர்கள் வணங்கும் கடவுளும் ஒருவரேயாவர். இவ்வுண்மையை நன்றாக நினைந்து உணருங்கள், உணர்ந்து ஒழுகினால் நேரும் தீங்கு எதுவும் இல்லாமற்போம்; பழிபாவங்களுக்கு அனைவரும் அஞ்சுதல் வேண்டும்; அங்ஙனம் அஞ்சி ஒழுகாமல், நாம் சென்று அடைவதற்குரிய நற்பேறு ஒன்றும் உண்டாகாது. இதனை உங்களுடைய மனத்தில், நீங்கள் அசைவற்று விளங்கி நிலைபெறும்படிநினைந்துணர்ந்து உய்தியை அடையுங்கள். (41)

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

அறிவில்லாதவர்கள் அன்பும் சிவமும், தனித் தனியே வேறான இரண்டு பொருள்கள் என்று கூறுவார்கள். அன்பே சிவமாக விளங்குதலை எவரும் அறிந்து கொள்ளவில்லை. அன்பே சிவமாக விளங்குதலை யாரேனும் அறிந்து கொள்வார்களாயின், அவர்கள், அன்பே சிவமாக அமர்ந்திருக்கும் நிலையைப் பெற்றவர்கள் ஆவர். (42)

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.

மனித உடம்பு, ஓர் ஆலயம், அதன்கண் உள்ள இருதயம், இறைவன் எழுந்தருளியுள்ள கருவறை ஆகிய பெரிய கோயில். வேண்டும் நலங்கள் பலவும் வழங்கி நம்மைப் பிரியாமல் இருந்து உதவுபவன் ஆகிய அவ்விறைவனுக்கு, நம்முடைய வாயே கோபுரவாசல் என்று விளங்குகின்றது. இதனை மிகவும் தெளிவாக ஞானத்தால் உணர்ந்தவர்களுக்கு,

உயிர்தான் சிவலிங்கம் எனத் திகழ்கின்றது. வஞ்சகத் தன்மையுடைய ஐந்து புலன்களும், உடம்பாகிய கோயிலில் உள்ள காளாமணி விளக்குகள் ஆகும். (43)

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வீரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வீரே.

வெண்தலைமாலை அணிந்தவன் (கங்காளன்) ஆகிய சிவபெருமான் பூசுகின்ற கவசம் போன்ற திருநீற்றை, ஒளி குறையாமற் பூசி மகிழ்ச்சி யுறுவீர் களேயாயின், பாவங்கள் யாவும் தங்கமாட்டா ; சிவகதி ஆகிய வீடுபேறு எளிதிற் கிடைக்கும் ; அழகு மிகுந்த இறைவனின் திருவடியைச் சேரப் பெறுவீர்கள். (44)

## பதினொன்றும் திருமறை:

'சிந்தனை செய்யமனம் அமைத்தேன்;
செப்ப நாஅமைத்தேன்;
வந்தனை செய்யத் தலையமைத்தேன்;
கை தொழ அமைத்தேன்
பந்தனை செய்வதற் கன்பமைத்தேன்;
மெய் அரும்பவைத்தேன்;
வெந்தவெண் ணீறணி ஈசற்கு
இவையான் விதித்தனவே

—சேரமான் பெருமாள் நாயனார்.

திருநீற்றைத் திருமேனில் அணிந்துள்ள தலைவ னாகிய சிவபெருமானை எஞ்ஞான்றும் நினைப்பதற்கு என்றே என் மனத்தையும், அவன் திருநாமங்களை உச்சரிப்பதற்காகவே என் நாவையும், அவன் திருவடிகளை வணங்குவதற்கு என்றே என் தலையையும், அவனைத் தொழுதற்கு என்றே என் கைகளையும், அவனை வயப்படுத்துவதற் கென்றே என் அன்பினையும், அவன் அருளில் சிலிர்ப் பதற்கென்றே என் மெய்யினையும் உரிமையாக்கி அமைத்து வைத்தேன். (45)

பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்.

—காரைக்காலம்மையார்.

திருநீல கண்டத்தையுடைய வானோர்க்கும் தலைவனாகிய சிவபெருமானே, நிலவுலகில் பிறந்து மொழி பேசக் கற்ற பிறகு, உள்ளத்தில் அன்பு மிக என்றும் நின் திருவடியையே இடைவிடாது பற்றி நின்றேன் ; இருந்தும் என் துன்பங்கள் நீங்கவில்லை; எப்பொழுது என் துன்பங்களைத் தீர்த்தருளத் திரு வுள்ளம் கொள்வாய்? (46)

என்றும் அடியவர் உள்ளத் திருப்பன இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித் துதிப்பன நல்லசங்கத்து
ஒன்றும் புலவர்கள் யாப்புக் குரியன ஒண்கலியைப்
பொன்றும் கவுணியன் சைவ சிகாமணி பொன்னடியே.

—நம்பியாண்டார் நம்பி.

வலிமை சான்ற உலகியல் துன்பங்களைஎல்லாம் திருவருளால் இல்லையாக்கிய கவுணியர் குலத் தோன்றலும், சைவத்தின் தலைமணி போன்றவரு மாகிய திருஞானசம்பந்தப் பிள்ளையாரின் பொன் போன்ற திருவடிகள், எக்காலத்தும் அடியவர்களின் உள்ளங்களில் நிலை பெற்றிருக்கும். இவ்வுலகத்தவ ரால் அன்றலர்ந்த மலர்களைத் தூவித் துதிக்கப் படும்; நன்மை பொருந்திய தமிழ்ச் சங்கத்துள் இடம் பெற்ற புலவர்களது கவிதைப் பொருளுக்கு உரியதாகும். (47)

## பன்னிரண்டாம் திருமுறை :

''மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதி சூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவுகண்டு ஆர்தல்
உண்மை யாமெனில் உலகர் முன் வருக என உரைப்பார்

உலகத்தில் மனிதராகப் பிறந்தவர்கள் பெற வேண்டிய பெரிய பயன், சந்திரனைச் சூடியுள்ள சிவபெருமானின் அடியவர்களுக்குத் திருவமுது செய்வித்து, அவர்கள் மகிழும்படி உபசரித்தல் ; சிவபிரானின் திருவிழாக்களையும், சிவனடியார்களின் திருவிழாக்களையும் கண்களாற் கண்டு இன்பம் அடைதல் ஆகிய இவைகள் தாம் என்பது, உண்மை யாகுமானால், அஃது இவ்வுலக மக்களுக்கெல்லாம் தெளிவாக விளங்கும் பொருட்டு, அவர்கள் முன்னே உயிர்பெற்று, முன்போல் அழகிய உருவங் கொண்டு வருவாயாக என்று, திருஞானசம்பந்தர் பூம் பாவையைப் பதிகம் பாடி உயிர்ப்பித்தருளினார்.

இப்பாடலால்,சேக்கிழார்பெருமான் சம்பந்தர் பாடியருளிய திருமயிலைப் பூம்பாவைப் பதிகத்தின் திரண்ட கருத்தைச் சுருக்கித் தெளிவுற உணர்த்தி அருளியிருக்கின்றார். (48)

''ஆலமே அமுதமாக உண்டு வானவர்க்கு அளித்துக்
காலனை மார்க்கண்டர்க்காக் காய்ந்தனை; அடியேற்கு இன்று
ஞாலம் நின் புகழே யாக வேண்டும்; நான்மறைகள் ஏத்தும்
சீலமே ஆலவாயிற் சிவபெருமானே'' என்றார்.

முன்பு, கொடிய ஆலகாலம் என்னும் நஞ் சினையே அமுதம் ஆகும்படி உட்கொண்டு தேவர் களுக்கு அருள் செய்தாய் ; மார்க்கண்டேயரின் பொருட்டு, இயமன் மீது கோபம் கொண்டு அவனைக் காலால் எற்றினாய், இங்ஙனம் அடியவர் களின் பொருட்டு அநுக்கிரகமும் நிக்கிரகமும் செய் தருளிய இறைவனே! நான்கு வேதங்களும் துதிக் கின்ற சிறப்புடையவனே! மதுரையில் திருவால வாய் என்னும் கோயிலில் உள்ள சிவபெருமானே! உன்னுடைய புகழே உலகமெல்லாம் பரவ வேண் டும். அங்ஙனம் பரப்புவதற்கு எனக்கு நீ அருள் செய்ய வேண்டும்.

(இது, புறச்சமயங்களை வென்று சிவநெறியைப் பரப்ப முற்படும் சம்பந்தர், சிவபெருமானின் திரு வுள்ளக் குறிப்பை அறிய விரும்பிப் பாடிய ''வேத வேள்வியை நிந்தனை செய்'' என்னும் திருப்பதிகத் தின் கருத்தை விளக்கும் முறையிற் சேக்கிழார் பெருமான் அருளியது. சைவம் உலகமெல்லாம் பரவ வேண்டும் என்று விரும்பிய சம்பந்தரின் பரந்த உள்ளத்தை விளக்குவது, நமக்கும் குறிக் கோளாக அமையத் தக்கது.) (49)

''சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனியெதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்ற பேறிதனால்,
எற்றைக்குந் திருவருளுடையேம்;
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற்றொளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம்'' என்பார்.

கழிந்துபோன பண்டைக் காலத்தின்குற்றம் இல்லாத தன்மையும், இனிமேல் எதிர்காலத்தில் உண்டாகப் போகின்ற சிறப்பையும், இன்றுதாங்கள் இம்மதுரை மாநகருக்கு எழுந்தருளி வரப்பெற்ற திறத்தால் நாங்கள் பெற்றவர்கள் ஆயினோம். இனி

எக்காலத்திலும் இறைவனின் திருவருளை உடையவர்களாக விளங்குவோம். அம்மட்டுமோ! தீயதாகிய புறச்சமய நெறியில் அழுந்திவிட்ட எங்கள் பாண்டிய நாடும், எங்களுடைய நல்ல தமிழ் வேந்தனாகிய பாண்டியனும் உய்தியடைந்து, வெற்றிகொள்கின்ற திருநீற்றின் ஒளியினால் விளக்கம் அடைகின்ற மேன்மையினையும் பெற்றுவிட்டோம் என்று கூறினார்.

(மதுரை மாநகருக்கு எழுந்தருளும் சம்பந்தரை, குலச்சிறையார், பாண்டிய நாட்டு அமைச்சர் என்ற முறையில் வரவேற்றுச் சிறப்பிக்கும் முறையில் அமைந்த பெரிய புராணப் பாடல் இது. பெரியவர்கள் யாரையேனும் வரவேற்கும்போது, இப்பாடலை நாமும் ஓதி மகிழலாம்.) *(50)*

நன்மைபெருகு அருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கிமகிழ்ந்தெழும் பொழுதில்
'உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்' என்றவர் தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்.

நன்மைகள் பெருகும்படி செய்கின்ற திருவருளின் நெறிப்படியே, திருநல்லூர்க்குத் திருநாவுக்கரசர் ஆகிய திருத்தொண்டர் வந்தடைந்தார். அங்குள்ள பெருமானைத் தரையில் விழுந்து பணிந்து வணங்கி மகிழ்ந்து எழுந்தார். அங்ஙனம் அவர் எழுந்த சமயத்தில், உன்னுடைய விருப்பத்தினை முடிக்கின்றோம் என்று அருளிச் செய்து, திருச்சத்தி முற்றத்தில் திருநாவுக்கரசரின் தலையின்மீது சிவபெருமான் தன்னுடைய திருவடித் தாமரைகளை வைத்துச் சூட்டியருளினான்.

இறைவன் தனது அடியார்களின் விருப்பங்களை நிறைவேற்றுகின்றான் என்பன முதலிய பல சிறந்த சமய உண்மைகளை, இப்பாடல் இனிது உணர்த்துகின்றது. *(51)*

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவா, நீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க' என்றார்.

புனிதவதியார் என்னும் காரைக்கால் அம்மையார், சிவபெருமானிடத்தில், அழிவில்லாது நிலைபெற்றுள்ளதும், இன்பத்தைத் தருவதும் ஆகிய பக்தியைத் தரும்படி விரும்பிக் கேட்டார்; அம்மட்டில் அமையாமல் மேலும் கேட்கின்றார்: பெருமானே, எனக்குப் பிறப்பில்லாத தன்மை வேண்டும். ஒருகால் மறுபடியும் யான் பிறக்க நேர்ந்தால், அப்பிறவிகளில் யான் உன்னை என்றும் மறவாமல் இருத்தல் வேண்டும்; இதன் மேலும் ஒன்று வேண்டும்! அறத்தின் வடிவமாக உள்ள இறைவனே! நீ திருநடனம் செய்யும் போது அதனைக் கண்டு மகிழ்ந்து பாடித் துதித்துக் கொண்டு, யான் உன் திருவடிகளின் கீழ் எப்போதும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

(காரைக்கால் அம்மையார் இறைவன்பால் வேண்டிக் கொள்ளும் பேறுகளை விளக்குவதாக அமைந்துள்ள இப்பாடல், நாமும் இறைவன்பால் வேண்டிப் பெறத்தக்க பேறுகளை உணர்த்துகின்றது. இப்பாடலை, இடையறாது ஓதினால், அப்பேறுகள் நமக்கு எளிதில் வாய்க்கும் என்பது திண்ணம்.) *(52)*

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று ளார்அடி யார்அவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்.

எக்காலத்தும் எவ்விடத்தும் இன்பவுணர்வு பெருகச் செய்கின்ற இயல்புடையனவாகிய சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் சாதனங்களுடன், ஒப்பற்ற சிவ பரம்பொருளையே காதலித்து வழிபட்டு, உயிர்கள் அனைத்தும் உய்தி பெற்று ஓங்கும் வண்ணம், திருச்சிற்றம்பலவாணரதும், அவர்தம் அடியார்களதும் ஆகிய சிறந்த பெரும்புகழ், இந்நிலவுலகம் எங்கணும் பரந்து நிலவி நிலைபெறுவதாயிற்று. *(53)*



இல்லச் சிறுவர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர், அறங்காவலர் குழுத்தலைவர் K. M. நடராசன் B.A., B.L., உதவி ஆணையர் திரு. N. P. கிருட்டிணன், மகளிர்நல அதிகாரி—இதர அதிகாரி உள்ளனர்

**கருணை இல்லம் சோளிங்கபுரம்**

வடார்க்காடு மாவட்டம் சோளிங்கபுரம் அருள்திரு இலக்குமி நரசிம்ம சுவாமி திருக்கோயிலில் டாக்டர் கலைஞர் அவர்களின் 52-வது பிறந்த நாள் விழாவினையொட்டி திறக்கப்பட்ட 52 கருணை இல்லங்களில் சிறுவர்களுக்கான கருணை இல்லத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. J. R. இராமநாதன் I.A.S. திறந்துவைத்தார்.

Grams : "SAKTHI" Phones : 2771, 2881 & 2991.

# Sri Sakthi Textiles Limited,

**POST BOX NO. 36,**

**POLLACHI—642001.**

* *

**TEXMARK : 3642.**

| | |
|---|---|
| Total Ring Spindles installed | 25032. |
| Total Ring Spindles at work | 25032. |
| Total Doubling Spindles at work | 3208. |

**MANUFACTURING YARN IN COUNTS :**

| | | |
|---|---|---|
| Carded yarn in hanks | : | 60s. |
| Combed yarn in hanks | : | 60s. & 80s. |
| Doubled yarn in hanks | : | 2/20s & 2/60s. |
| Cone yarn in counts | : | 34s, 60s & 80s. |

**FOR SRI SAKTHI TEXTILES LIMITED,**

*Managing Director.*

# காலம் சொல்லும்

கே.எஸ்.ஜெகன்னதன்

கவிதை படிப்பதற்கு அழகாக இருக்கிறது. அழகான கவிதையில் கருத்தும் இல்லாமல் சந்தமும் தவறியிருந்தால் அதை ஏற்றுக்கொள்ள முடிவதில்லை.

அழகான ஒன்றையே மனிதன் எப்போதும் விரும்புகிறுன். அந்த அழகே அவனை அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்கிறது என்பதை எண்ணிப் பார்க்க மறந்துவிடுகிறுன்.

வீணை அழகாக இருக்கிறது. அதை மீட்டுகின்ற விரல்கள் அழகாக இருக்கின்றன. விரல்களுக்குரியவரும் அழகாக இருக்கின்றுர்.

வீணை மீட்டப்படுகின்றது. அழகான அந்த வீணை மீட்டப்படும்போது ராகங்கள் கேட்பதில்லை. ஏழு சுவரங்களையும் தாண்டி ஏதோ ஒரு ஒலி கேட்கிறது.

அதுதான் அபஸ்வரம்.

அபஸ்வரம் எழுந்துவிட்ட இசையை ரசிக்க முடியாது. அந்த இசையால் இன்பம் காண முடியாது.

அழகான எல்லாமே ஆராதிக்கப்பட வேண்டியவையல்ல.

அர்த்தமற்ற கவிதை சிறப்படைய முடியாது.

முறையற்று மீட்டப்படும் நாதம் எந்த ராகத்திலும் சேரவும் முடியாது.

கோபுரத்திலே இருக்கின்ற கலசங்கள் அந்தக் கோபுரத்திற்கு எழில் சேர்க்கிறது.

கலசமில்லையேல் கோபுரத்துக்கு எழில் இல்லை.

ஒன்றுேடொன்று சேரும்போதுதான் அது நிறைவு பெறுகிறது.

மானிட வாழ்க்கையில் வாழ்வை இரு கூருகப் பிரித்த சான்றுேர்கள் துறவு வாழ்க்கையைவிட இல்வாழ்க்கைதான் வாழ்வை நிறைவுபடுத்துகிறது என்று கருதுகின்றனர்.

வாழ்க்கையில் இல்லற வாழ்வு இனிதாக அமையப் பெறவேண்டும்.

இனிதாக அமையாத இல்வாழ்க்கை வீணையிலிருந்து எழும் அபஸ்வர ஒலியாகிறது.

அதனுல் யாருக்கும் பயன் இல்லை.

இரவையும் பகலையும் மாறிமாறி அவனிக்கு அளிக்கும் இறைவன் வாழ்விலும் இன்பம் துன்பம் இரண்டையும் தருகிறுன்.

இன்பத்தை மட்டுமே நாம் துய்த்துக் கொண்டிருந்தோமானுல் வாழ்வே நமக்குத் தெவிட்டிவிடும் என்பதால்தானே என்னவோ துன்பத்தையும் தருகிறுன்.

இன்பமும் துன்பமும் இயற்கையின் நியதி என்று கூறுகிறேம். அந்த இயற்கையின் சிருஷ்டி கர்த்தா யார்?

பூமண்டலத்திலே இருக்கின்ற நாம் பொங்கி வருகின்ற உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் தவிக்கின்றேமே ஏன்?

வாழ்க்கை என்பதே ஒரு கற்பனை. வாழ்வாவது மாயம். அழிவது திண்ணம் என்பதை அறிந்தும் ஆசைகளை வளர்த்துக் கொள்கிறேம் ஏன்?

ஆசைகளும் உணர்ச்சிகளும் இல்லையேல் இன்பமும் துன்பமும் தலைநீட்டாது.

இன்பமும் துன்பமும் இல்லாத வாழ்க்கையில் பிடிப்பு என்பதே இருக்காது.

பிடிப்பில்லாத வாழ்க்கை சாறு அற்ற கரும்பாகும்.

வாழ்க்கையில் பிடிப்பு ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான் மனிதனுக்கு உணர்ச்சிகளையும், ஆசைகளையும், இறைவன் உருவாக்கி வைத்தான்.

காலத்தால் கணக்கிட முடியாதபடி மனித இனத்தைப்படைத்துப் பாதுகாத்து வருபவனும் அவனே.

மனிதன் பிறக்கும்போதே அவனது வாழ்க்கை முறையும், முடிவும் அவனுல் நிர்ணயிக்கப்படுகிறது.

நிர்ணயிக்கப்பட்ட வாழ்க்கையில்தான் மனிதன் வாழ்கிருனே தவிர, தன்னுல் தான் எல்லாம் என்று மனிதன் எண்ணுவானேயானுல் அது அவனது அறியாமையே தெளிவாக்குகிறது.

நான்தான் எல்லாம் செய்கிறேன், என்னுல் தான் எல்லாம் நடக்கிறது என்று எத்தனேயோ பேர் சொல்வதை நாம் கேட்கிறேம். இவர்கள் எல்லாம் உண்மையைப் புரிந்துகொள்ள முடியாதவர்கள். இவர்களுக்கே ஒரு சோதனே வரும்போது இறைவனிடத்தில் கைதொழுது யாசிக்கின்ருர்கள்.

நான்தான் எல்லாம் என்பவர்கள் ஏன் இறைவனிடத்தில் யாசிக்க வேண்டும். அவர்களே செயல்பட வேண்டியதுதானே.

இங்கேதான் காலத்தாலும் அழிக்க முடியாத ஒரு தத்துவத்தை நமக்கு இறைவன் உணர்த்துகின்ருன்.

பிறப்பு எப்படி இறைவனது கருணேயினுல் அளிக்கப்பட்டதோ, அதுபோலத்தான் வாழ்க்கையின் நிகழ்ச்சிகளும், அவன் கருணேயால் அளிக்கப்படுவதாகும்.

இன்னல்களே அளிப்பது வாழ்க்கையில் மனிதன் எதிர்நீச்சல் போடக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்.

இதைப் புரிந்திடாத சில கோழைகள் தங்களது வாழ்க்கையையே முடித்துக் கொள்கின்றனர்.

எதையும் எதிர்த்துச் செயல்படும் தன்மை இறைவனுல் இயற்கையாகவே ஒவ்வொரு மனிதனுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது.

இதை மனிதன் உணர்ந்து அதைக் காலம் அறிந்து செயலாக்கினுல் வாழ்க்கையில் அவன் நிச்சயம் முன்னேற முடியும். எடுத்துக்கொண்ட பிரச்சினேகளேயும் அவன் சுலபமாகத் தீர்க்க முடியும்.

இறைவன் காலத்தைக் கணக்கிட்டு நமக்குத் தருகிருன்.

அந்தக் காலத்தை நாம் விரயம் செய்யாமல் விரைந்து செயல்பட வேண்டும்.

அப்போது இறைவனுல் வழங்கப்பட்ட வாழ்க்கையின் நெளிவு சுழிவுகளே நாம் அறிந்து வாழ முடியும்.

இறைவனுல் அளிக்கப்பட்ட காலம் சொல்லும் பாடத்தை உணர்வோம். வாழ்க்கையின் தத்துவங்களே அறிந்து அதன்படி நடப்போம்.


# அருள் தரும் அஷ்டபுஜ வக்கிரகாளி அம்பாள் திருக்கோயில்

## திருவக்கரை.

வர்லாறு:

அருள்தரும் அஷ்டபுஜ வக்கிரகாளி அம்மன் திருக்கோயில், மைலம் சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்குக் கிழக்கே 12 கி.மீ. தூரத்தில் உள்ளது. அருள்மிகு வக்கிரகாளி அம்மனுக்குப் பௌர்ணமி அன்று மக்கள் திரளாக இரவு வழிபாட்டுக்கு வருகிருர்கள். அவர்கள் கோரிக்கையை ஏற்று அருள்மிகு வக்கிரகாளி அம்மன் அருள்புரிகிருள். சித்திரை பௌர்ணமியன்று பிரார்த்தனேத் திருவிழா நடத்தப்படுகிறது. ஆதலால் எண்ணியதை ஈடேற்றி வைக்கும் அருள்மிகு வக்கிரகாளி அம்மனின் அருளேப் பக்தர்கள் பெற்றுய்யுமாறு வேண்டப்படுகிறது.

**எஸ். கோவிந்தசாமி கண்டர்,**
நிர்வாக அறங்காவலர்,
திருவக்கரை.

# மறவாதீர்கள்:

# உங்கள் மகள் ஒருநாள்

# மணமகளாக அமர வேண்டியவள்!



திருமணம் என்றாலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்றால்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கினால் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்றோம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002

# கருக்கினில் அமர்ந்தவள் கோயில்

ஏ. ஏகாம்பரநாதன் எம்.ஏ.

தமிழக வரலாற்றில் காஞ்சி மாநகரம் கி.பி. 6-ம் நூற்றாண்டிலிருந்து 9-ம் நூற்றாண்டு வரை பல்லவர்களது தலைநகராக விளங்கியது. கி.பி. 9-ம் நூற்றாண்டிலிருந்து 12-ம் நூற்றாண்டு வரை இந்நகர் சோழராட்சியிலும், அதற்குப் பின்னர் விசய நகர மன்னராட்சியிலும் இருந்தது. இம்மன்னர்களது வரலாற்றுச் சின்னங்களாக விளங்குபவை இப்பகுதியிலுள்ள கோயில்களாகும். இத்தகைய கோயில்களுள் காஞ்சிபுரத்தில் தென்மேற்குப் பகுதியிலுள்ள கருக்கினில் அமர்ந்தவள் கோயில் தனிச் சிறப்பு உடையதாகும்.

தேவர்களுக்கும், மக்களுக்கும் இடையறாத் துன்பம் விளைத்த மகிடாசுரனைக் கொன்று வெற்றி வாகை சூடிய கொற்றவை இப்பகுதியிலுள்ள பனைமரத்தின் கருக்கினில் இனிதுறைந்ததால் இக்கோயிலுக்குக் கருக்கினில் அமர்ந்தவள் கோயில் எனப் பெயர் ஏற்படலாயிற்று என்னும் செவிவழிச் செய்தி நிலவிவருகிறது.

**கோயில் :**

இக்கோயில் சதுர வடிவமுடைய கருவறையும், நீள் சதுர வடிவ அர்த்தமண்டபமும், மகாமண்டபமும் கொண்டது. மகாமண்டபத்துள் ஆறு தூண்களுள்ளன. அவற்றில் இரண்டு பிற்கால்த்தில் எழுப்பப்பட்ட சுவருள்மறைக்கப்பட்டுள்ளன. தூண்கள் உருண்டையாகவும், மேற்பகுதியிலுள்ள போதிகை நீள் சதுரமாகவும், அதன் வெளிப்புற விளிம்பு முக்கோணப் பகுதியாகவும் காணப்படுகின்றன. மகாமண்டபத்தை அடுத்துப் பிற்காலத்தில் கட்டப்பட்ட பெரிய மண்டபம் ஒன்றும் உள்ளது. இம்மண்டபத்துள் இறைவியின் ஊர்தியாகிய சிங்கமும், அதற்குப் பின்னால் பலிபீடமும் காணப்படுகின்றன.

கோயிலின் அடித்தளம், உபானம், உபபீடம், குமுதம், பத்மம், கண்டம், பட்டிகை முதலிய பகுதிகளைக் கொண்டது. குமுதப் படை அறுகோண வடிவமாகக் காணப்படுகிறது. கருவறையின் வெளிப்புறச் சுவர்களிலுள்ள அரைத் தூண்கள் கால், கும்பம், கலசம், பலகை, கழுத்து, போதிகை முதலிய பகுதிகளை உடையவை. கொடுங்கையின் கீழ்ப் பூத கணங்களும், மேற்புறம் யாளிகளும் வரிசையாக உள்ளன. கோயிலின் விமானம் மூன்று தளங்களை உடையது. ஒவ்வொரு தளத்திலும் சதுர வடிவ, நீண்ட சதுர வடிவச் சிறு கோபுர அமைப்புகள் காணப்படுகின்றன. இச் சிறு கோபுர அமைப்புகளின் இடைவெளிப் பகுதியில் இறைவியின் பல்வேறு வடிவங்களாகிய துர்க்கை மகிடாசுரமர்த்தினி, பிராமணி, வராகி முதலிய சுதை உருவங்கள் உள்ளன. சிகரம் கூண்டு வடிவ அமைப்புடையது. இதன் வெளிப்புறத்தில் சிங்கமுக வளைவுகள் உள்ளன. சிகரத்தின் மேல் மூன்று கலசங்கள் காணப்படுகின்றன.

**சிற்பங்கள் :**

கருவறையில் ஏறத்தாழ 5 அடி உயரமுடைய மகிடாசுரமர்த்தினியின் சிற்பம் காணப்படுகிறது. இவ்விறைவி, எட்டு திருக்கரங்களுடன், வீழ்ந்து கிடக்கும் மகிடாசுரன் மீது அமர்ந்த நிலையில் காணப்படுகிறாள். அவளது மேற்புற வலது கை தலைக்கருகில் ஓங்கிய நிலையிலுள்ளது. பிற கைகள் சிதைந்துள்ளன. இக்கலைச் செல்வம் காலத்தின் போக்கினால் தேய்வுற்றும், சிதைந்தும் காணப்படுகிறது.

அர்த்த மண்டபத்தின் நுழைவாயிலில் இருமருங்கிலும் இரண்டு துவார பாலகர்களும், இரண்டு காவற்பெண்டிரும் காணப்படுகின்றனர். மகாமண்டபத்தின் நுழைவாயிலில் இரு பக்கங்களிலுள்ள காவற் பெண்களின் சிற்பங்கள் பிற்காலத்தைச் சார்ந்தவை.

கருவறையின் வெளிச் சுவர்களிலும், அர்த்த மண்டபத்தின் புறச்சுவர்களிலும் உள்ள தேவகோட்டங்களில் அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. அர்த்த மண்டபத்தின் கீழ்ப்புறத் தேவகோட்டத்தில் நான்கு கரங்களுடைய விநாயகர் சிற்பம் அமர்ந்த நிலையிலுள்ளது. இதன் மேற்புற வலக் கையில் அங்குசமும், இடக் கையில் அக்கமாலையும், கீழ்ப்புற வலது கையில் ஒடிந்த தந்தமும், இடதுகையில் மோதகமும் காணப்படுகின்றன. விநாயகரது தலைக்கு மேலுள்ள பகுதியில் இரண்டு சாமரங்களும், அவற்றிற்கிடையில் கொற்றக் குடையும் உள்ளன. தேவகோட்டத்தின் மேற்பகுதியிலுள்ள தோரணம் அழகிய செதுக்கு வேலைப்பாடுகளுடன் விளங்குகிறது. கருவறையின் கீழ்ப் புறத் தேவகோட்டத்தில் பிற்காலத்தில் நிறுவப்பட்ட மகிடாசுரமர்த்தினியின் சுதை உருவம் உள்ளது. தென்புறத் தேவகோட்டத்தில் இப்போது சிற்பம் எதுவும் இல்லை; மேற்

புறத்தேவகோட்டத்தில் காணப்பெருந்தலையின் மீது நிற்கும் கொற்றவையின் சுதை உருவம் உள்ளது. இதுவும் பிற்காலத்தில் நிறுவப்பட்டதாகும். அர்த்த மண்டபத்தின் மேற்புற தேவ கோட்டத்தில் தக்கணாமூர்த்தியின் அழகுமிக்க சிற்பம் அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. இச்சிற்பம் நான்கு கரங்களை உடையதாய் மேற்புற வலது கையில் சூலத்தினையும், இடதுகையில் பாசத்தினையும் பெற்றுள்ளது. கீழ்ப்புற இடது கை தொடையின் மீது வைக்கப்பட்டுள்ளது. ஆனால் கீழ்ப்புற வலது கை சிதைக்கப்பட்டுள்ளது. இறைவனின் தலைமயிர் சுருள் சுருளாகக் காணப்படுகிறது. இச்சிற்பத்தின் தலைக்கு மேற் பகுதியில் இரு சாமரங்களும், அவற்றிற்கிடையில் கொற்றக் குடையும் உள்ளன. தேவ கோட்டத்தின் மேல் பகுதியிலுள்ள தோரணம் மிக அழகுறச் செதுக்கப்பட்டுள்ளது.

மகாமண்டபத்தினை அடுத்த பிற்காலத்து மண்டபத்தின் கீழ்ப்புற உட்சுவரில் நாற்கரங்களுடைய, அமர்ந்த நிலையில் காணப்படும் சாமுண்டியின் சிற்பம் சலவைக் கல்லால் செய்யப்பட்டது. இச்சிற்பத்தின் கைகளும் சிதைந்துள்ளன. இம்மண்டபத்தின் மேற்புற உட்சுவரில் நிற்கும் நிலையிலுள்ள, நாற்கரங்களுடைய விநாயகர் சிற்பம் ஒன்றும் காணப்படுகிறது. பலிபீடத்தின் மீது இரு ஆடவரது தலைகள் மட்டும் சிற்பங்களாகச் செதுக்கி வைக்கப்பட்டுள்ளன. இக்கோயிலிலுள்ள மகிடமர்த்தினிக்கு ஆடவர் இருவர் தங்களது தலைகளை அரிந்து பலியாக இட்டனரென்றும், அதனால் அவர்களது தலைகள் சிற்பங்களாக இடம் பெற்றனவென்றும் கூறப்படுகிறது. எனவே, கொற்றவைக்குத் தலைப் பலியிடும் வழக்கம் பிற்காலத்திலும் இருந்தமை இச்சிற்பங்களால் நன்கு விளங்கும்.

கோயிலின் முற்புறத்தில் தனியாகச் சேட்டை தேவியின் சிற்பம் ஒன்று காணப்படுகின்றது. தடித்த உடலுடன் தொங்கிய மார்புகளுடன் அகன்று தடித்த கால்களுடன் விளங்கும் சேட்டை தேவியின் வலது புறத்தில் நந்தி முகத்தினையுடைய ஆணும், இடது புறத்தில் ஒரு பணிப் பெண்ணும் காணப்படுகின்றனர். இப்பெண்ணுருவின் தலைக்கு மேற்புறத்தில் சேட்டை தேவியின் காகக்கொடி செதுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய சிற்பங்களன்றி, இரண்டு புத்தர் சிலைகள் தற்காலத்தில் கட்டப்பட்ட பீடமொன்றில் காணப்படுகின்றன. அவற்றினுள் ஒன்று யோக நிலையிலும், மற்றொன்று பூமியினைக் கையால் தொடும் நிலையிலும் உள்ளன. இவ்விரு சிலைகளும் காமாட்சியம்மன் கோயிலின் அருகிலிருந்து கொணரப்பட்டவை என்று கூறப்படுகிறது.

## கலைப்பாணி :

இக்கோயிலிலுள்ள அரைத் தூண்கள் கால், கலசம், கும்பம், கழுத்து, பலகை, போதிகை முதலிய பகுதிகளையுடையதாய் சோழர் காலக் கோயில்களிலுள்ளவைகளைப் போன்று காணப்படுகின்றன. தேவ கோட்டங்களிலுள்ள விநாயகர் சிற்பமும், தக்கணாமூர்த்தியின் சிற்பமும் சோழர் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. இச்சிற்பங்களிலுள்ள மகுடம், சுருள் சுருளான தலைமயிர், பூணூல், சாமரம், குடை முதலியன, சோழர் காலச் சிற்பங்களிலுள்ளவைகளைப் போன்று அழகுற அமைக்கப்பட்டுள்ளன. தக்கணாமூர்த்தி அமைதி, ஞானம் முதலிய குணங்களையும், விநாயகர் கம்பீரமான தோற்றத்தினையும் உடையவர்களாகக் காணப்படுகின்றனர். தேவகோட்டத்தின் மேலுள்ள தோரணங்கள் சிறந்த வேலைப்பாடுகளுடன், நடுவில் சிறிய சிற்பங்களைக் கொண்ட வட்டத்தினையுடையனவாக விளங்குகின்றன.

## கல்வெட்டுக்கள் :

கோயிலின் அடித்தளத்திலுள்ள குமுதப் படையிலும், அதற்கு மேலுள்ள பகுதிகளிலும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. ஆனால் சில பகுதிகளில் காரை பூசப்பட்டுள்ளதால் எழுத்துக்கள் மறைக்கப்பட்டுள்ளன. குமுதப் படையிலுள்ள கல்வெட்டு முதலாவது இராஜேந்திர சோழனது 13-வது ஆட்சியாண்டில் (கி.பி. 1025) பொறிக்கப்பட்டதாகும். இக்கோயிலின் பெயர் கருக்கமர்ந்தபட்டாரியார் கோயில் எனவும், மூலத்தானத்திலுள்ள இறைவி சிரஸத்திற் நின்றருளிய பட்டாரியார் எனவும், காஞ்சி நகரம் ஜயங்கொண்ட சோழமண்டலத்தில் உள்ள எயிற்கோட்டத்தின் ஒரு பகுதி எனவும் இக்கல்வெட்டால் அறிய வருகிறோம். இன்னும் இராஜேந்திர சோழனது 13-வது ஆட்சியாண்டு, 170-வது நாளில் திருமந்திரவோலை நாயகம் காங்கேய குலகாலனது எழுத்தினால், சபையின் திருமுகப்படி இக்கோயிலுக்குப் பொன் வழங்கியதையும் அறிகிறோம். அடுத்துள்ள கல்வெட்டு ஸ்ரீ கோதைப் பிராட்டியார் என்பவரது விண்ணப்பத்தாலும், ஆலப்பாக்க விசையநல்லுழான் ஆணத்தியாலும் இக்கோயிலுக்கு நிலங்கள் கொடுத்ததைக் குறிக்கின்றது. கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களின் விவரங்களடங்கிய பகுதி காரை பூசப்பட்டு மறைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் அடித்தளத்தில் பூசப்பட்டுள்ள காரை நீக்கப்படுமாயின் கோயில் பற்றிய செய்திகள் இன்னும் விளக்கமாக வெளிக் கொணப்படும் என்பது உறுதி.

# இல்லங்களைப் பொலிவுறச் செய்யும் சிறந்த இல்லம் — காதி கிராப்ட்

கோடைக்கேற்ற கதர் பருத்தி வகைகள் கண்ணைக் கவரும் வண்ண வண்ணப்பட்டு தினுசுகள், தாகம் தணிக்க பதநீர், சுவை மிகுந்த தேன், அக்மார்க் செய்யப்பட்ட செக்கெண்ணெய், உடலுக்கு உறுதி அளிக்கும் பனைவெல்லம், மணமும், அழகும் பெருக்கும் குறிஞ்சி வாசனை சோப்பு, வெள்ளை வெளேர் சலவைக்குக் கோபுரம் சோப்பு, சிறந்த முறையில் செய்யப்பட்ட காலணிகள், தோல் பொருட்கள், வேலைப்பாடு மிக்க மண்பாண்டங்கள், இல்லத்தை அலங்கரிக்க எழில்மிகு மரச் சாமான்கள், பிரம்பு, மூங்கிலிலான பொருட்கள் மலிவு விலை தீப்பெட்டிகள், அழைப்பிதழ் அச்சிட கைக்காகிதங்கள்.

தமிழகமெங்கும் அமைந்துள்ள 180

**காதி கிராப்ட்** களிலும்

மலிவு விலையில் கிடைக்கும்.

வாங்கிப் பயன் பெறுவீர்!

கிராமக் கைவினைஞர்களை ஊக்குவிப்பீர்!



வெளியீடு: தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

# அடியார்க்கு நல்லபெருமாள்!

சம்பந்த சரணலயன்

''மூதுணர்ந்த தியான பூரண
ஞான முண்டக மீதி லேறிய
மோன சுந்தர யோக நாயக''

என்று தாம் அருளிய திருப்புகழின் தேன் மய மான வரிகளுக்குத் தாமே பொருளாக விளங்கு பவர் அருணகிரிப் பெருமான். அவர் முருகப் பெருமானுக்கு அள்ளி வழங்கும் அருமைத் திரு நாமங்கள் கணக்கிலடங்கா. அந்தத் திருப் பெயர்களெல்லாம் ஆன்ம ஞானமாகிய கற்பகத் தருவின் பூங்கொத்துக்களிலிருந்து பெருகும் தேனைப் போல் அடியார் உள்ளங்களில் என் றென்றும் தித்தித்துக் கொண்டிருப்பவை. முருகச் சிம்புள், கடவுட் சக்கரவர்த்திப் பெரு மாள், குறத்தி கிங்கரன், செந்தமிழ்ப் பெரு மாள், நிர்வசன ப்ரசங்க குருநாதன் என்றெல் லாம் திருப்புகழில் அமைந்திருக்கும் திருநாமங் களின் பொருட் செழுமையை உணர உணர உள்ளத்திலே ஒவ்வொரு பெயருக்கும் ஒவ்வொரு பூ மலர்வது போன்ற உணர்வு ஏற்படுகிறது. அந்தப் பூவின் தேன் உள்ளத்திலேயே பெருகித் திடப்படும்போது அருணை வள்ளல், 'உண்ட நெஞ்சறி தேனே'' என்று செந்திற் பெருமானை அழைப்பதன் உட்பொருளும் புலனுகிறது.

''முடியாப் பிறவிக் கடலிற் புகார்
முழுதும் கெடுக்கும்
மிடியாற் படியில் விதனப்படார்
வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள்
அவுணர் குலமடங்கப்
பொடி யாக்கிய பெருமாள்
திருநாமம் புகல்பவரே''

என்பது கந்தர் அலங்காரத்தில் வரும் ஒரு காவியப்பாட்டு. முருகனின் திருநாமங்களை அன்போடு மனனம் செய்வதால் என்னென்ன நன்மைகளைப் பெறலாம் என்பதை முதலில் கூறி அதற்குப் பிறகு இன்னின்ன திருப்பெயர்களைக் கூறுக என்று நமக்கு வழிகாட்டியருள்பவர் போன்று பரமகுருநாதரான அருணகிரிப் பெரு மான் இங்கே மூன்று திருப்பெயர்களைக் குறிப் பிடுகின்ருர். வெற்றிவேற்பெருமாள், அடி யார்க்கு நல்லபெருமாள், அவுணர்குலம் முழு வதையும் பொடியாக்கிய பெருமாள் என்ற இம் மூன்று திருப்பெயர்களும் ஒன்றன் பின் ஒன்ருக அமைந்திருக்கும் நேர்த்தி இருக்கின்றதே, அது மிக மிக அருமை.

இந்தப் பாடலைக் காவியப்பாட்டு என்று குறிப்பிட்டதன் காரணமே இந்த நேர்த்தி தான். ஏனெனில் கந்த புராணக் காவியச் செய்தி முழுவதும் இந்த மூன்று திருப்பெயர் களில் அடங்கியுள்ளது. மூன்று திருப்பெயர் களும் இறைவனின் மூன்று கண்களைப் போன் றவை. இப்பெயர்களுள் 'அடியார்க்கு நல்ல பெருமாள்' என்பது நடுவில் அமைந்து, பெரு மானின் நெற்றிக்கண்போன்றுவிளங்குகின்றது. நெருப்பு மயமான நெற்றிக் கண் ஆபத்தா னதோ தகிக்கக் கூடியதோ என்று எண்ணக் கூடாது. அது கருணையின் ஊற்று. திருச் சடையில் கங்கை தேங்கியிருப்பது போன்று நெருப்புக் கண்ணில் கருணை நீர் தேங்கியுள்ளது. நெருப்பிலிருந்து நீர் தோன்றும் என்பது சைவ சித்தாந்த முடிபுதானே! 'கருணை மேருவே தேவர் பெருமாளே' என்று அருணைப் பெரு மான் புகழ்வதற்கேற்பக் கருணையே வடிவமான முருகப் பெருமானை உலகோர்க்களித்ததே அந்த நெற்றிக் கண்தானே! எனவே நெருப்புக் கண்ணில் கருணை நீராக உற்பவித்த கந்தப் பெருமானுக்கு நெற்றிக் கண் போன்று அமைந் திருக்கும் 'அடியார்க்கு நல்ல பெருமாள்' என்ற பெயர் எத்துணைப் பொருத்தமாகிறது! இந்தத் திருப்பெயரின் விளக்கத்தையே இனிக் காண இருக்கின்ருேம்.

விசித்திரமான சொல்லச் சொல்லத் தெவிட்டாத இனிய சொற்ருெடர்களை வழங்கு வதில் அருணகிரிப் பெருமானுக்கு நிகர் அவரே. ''வாக்கிற்கு அருணகிரி'' என்று நம் முன்னேர் எத்தனை நயமாக உணர்ந்து புகழ்ந்து உள்ளனர். நாமெல்லாம் தேவார திருவாசகங் கள் என்றும் சைவத் திருமுறைகள் என்றும் கூறுவதை அருணகிரிப் பெருமான் எவ்வாறு கூறுகிருர். ''சிவஞான காவியம்'' என்று கம்பீ ரத்தோடு கூறுகிருர்.

''பூரணச்சிவ ஞான காவியம்
ஓதுதற்புணர்வான நேயர்கள்
பூசுமெய்த்திருநீறு......

காசித் தலத்துத் திருப்புகழில் தமிழ் மணக்கும் இவ்வடிகள் வருகின்றன. அருணைப் பெருமா னுக்குச் சிவஞான காவியமாகிய தேவாராதி திருமுறைகளில் மிகுந்த ஈடுபாடு உண்டு. முக்கி யமாகத் திருஞான சம்பந்தர் தேக்கிவைத்திருக் கும் சிவகங்கை போன்ற செந்தமிழ்த் தடாகத் தில் 'அரச அன்னம்' போன்று திளைத்திருந்தவர்

அவர். திருஞானசம்பந்தரைத் தவிர்த்து வேறு தெய்வமே இல்லை என்று ஆணையிட்டுக் கூறிய வர் அவர். திருஞானசம்பந்தரை முருகப் பெருமானாகவே கருதி 'கவிவீர குருநாதா' என்றும் 'கவிராஜராஜப்பெருமாள்' என்றும் மெய் சிலிர்க்கப்பாடி உளங்குளிர்ந்தவர் அவர். இவ்வாறு திருஞான சம்பந்தரிடம் மிகவும் ஈடுபாடு கொண்ட அருணைப் பெருமான் 'அடியார்க்கு நல்லபெருமாள்' என்ற திருப்பெயரைக் குருநாதரான கவிராஜனிடமிருந்த கற்றுக் கொள்கிறார் என்று கூறலாம்.

''விண்ணுலா மதி சூடி வேதமே
பண்ணுளார் பர மாய பண்பினர்
கண்ணுளார் கரு வூருளானிலை
அண்ணலார் அடியார்க்கு நல்லரே''

(இரண்டாம் திருமுறை 28-4)

என்பது திருஞானசம்பந்தரின் தெள்ளமுத வாக்கு. ''அடியார்க்கு நல்லார்'' என்ற திருப்பெயர் சிவபெருமானுக்குப் பொருந்துவது போன்றே குமரப் பெருமானுக்கும் பொருந்துகிறது. 'மரபுக்கு உச்சித பிரபு' அன்றோ அவர்!

அடியார்க்கு நல்ல பெருமாள் என்ற திருப்பெயர் அருணகிரிப் பெருமானுக்கு மிகவும் இனிக்கின்ற ஒன்று எனக் கூறலாம். இதே திருப்பெயரையும் இதன் பொருள் பொதிந்த வேறு பல சொற்றொடர்களையும் அருணகிரிப் பெருமான் பல திருப்புகழ்ப் பாடல்களில் குறித்துப் பாடியுள்ளார்.

''அடிநாட்கள் செய்த பிழை நீக்கி என்னை
அருள் போற்றும் வண்மை தரும் வாழ்வே
அடிபோற்றி அல்லி முடி சூட்ட வல்ல
அடியார்க்கு நல்ல பெருமாளே''

(320)

''அருள்காட்டு கல்வி நெறிகாட்டு செல்வ
அடல்காட்டு வல்ல சுரர்கோபா
அடிபோற்றி அல்லி முடிசூட்ட வல்ல
அடியார்க்கு நல்ல பெருமாளே

(645)

''அலைகோட்டு வெள்ள மலைமாக்கள் விள்ள
மலைவீழ்த்த வல்ல அயில்மோகா
அடிபோற்றி அல்லி முடிசூட்ட வல்ல
அடியார்க்கு நல்ல பெருமாளே

(1133)

''அரிவை பக்கம் உய்ய உருகிவைக்கும் ஐயர்
அறியமிக்க உண்மை அருள்வோனே
அறிவினுக்குள் என்னை நெறியில் வைக்க வல்ல
அடியவர்க்கு நல்ல பெருமாளே ''

(1156)

''துரிதமிகு நிருதர்புர சூறைக் காரப் பெருமாளே
தொழுதுவழி படும் அடியர் காவற்காரப்
பெருமாளே

(1158)

என எண்ணிறந்த பாடல்களில் இக்கருத்தை வைத்துப் பாடியுள்ளார் அருணை வள்ளல். அடியார்க்கு நல்ல பெருமாளாக முருகன் எவ்வாறெல்லாம் விளங்குகின்றான் என்பதை அருணைப் பெருமானின் திருப்புகழ் வாக்கைக் கொண்டே இனிக் காணலாம்.

(1) மிகவும் தீனனாக, குறை மிகுந்தவனாக, அறியாமை மிகுந்தவனாக, ஆசாரக் குறைவு உள்ளவனாக, புலையனாக, பொய்யனாக இருப்பினும் அவன் ஆசற்ற கதி பெற்று உய்யவேண்டி அவனுக்கும் அருள் புரிந்து அவன் வேண்டியவற்றை வேண்டியவாறே வழங்குதல் முருகனின் தலைமைக் குணம். ஆசார மிகுதியோடு அன்பு உள்ளத்தால் இயல் தமிழ் கொண்டும் இசைத் தமிழ் கொண்டும் தன்னைத் துதிக்கும் எண்ணற்ற அடியார்களைக் காட்டிலும் அவன் மேலே கூறப்பட்ட இழி குணங்களையுடைய ஏழைக்கே முதலில் கருணை வழங்குகின்றான்.

''இயல்பல கலைகொடு இசைமொழிபவரினும்
ஏழைக்கிரங்கும் பெருமாளே

(1166)

(2) முருகனை நீண்ட காலம் துதித்தும், நம் ஆராய்ச்சிக்குப் புலப்படாத சில காரணங்களால், அடியவர் சிலர்க்கு அவர் வேண்டுகோள் விரைவில் நிறைவேறாமற் போவதும் உண்டு. காலம் கடந்தாயினும் கட்டாயம் நிறைவேறும். அந்தச் சமயத்தில் அடியவர் வெறுப்புக் கொள்ளக்கூடாது. ஆண்டவன் சோதிக்கின்றான் என்று மன அமைதியோடு இருக்க வேண்டும். ஆயினும் தனக்குச் சீக்கிரமாக முருகன் அருள் புரியவில்லையே என்று கருதி ஓர் அடியவன் கோப வார்த்தைகளைக் கூறினாலும் கருணை கொழிக்கும் கந்த வேள் அதற்காகக் கோபித்துக் கொள்ள மாட்டான். ''பருவத்தால் அன்றிப் பழா'' என்பது இவனுக்குத் தெரியவில்லையே. போனால் போகட்டும். இவனது நிலையில் இவன் என்னை வைவதும் சரிதான். முத்தமிழால் வைகின்றான். நமது நிலையில் நாம் இவனிடம் கோபம் காட்டாதிருப்பதுதான் முறை என்று, இப்படி எண்ணிக் கொண்டு அந்த அடியவனிடமும் அளவற்ற கருணை காட்டுவாராம் முருகப் பெருமான்.

''இடமொரு மரகத மயில்மிசை வடிவுள
ஏழைக் கிடங்கண் டவர்வாழ்வே
இதமொழி பகரினும் மதமொழி பகரினும்
ஏழைக்கிரங்கும் பெருமாளே''

திருப்புகழ் நெருப்பு என்பார் அருணகிரிப் பெருமான். உண்மையில் அது நெருப்புதான். மிகவும் அதிகமான வெப்பத்தில் உருகக்கூடிய இரும்பு போன்ற நெஞ்சங்களை யெல்லாம் உருக்க வேண்டுமாயின், அது இந்த நெருப்பால் தான் முடியும். மேலே காட்டிய பாடல் இதற்கு ஓர் எடுத்துக் காட்டு.

(3) ஆசாரமாக இருத்தல், நியமம் தப்பாது இருத்தல், என்பன போன்ற சில கட்டுப்பாடுகளெல்லாம் அடியவர்க்கு மிகவும் அவசியமே. எதிர் பாராத வகையில் நம் ஆசார அனுட்டானங்களிலோ, நியமங்களிலோ, கூறும் மந்திரங்களிலோ பிழை ஏற்பட்டுவிட்டால் முருகப் பெருமான் கோபித்துக் கொள்ள மாட்டான்.. பிழைகளைப் பொறுத்துக் கொள்வான்.

''தவத்தின் சாமி புரிபிழை பொறுக்குஞ்சாமி குடிநிலை
தரிக்கும் சாமி அசுரர்கள் பொடியாகச்
சதைக்குஞ் சாமி எமைப்பணி விதிக்குஞ் சாமி சரவண
தகப்பன் சாமி எனவரு பெருமாளே
(1058)

கழலிணை பணியும் அவருடன் முனிவு
கனவிலும் அறியாப் பெருமாளே''
(597)

(4) தன் அடியவர் உள்ளத்தில் அச்சம் என்பது சிறிதளவும் இல்லாதவாறு விரட்டியடிப் பவன் குமரப் பெருமான். அச்சத்தை நீக்கி ஆக்கத்தை அருள்வதே அவனது இயல்பு. தமிழில் உபதேச காண்டம் பாடியருளிய ஞான வரோதயரின் சரித்திரம் இதற்கு எடுத்துக் காட்டு. பள்ளியில் தனக்குக் கிடைக்க இருக்கும் பிரம்படிக்குப் பயந்து வயலூரில் முருகவேளின் உருவத்துக்குப் பின்னால் ஒளிந்து கொண்ட இவர்க்கு, இரவெல்லாம் கோயிலிலேயே அடை பட்டுக் கிடைக்க நேர்ந்தது. கருணை முருகன் இவரது நிலையைக் கண்டார். அளவற்ற கருணை கொண்டார். இவரது அச்சத்தை நீக்கினார். சிறந்த கவிபாடும் திறத்தையும் ஞானப்பேற் றையும் அருளினார். ஒரு மொழியால் உலகனைத் தையும் உணர்த்தும் ஒருவன் முருகனே.

''அன்பால் நின் தாட்கும் பிடுபவர்
தம்பாவம் தீர்த்தம் புவியிடை
அஞ்சாநெஞ் சாக்கம் தரவல பெருமாளே''
(684)

''ஆதிக்கு மைந்தனென்று நீதிக்குள் நின்ற அன்பர்
ஆபத்தில் அஞ்சல் என்ற பெருமாளே''
(1081)

''அடியவர் அச்சத் தழுங்கிடுந்துயர்
தனையொழிவித்துப் ப்ரியங்கள் தந்திடும்
அருணகிரிக்குட் சிறந்த மர்ந்தருள் பெருமாளே''
(536)

(5) தன்னிடம் தஞ்சம் புகும் அடியார் என்னென்ன வேண்டுகின்றனரோ அவற்றை யெல்லாம் வேண்டியவாறே அருள் புரியும் இயல்பு முருகப் பெருமானிடம் நிறைய உண்டு. ''வேண்டிய வேண்டியாங்கு எய்தினர் வழிபட'' என்பது திருமுருகாற்றுப்படை. அடியார் நினைத்த காரியத்தை நிறைவேற்றி அருள்புரிப வனும் அவனே.

''அடியவர் இச்சையில் எவை எவை யுற்றன
அவைதரு வித்தருள் பெருமாளே
(733)

''வேண்டிய போதடியர் வேண்டிய போகமது
வெண்ட வெருதுதவு பெருமாளே
(245, 246)

''வேண்டும் அடியர் புலவர் வேண்ட அரியபொருளை
வேண்டும் அளவில் உதவும் பெருமாளே''
(415)

''வினைப்பகை யறுப்பவன் நினைத்தது முடிப்பவன்
மனத்துயர் கெடுத்தெனை வளர்த்தருள் க்ருபைக் கடல்''
(சித்து வகுப்பு)

என்று வரும் அமிழ்த மயமான அருள் வாக்கு களெல்லாம் வள்ளி மணாளனின் வண்மைத் திறத்தையும் வற்றாக் கருணைத் திறத்தையும் இரும்பு நெஞ்சத் தடத்திலும் இனிதிருத்தி வைக்கக்கூடியவை.

(6) முருகப் பெருமான் அருட்கருணை வழங்கும்போது 'இன்னார்க்கு வழங்கலாம், இன் னார்க்கு வழங்கக்கூடாது' என்றெல்லாம் பிரிவினை செய்ய மாட்டான். தாய்க்கும் மேலான கருணை இப்படியெல்லாம்பாகுபடுத்திப் பார்க்காது. அவன் யார்யார்க்கும் அருள் வழங்குகிறான்?

''அடைந்தோர்க் குணர்ந்தோர்க் களிந்தோர்க் கமைந்தோர்க்
கவிழ்ந்தோர்க் குணற்கொன் றிலதாகி

அலைந்தோர்க் குலைந்தோர்க் கினைந்தோர்க் கலந் தோர்க்
கறிந்தோர்க் களிக்கும் பெருமாளே''
(371)

[உணந்தோர்—மெலிந்தோர்; அமைந்தோர்—மன அமைதி யுடையோர்; அவிழ்ந்தோர்—பக்தியால் உள்ளம் நெகிழ்ந்தவர்; அலந்தோர்—துன்பமுற்றவர்].

அருணகிரிப் பெருமான் இங்கே அடைந்தோர் முதலாக அறிந்தோர் ஈறாகப் பத்து வகையான பக்தர்களைக் கூறியருளுகிறார். உலகத்தின் எந்த மூலையில் வாழ்பவனாக இருந்தாலும் ஒரு மனிதன் இந்தப் பத்து வகைக்குள் ஏதாவது ஒரு வகையில் அடங்கிவிடுவதை நாம் உணர்ந்து கொள்ளலாம். அருணகிரிப் பெருமான் யாரை யும் விட்டு வைக்கவில்லை. கருணைக்கு அருண கிரி! இந்தத் திருப்புகழை எத்தனை தடவை படித்தாலும் உள்ளம் சலிப்புக் கொள்ளாது. அத்தனை இனிமை, அத்தனை அருமை. வேறோ ரிடத்திலும் இவ்வாறு பாடுகிறார்.

''அறங்காத் துறங்காத் திறம்பார்த் திருந்தோர்க்
கயர்ந்தோர்க் களிக்கும் பெருமாளே''
(1173)

(7) ''தன் திருவடிகளைச் சரண்புகும் அடி யாரை அன்பினாலும், அபயமளிப்பதாலும், அடியார்க்கு ஏற்பட்ட துன்பங்களை நீக்குவதா லும், வேண்டியவற்றை அளித்தலாலும், அடி யார்களது பாபத்தைப் பொசுக்குவதாலும், கணக்கற்ற பதவிகளை அளித்தலாலும் இறைவன் அடியாரைக் காப்பாற்றி அருளியிருக்கிறான்.'' முருகப் பெருமான் இந்த ஆறு வழிகளிலும் அருணகிரிப் பெருமானுக்கு அருள் புரிந்திருக் கிறான். இந்தக் கருத்தைத் திருப்புகழில் வரும் சில அடிகள் நிரூபணம் செய்கின்றன.

''ஆனாத ஞான புத்தியைக் கொடுத்ததும்
ஆராயும் நூல்களிற் கருத்தளித்ததும்
ஆதேச வாழ்வினிற் ப்ரமித் திளைத்துயிர்
அழியாதே

ஆசாப யோதியைக் கடக்க விட்டதும்
வாசாம கோசரத் திருத்து வித்ததும்
ஆபாத னேன்மிகப் ப்ரசித்தி பெற்றினி
துலகேழும்

யானைக நாம அற்புதத் திருப்புகழ்
தேனூற வோதி எத்திசைப் புறத்தினும்
ஏடேவு ராஜ தத்தினைப் பணித்ததும்
இடராழி

ஏறாத மாம லத்ரயக் குணத்ரய
நாணுவி கார புற்புதப் பிறப்பற
ஏதேம மாயெ னக்கனுக் ரகித்ததும்
மறவேனே''

(1012)

எனவரும் திருப்புகழ் ஒன்றே, முருகன் எவ்வாறெல்லாம் அனுக்கிரகம் செய்திருக்கின்றான் என்பதை முரசு கொட்டி அறிவிக்கின்றது.

முருகன், பக்தர் அருகன் (அருகில் இருப்பவன்). ஒப்பில்லாத கருணைப் பெருமாளாக முருகப்பெருமான் விளங்குவதால் அவனை அடியார்களெல்லாம் தங்களுக்குரிய சேம நிதிபோல் சூழ்ந்து கொள்கின்றனர்.

''வைத்தநிதி போல் நாடி நித்தம் அடி யார் வாழ
வைத்தபடி மாறாத . பெருமாளே

(1221)

''அடியார்க்கு நல்ல பெருமாள்'' என்பதன் விளக்கத்தை அருணகிரிப் பெருமானின் திருவாக்குகளைக் கொண்டே இதுவரை உணர்ந்தோம். *




# அருள்மிகு குலாலர் பிள்ளையார் கோயில் தேவஸ்தானம்

**ஈஸ்வரன் கோயில் வீதி, திருப்பூர்.**

திருப்பூர் நகரத்தின் மத்தியில் அமைந்துள்ளது. இதன் நிர்வாகம் குலாலர் சமுகத்தினரால் நடத்தப்பட்டு வருகிறது. மிகவும் பழமை வாய்ந்த கோவில். இப்பகுதியில் வாழும் மக்கள் கல்யாண நிச்சயதார்த்தம், வியாபாரத்திற்குப் புதிதாக கணக்குகள் தொடங்குதல் ஆகியவைகளை இக்கோவிலில் நடத்துவது வழக்கமாக இருந்து வருகிறது. வேண்டுவோர்க்கு வேண்டியன செய்து வரும் விநாயகரை வணங்கி அவரது அருளைப்பெற வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

கு. அமாசையப்பன் (தலைவர்)
வி. கிருஷ்ணசாமி, அறங்காவலர்.
ஆர். கந்தசாமி ,,
கே. எஸ். சுப்பிரமணியம் ,,
டி. எஸ். மாணிக்கம் ,,

# எனக்கும் ஆதல் வேண்டும்!

தே. வீரராகவன் எம்.ஏ.,

ஒரு பொருளை இரந்து பெற விரும்பும் ஒருவர், ஈவோரிடம் சென்று, ''அவருக்கே கொடுத்தீர்களே! எனக்குக் கொடுக்கலாகாதா?'' என்று சொல்லிக் கேட்பதைப் பலகாலும் கேட்டிருக்கிறோம். இப்படிக் கேட்டு, இரப்பவர் சொற்களில், பொருள் பெற்றுச் சென்றவர் தாழ்வும், தம் உயர்வும் தொனிக்கும். வேறு சிலர், பொருள் பெற்றுச் சென்றவரைப் போன்ற தகுதி, தமக்கும் உண்டென்று சுட்டிக் காட்டிக் கேட்பர். இவ்வாறெல்லாம் கேட்பது சாமானிய மக்களிடம் மட்டும் காணப்படும் ஓர் இயல்பன்று. அருளாளர்களிடமும் இருந்திருக்கிறது. ஆனல் ஒரு வேறுபாட்டுடன். முன்னையவர்கள் மக்களிடம் பொருள் வேண்டுவர்; பின்னையவர்கள் இறைவனிடம் அருள் வேண்டுவர்.

''வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட
மரபினில் யானெருவனன்றே''

என்று இராமலிங்க சுவாமிகள், இறைவனுக்கும் தமக்குமுள்ள நெடுங்காலத் தொடர்பினை நினைவுபடுத்தி அவனருளை வேண்டுகின்றார்.

''அல்வழக் கொன்றுமில்லா அணிகோட்டியர்கோன்
அபிமான துங்கன்
செல்வனைப் போலத்திருமாலே, நானும் உனக்குப்
பழவடியேன்''

என்று பெரியாழ்வார், தமது பழவடிமைத் திறத்தைக் குறிப்பிட்டுத் திருமாலின் கருணையை வேட்கிறார். திருமங்கையாழ்வார்,

''சொல்லா தொழிய கில்லேன்
அறிந்த சொல்லில் நும்மடியார்,
எல்லாரோடும் ஒக்க
யெண்ணியிருந்தீர், அடியேனை
நல்லார் அறிவீர்; தீயாரறிவீர்;
நமக்கிவ் வுலகத்தில்
எல்லாம் அறிவீர் ஈதே யறியீர்,
இந்த ளூரீரே''

என்று, தமக்கும் மற்றவர்க்கும் உள்ள ''வாசியினை'' இறைவன் அறிய வில்லையேயென்று நிட்டூரமாகப் பேசி, அவனருளை நாடுகிறார். சுந்தர மூர்த்தி சுவாமிகளோ இவர்கட்கும் பல படிகள் மேற் சென்று, திருப்புன்கூர் இறைவனிடம், குற்றம் செய்தவர்களின் நீண்ட பட்டியலொன்றினை நீட்டி, ''இவர்கள் செய்த குற்றங்களையெல்லாம் குணமாகக் கொண்டு, அவர்களை ஆட்கொண்ட நீர், ஏன் என்னையும் ஆட்கொள்ளலாகாது'' என்று வாதிடுவார் போன்று,

''நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்,
நாவினுக் கரையன், நாளைப்போவானும்,
கற்றசூதன், நற் சாக்கியன், சிலந்தி,
கண்ணப்பன், கணம் புல்லன் என்றிவர்கள்
குற்றமே செய்யினும் குணமெனக் கருதும்
கொள்கை கண்டுநின் குரைகழலடைந்தேன்,
பொற்றிரள் மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூர் உளானே''

என்று நீதி கோருகிறார்.

ஒரு சமயம், திருமங்கையாழ்வார், அணியரங்கம் சென்று, திருவரங்கத்தமுதனைக் கண்களாரச் சேவித்துப் பரவசமடைகிறார். அந்தப் பரவசத்தில், அரங்கத்தரவணையான், வேர்கள் முதற்கொண்டு விலங்குகள் ஈருகப் பல்லுயிர்கட்கும் அருள் பாலித்த வரலாறுகள், அவருள்ளத்தில் வெள்ளமிட்டோடுகின்றன. எம்பெருமான் அவ்வுயிர்களை யாட்கொண்டபோது, கூறிய அமுதமொழிகளும் ஆழ்வார் காதுகளில் அப்போது ஒலிக்கின்றன. இச்சொற்களில் பொதிந்துள்ள இறைவன் பேரருள் ஆழ்வாருக்கு ஊக்கத்தையும், நம்பிக்கையினையும் நல்குகின்றன. தாழ்ந்த விலங்குகட்கும் அருளீந்து அவற்றினை யாட்கொண்ட இறைவனிடம், அவ்விலங்குகளிடம் அவன் கூறிய அபய மொழிகளையும், ஆப்த வசனங்களையும் நினைவு கூர்ந்து முறையிட்டால், அவன், தம்மையும் ஏற்கத் தட்ட மாட்டான் என்ற உறுதிப்பாடு தலைக்கட்டுகிறது. விலங்குகட்கு எம்பெருமான் அருள் பாலித்த வரிசையிலே, மாருதியின் நினைவு ஆழ்வார் உள்ளத்தில் மேலெழ இராமபிரான் அவனிடம் கூறிய இனிய மொழிகளும், அவனுக்கு அவர் செய்த உதவியும் நன்கு நினைவுக்கு வருகின்றன. அந்த நினைவு, பின்வரும் பாசுரமாக ஆழ்வார் திருவாக்கில் பதிவாகிறது.

''வாத மாமகன், மர்க்கடம், விலங்கு,
மற்றோர் சாதியென்று ஒழிந்திலை உகந்து
காதல் ஆதரம் கடலினும் பெருகச்
செய்தகவினுக்(கு) இல்லை கைம் மாறென்று,
'கோதில் வாய்மையினுயொடும் உடனே
உண்பன் நான்' என்ற ஒண்பொருள் எனக்கும்
ஆதல் வேண்டுமென் (று) அடியிணை யடைந்தேன்,
அணிபொழில் திருவரங்கத்தம்மானே''

மேற்கண்ட பாசுரத்தில், திருமங்கையாழ்வார், இராமபிரான் அனுமனுக்குதவிய வாற்றைப் பேசுமுன், 'அனுமன் யார்' என்று விசாரணை செய்கின்றார். அனுமன், வாதமா மகனும், மர்க்கடமாம், விலங்காம், மற்றோர் சாதியனும்! இப்படியெல்லாம் அனுமனை உலகோர் மதிப்பிடுகிறார்களென்பது ஆழ்வார் திருவுள்ளமாயிருக்க வேண்டும். முதலில் மாருதி உயர்திணையைச் சார்ந்த ''வாதமாமகனாக''க் காற்றுத் தேவனின் மைந்தனாகக் காட்டத் தொடங்கிப் படிப்படியாக இறங்கி, ''விலங்கு'' என்று கூறி முடிக்கும் நயம் இன்பம் பயப்பதாகும்.

ஆனால் இராமபிரான் திருவுள்ளம் அனுமனைக் காட்சியளவில் தோன்றிய விலங்காகக் கருதவில்லை. விரிஞ்சனாகவும், விடைவலானாகவும் மறைகளாலும் நவைபடா ஞானத்தாலும் கோட்படாப் பதமாகவும் மதிக்கிறது. இராமன் யாவரிடமும் அன்பு காட்டும் தன்மையனெனினும், அனுமனிடம், ''காதல் ஆதரம் கடலினும் பெருக''க் காட்டினானெனின், அனுமனும் இராமன்பால், ''காதல் ஆதரம் கடலினும் பெருக'' வைத்திருந்தான். அஃதன்றியும் பிற காரணங்களும் உள.

முதன் முதலில், இராமனை, ருசியமுக மலையில் தரிசித்த நாள் முதற்கொண்டு, அனுமன் இராமனின் அடியவனாயினான். அவனையே தன் வழிபடு கடவுளாகக் கொண்டான். இராமனுக்குப் பற்றற்ற தொண்டு புரிவதனையே தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டுவிட்டான். இராமனுடன் சுக்ரீவனை நட்புக் கொளச் செய்வித்தது முதல், பிராட்டியினைச் சிறைவீடு செய்வித்தது வரையில், இராமபிரானுக்காக அனுமன் ஆற்றிய தொண்டுகளைக் கூறத் தொடங்கினால் அது ஓர் ''அனுமாயணம்'' ஆகிவிடும். இராமனது வாழ்ச்சிக்காகவும், திருமுகமலர்ச்சிக்காகவும், வெற்றிக்காகவும், எத்தனையோ முறைகள், தன்னுயிரையே அனுமன் பணயம் வைத்துளான். அந்தச்செயல்களையெல்லாம் இராமபிரானது திருவுள்ளம் எண்ணியெண்ணிப் பார்த்துக் குழைந்து விட்டதென்பதனை, இராமாயணம் பரக்கப் பேசுகின்றது. இராமபிரான், அனுமன்பால் வைத்திருந்த பெருமதிப்புக்கும் பேரன்புக்கும் ஒரு சான்று ஈண்டுக் காட்ட வேண்டியது இன்றியமையாததாகும்.

போரில் வெற்றி வாய்ப்புக் குறைந்துவிட்ட நிலையில், இந்திரசித்து, பிரமப் படையினையேவி, இலக்குவனையும் வானரர்களையும் வலியொடுங்கச் செய்துவிடுகிறான். இலக்குவனையுள்ளிட்டார் அனைவரும் மாண்டார்போல் மயக்குற்று வீழ்கின்றனர். அப்போது வேற்றுத் திசையினின்றும் போர்க் களம் புகுந்த இராமன் இலக்குவன், வானரர்கள் ஆகியோரது நிலை கண்டு புலம்புகிறான். சிறிது நேரம் கழித்து, உணர்வு பெற்ற அனுமன், சாம்பவன் யோசனைப்படி, மருந்து மலையினை எடுத்து வந்து, இலக்குவனையும், மற்றவர்களையும் உயிர்ப்பிக்கிறான். தன் தம்பியும் ஏனையோரும் உயிர்பெற்றெழக் கண்ட இராமன், அனுமனை மார்புறத் தழுவி,

''முன்னின் தோன்றினோர் முறையின் நீங்கலாது
என்னின் தோன்றிய துயரின் ஈறுசேர்
மன்னின் தோன்றினேம் முன்னம்; மாண்டுளோம்;
நின்னின் தோன்றினேம்; நெறியின் தோற்றினாய்''

''அனுமனே! முன்பு நாங்கள் தயரதன் மக்களாய்த் தோன்றினேம். இந்திரசித்தன் எய்த பிரம்மாத்திரத்தினால் மாண்டோம். நீ இப்போது பேருபகாரத்தால் மீண்டும் உயிர் பெற்றோம். எங்களது மாண்ட உயிரினை நீ மீட்டுத் தந்ததால் நாங்கள், உன் வயிற்றில் பிறந்தவர்களாய் மறுபிறவி எடுத்தோம். ஆதலின் நீதான் எங்கள் தந்தை'' என்று போற்றிப் பாராட்டுகிறான். இறைவனாலன்றி வேறெவராலும்செய்திருக்கஇயலாத உதவியினை அனுமன் செய்தான். அனுமனின் உதவிக்குத் தக அனுமனைத் தன் தந்தையாகப் போற்றும் அளவுக்கு இராமனின் பொருள்சேர் நன்றியுரை அமைந்தது. 'ஆண்டவனுக்கு ஏற்ற அடியவன். அடியவனுக்குகந்த ஆண்டவன்!'

இனி, ஆழ்வார், தம் பாசுரத்தில் குறிப்பிடும் அரிய நிகழ்ச்சிக்குப் பின்னணியாயிருந்த நிலைக்களத்தை அறிந்தாலன்றிப் பாசுரத்தின் முழுச் சுவையினையும் நுகரவெண்ணாது.

இராமன் சீதையைச் சிறை மீட்டு, அயோத்திக்கு மீண்டு, முடி புனைந்தபின் முடி புனை விழாவுக்கு வந்திருந்தார் அனைவர்க்கும் அவரவர் தகுதிக்கேற்பப் பரிசளித்து, விடை கொடுத்தனுப்பிய பின், அனுமான் மட்டும் எஞ்சி நிற்பதனைக் காண்கின்றான். இராமன் துணுக்குறுகிறான். அவன் உள்ளம், அனுமன் தனக்குச் செய்த மாபெரும் உதவிகளையெல்லாம் கணக்கெடுத்துக் கூட்டிப் பார்க்கிறது. அவன் செய்த உதவிகளின் மதிப்பு இமயத்தையும் ஏன்? விண்ணையும்—கடந்து உயர்ந்து காண்கிறது. அவனுக்குத்தான் பரிசளிக்கத் தக்க பொருள் ஈண்டும், யாண்டும் இல்லை யென்பதனைத் தெளிவாக இராமன் உணர்கிறான். எனினும், ஏனையோர்க்குப் போல், அனுமனுக்கும் தன் நன்றிக் கடனைச் செலுத்தும் வாயிலாக ஒரு பரிசினை யளித்தேயாக வேண்டும். அப்படி அளிக்கும் பரிசும் தன் தகுதிக்கும், அனுமான் தகுதிக்கும் ஏற்றதாக இருக்கவேண்டும். நீண்ட நேரச் சிந்தனைக்குப் பின், இராமன் திருவுள்ளத்தில் ஓர் எண்ணம் பளிச்சிடுகிறது. உடனே உணவு பரிமாறப் பணிக்கின்றான். உணவு படைக்கப் பெற்ற பின், ஓரிடத்தில் நின்று, இராமத் தியானத்தில் ஈடுபட்டிருந்த அனுமனைக் கைப்பற்றி அழைத்து வந்து, உண்கலங்களுக்கு முன், தன்னுடன் அவனை உட்காரச் செய்து, ''அனுமனே! நீ என்னுடன் அமர்ந்து இப்போது உணவருந்த வேண்டும். நீ செய்த உதவிக்கு ஈடாக இச் செயலன்றி வேறு செய்யத்தக்க செயலும், ஈயத்தக்க பரிசும் எனக்குத் தோன்றவில்லை'' என்று கேட்டுக் கொள்கிறான். இராமனுடன், சமநிலையில் அமர்ந்து உண்ணும் பேறு, பிராட்டிக்கும் இலக்குவனுக்கும் கிட்டியதில்லை. பரம பாகவதனான அனுமனுக்கு வாய்த்தது. அனுமான்பால் இராமன் வைத்திருந்த பெருமதிப்பினுக்கு இச்சீரிய செயலினுக்கு ஈடாக வேறு எச்செயல் அமைய முடியும்? இராமனை அன்றி

வேறு எவருக்குத்தான் இத்தகைய சிந்தனை எழும்! இராமபிரானின், இந்த இணையற்ற சௌலப்யம், எளிவந்த தன்மை; அரங்கன் முன் நின்று வேண்டும் திருமங்கையாழ்வாரின் உள்ளத்தை நீர்ப் பிண்டமாய் உருக்கிவிடுகிறது. அவ்வுருக்கத்தில், ஓர் உண்மை ஆழ்வாருக்குப் புலப்படுகிறது. இராமன் விலங்காகிய அனுமன் பாற் காட்டிய பேரன்பினைச் சுட்டிக் காட்டி எம்பெருமானிடம் தாமும் வேண்டினால், அவன், தம் வேண்டுகோளினை மறுக்க முடியாதென்ற நிச்சயம்தான் அந்தப் புலப்பாடு—அறிவொளி. இந்த எண்ணவோட்டத்தில், ''கோதில் வாய்மையினாயொடும் உடனே உண்பன் நான்'' என்ற ஒண்பொருள் எனக்கும் ஆதல் வேண்டும்'' என்று துதிக்கிறார். இங்கு, ஆழ்வார் குறிப்பிடும் ''ஒண்பொருள்'', கருணை துளும்பும் இறைவனின் திருவுள்ளக் கருத்தாகும். அருள் வடிவான இறைவனின் திருக்கருத்துத் தம் பாலும் திரும்பிட வேண்டும் என்பது ஆழ்வார் பிரார்த்தனை.

ஆழ்வார் பாசுரங்களில் பெரிதும் ஆழங்கால் பட்டிருந்த கம்பனும் மேலே குறிக்கப் பெற்றுள்ள நிகழ்ச்சியினை,

''இரவி காதலன், இலங்கையர் கோன், இவர் உதவி
அரசின் ஆசையது என்னலாம்; அனுமனே! என்பால்
விரவு காதலின் நீ செய்த உதவிக்கு வேறு
தருவது ஒன்றிலை; உடன் உணும் தரமது அல்லால்''

(இரவி காதலன்-சுக்கிரீவன்; இலங்கையர் கோன்-வீடணன்].

என்று, மறக்காமல் குறிப்பிட்டிருப்பதும் ஒப்பு நோக்கத் தக்கதாம்.

''உதவி வரைத்தன்று உதவி, உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.''




# திருப்பூர் கூட்டுறவு நிலவள வங்கி லிட்.,

## நெ. கே. 677, திருப்பூர்

**துவக்கம்: 1933 - தொலைபேசி: 21572**

**ஆர். நாச்சிமுத்து கவுண்டர்,**
துணைத்தலைவர்.

**இர. முருகேசன்,**
தலைவர்.

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் | ரூ. | 15.00 லட்சம். |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. | 11.69 லட்சம். |
| வங்கி பெற்றுள்ள கடன் நிலுவை | ரூ. | 147.00 லட்சம். |
| வங்கி வழங்கியுள்ள கடன் நிலுவை | ரூ. | 149.00 லட்சம். |

மாநில நிலவள வங்கி சார்பாக எங்கள் வங்கியில் முதலீடு செய்யும் பிக்செட் டெபாசிட்டுகளுக்கு ஓர் ஆண்டுக்கும், அதற்கு மேற்பட்ட காலத்திற்கும் 8½ சதவீதம் வட்டி வழங்கப்படும்.

**பி. கணேசன்,**
செயலாளர்.

# அருள்திரு
# சந்திர மௌலீசுவரர் திருக்கோயில்
## திருவக்கரை

**தலவரலாறு :**

தொண்டை நாட்டில் திருஞான சம்பந்தரால் பாடப்பெற்ற சிவத்தலங்களில் ஒன்று. மூலலிங்கம் முகலிங்கம். தமிழ்நாட்டில் வேறு எங்கும் இது போன்ற மூன்று முகங்கள் உள்ள மூலலிங்கம் கிடையாது. முகலிங்கத்திற்குச் சிவராத்திரி அன்று விசேஷ பூசைகள் நடைபெறும். அன்று வெளியூர்களிலிருந்து பக்தர்கள் வந்து தரிசித்துவிட்டுச் செல்வார்கள். இத்தலம் வக்கிரனுல் பூசிக்கப்பட்ட தலம்.

**எஸ். கோவிந்தசாமி கண்டர்,**
நிர்வாக அறங்காவலர்
திருவக்கரை.

# அருள்மிகு காசிவிசுவநாதர்
# மாதவப்பெருமாள் ஆலயம்

**திருச்சிராப்பள்ளி ஜில்லா, லால்குடி தாலுக்கா, மாதவப்பெருமாள் கோயில் கிராமம்.**

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் தெய்வத் தமிழகத்தில் ''வான் பொய்ப்பினும் தான் பொய்யா''க் காவிரியால் வளம் பெற்றுத் திகழும் சோழ நன்னுட்டின் கண், திரு வரங்கத்துக்கு வடபால், கொள்ளிட நதிக்கரையில், திருவரங்கம், திருப்பாச்சிலாச்சிராமம் எனும் திருவாசி, திருப்பைஞ்ஞீலி, திருவெள்ளறை, திருக்கரம்பனூர் எனும் பிக்ஷாண்டார் கோயில், திரு ஆனைக்கா ஆகிய தலங்கள் சூழ அமைந்துள்ளதும் கூடப்பள்ளி எஸ்டேட்டைச் சேர்ந்ததுமான ஸ்ரீ காசிவிஸ்வநாதர்—மாதவப்பெருமாள் ஆலயத்தில் ஸ்ரீ தேவி பூதேவி சமேத ஸ்ரீமாதவப்பெருமாளையும் ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ காசி விஸ்வநாத சுவாமியும் ஒருங்கே அமைந்துள்ள தேவஸ்தலம். இத்திருக்கோயிலைப் பக்தகோடிகள் தரி சித்து ஸ்ரீ மாதவப்பெருமாள் காசிவிஸ்வநாதசுவாமியின் திருவருளைப் பெற வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**ஓம். எஸ். செல்லமணி அம்மாள்,**
பரம்பரை அறங்காவலர்.

குறிப்பு: திருச்சி-சேலம் சாலையில் திருச்சியிலிருந்து 6 வது மைலில் கூடப்பள்ளி கிராமம் அமைந்துள்ளது. உத்தமர் கோயில் ரயில் நிலையத்திலிருந்து மேற்கே 1.5 மைல், பஸ் வசதியுண்டு.

# கோசல தேசம்

தமிழ் விரகன்

**முன்னுரை :**

இராமாயணம் என்னும் இணையற்ற எழில் மிக்க பெருங்காப்பியத்தினைப் பாட முற்படும் கவியரசர் ஆகிய கம்பர், அக்காப்பிய நாயகன் ஆகிய இராமபிரான் தோன்றியருளிய கோசல தேசத்தின் சிறப்புகளை விவரித்துப் பாடத் தொடங்குகின்றார்.

(1) கோசல தேசம், நிலவளம் நீர்வளம் குடிவளம் முதலியன பலவும் நிரம்பியது. அங்கே வயல் வரப்புகளிளெல்லாம் முத்துக்கள் கிடக்கும். நீர்பாயும் மதகுகளிலெல்லாம் சங்குகள் இருக்கும். வாய்க்காற் கரைகளிலெல்லாம் செம்பொற் கட்டிகள் குவிந்திருக்கும். எருமைகள் வீழ்ந்து கலக்கும் நீர்நிலைகளிலெல்லாம் செங்கழுநீர் மலர்கள் திகழும். பரம்பு அடித்துச் சமன் செய்த நிலங்களிலெல்லாம் அன்னப் பறவைகளும், அருகில் உள்ள கரும்புகளிலெல்லாம் செந்தேன் வெள்ளமும், அழகிய நறுமணச் சோலைகளிலெல்லாம் வண்டுகளின் கூட்டமும், நிறைந்து விளங்கும். இத்தகைய பெருவளம் சிறந்தது கோசல தேசம்!

வரம்பெலாம் முத்தம், தத்தும்
மடையெலாம் பணிலம், மாநீர்க்
குரம்பெலாம் செம்பொன், மேதிக்
குழியெலாம் கழுநீர்க் கொள்ளை,
பரம்பெலாம் பவளம், சாலிப்
பரப்பெலாம் அன்னம், பாங்கர்க்
கரும்பெலாம் செந்தேன், சந்தக்
காவெலாம் களிவண்டு ஈட்டம்

(2) அங்கே ஆறுகள் பாய்கின்ற அரவமும், ஆலைகள் இயங்கும் அமலையும், அவற்றினின்று கரும்புச் சாறு பாய்கின்ற ஓசையும், நீர் நிலைகளின் ஓரங்களில் உலவும் சங்குகளினின்று பொங்கும் ஓதையும், எருதுகள் தம்மில் ஒன்றையொன்று எதிர்த்துப் போர் புரிகின்ற தமரமும், எருமைகள் நீரைக் கலக்குகின்ற துழனியும் ஆகிய பல்வேறுவகையான ஒலிகள் இடையறாது நிகழ்ந்துகொண்டே இருக்கும். கோசல தேசமாகிய மருதநிலம், இவ்வாற்றாற் பெருவளம் உடையதாய்ப் பிறங்கும்.

ஆறுபாய் அரவம், மள்ளர்
ஆலைபாய் அமலை, ஆலைச்
சாறுபாய் ஓதை, வேலைச்
சங்கின்வாய்ப் பொங்கும் ஓசை,
ஏறுபாய் தமரம், நீரில்
எருமைபாய் துழனி, இன்ன
மாறுமா றாகித் தம்மில்
மயங்குமா மருத வேலி

இச் சிறந்த செய்யுளின்கண், 'ஒலி' என்னும் ஒரே பொருளில் அரவம்—அமலை—ஓதை—ஓசை—தமரம்—துழனி என்னும் பல்வேறு சொற்கள் அழகுறக் கையாளப்பட்டிருக்கும் திறம், பெரிதும் கருதி மகிழ்தற்குரியது. ஒரு நல்ல இனிய செய்யுளானது, ஒரு வகையிற் பல்வண்ணக் கற்பளிங்கமைப்புப் போல்வதாகும் ("A good poetry is neither less nor more than a mosaic of words'') என்று அறிஞர்கள் கூறுவதற்கு, இச் செய்யுள் எழில் மிக்க பொருத்தமான எடுத்துக் காட்டாகும். இதனைப் பொருட் பின்வரு நிலை அணி என்பர் இலக்கண நூலார்.

(3) கோசல தேசத்தில் மருத நிலம் என்ற அரசன், சோலைகளாகிய அரசவையில் வீற்றிருக்கின்றான். அவனது திருவோலக்கத்தில் மயில்களாகிய பெண்கள் நடனமாடுகின்றனர். தாமரை மலர்கள் ஒளி விளக்குகளைத் தாங்குகின்றன. மேகங்கள் மத்தளம் போல ஒலிக்கின்றன. தெளிந்த நீர் அலைகள், நடனமேடைத் திரைச் சீலைகள் போல, மேலே எழுந்தும் கீழே விழுந்தும் அழகு செய்கின்றன. மகர யாழ் போல வண்டுகள் இனிமையாக மிழற்றுகின்றன. குவளை மலர்கள், கண்களைப் போல் விழித்து மலர்ந்து, அவ்வழகிய நடனக் காட்சியைக் கண்டு களிக்கின்றன.

தண்டலை மயில்கள் ஆடத்,
தாமரை விளக்கம் தாங்கக்,
கொண்டல்கள் முழவின் ஏங்கக்,
குவளைகண் விழித்து நோக்கத்,
தெண்டிரை எழினி காட்டத்,
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட,
மருதம் வீற்றிருக்கும் மாதோ.

கோசல தேசத்தின் மருதநில வளனை விளக்கும் இந்தச் சிறந்த இனிய பாடல், கம்பரின் கவிமணிகளுள் தலை சிறந்ததொன்றாக அடிக்கடி எடுத்துக் கையாளப்படுவதொன்றாகும். மருத நிலத்தினை அரசனாக உருவகம் செய்து, அதற்கு ஏற்ற பெற்றியில் மருத நிலத்துப் பொருள்களை எல்லாம் இயைபுறத் தொடர்புபடுத்தி,

இயைபு முற்றுருவகம் என்னும் அணி யமையப் பாடியிருக்கும் கம்பரின் கவிதைத் திறம் பெரிதும் வியந்து போற்றற்பாலதாகும்.

(4) கோசல தேசத்தில் தாமரை மலர்களில், வண்டுகளும் திருமகளும் எங்ஙனும் தங்கியிருக்கக் காணலாம். மகளிரின் கண்களும், மன்மதனின் அம்புகளும், அங்கே காமுகரைத் தாக்கும். பவழமும் முத்தும் மேகங்களில் இருந்து உதிக்கும். அங்கு வாழ்கின்ற மக்களின் நாவில் உண்மையும், நூற் பொருள்களும் நிலை பெற்று விளங்கும்.

தாமரைப் படுவ வண்டும்,
தகைவரு திருவும்; தண்தார்க்
காமுகர்ப் படுவ மாதர்
கண்களும், காமன், அம்பும்;
மாமுகிற் படுவ வாரிப்
பவளமும், வயங்கும் முத்தும்;
நாமுதற் படுவ மெய்யும்,
நாமநூற் பொருளும் நன்றே

(5) அங்கே சங்குகள் நீரில் உறங்கும். எருமைகள் மரநிழல்களில் உறங்கும். ஆடவரும் மகளிரும் அணியும் மாலைகளில், வண்டுகள் உறங்கும். திருமகள் தாமரை மலரில் உறங்குவாள். ஆமைகள் தூர்களில் உறங்கும். இப்பிகள் நீர்த் துறைகளில் உறங்கும். அன்னப் பறவைகள் நெற் போர்களில் உறங்கும். வண்ண மயில்கள் பொழில்களில் உறங்கும். இங்ஙனம் தன்கண் வாழும் மக்களும், சிற்றுயிர்களும் கவலையின்றி இன்புற்று வாழ்வதற்கேற்ற வளங்கள் யாவும் நிறைந்தது, கோசல தேசம்.

நீரிடை உறங்கும் சங்கம்;
நிழலிடை உறங்கும் மேதி;
தாரிடை உறங்கும் வண்டு;
தாமரை உறங்கும் செய்யாள்
தூரிடை உறங்கும் ஆமை;
துறையிடை உறங்கும் இப்பி;
போரிடை உறங்கும் அன்னம்;
பொழிலிடை உறங்கும் தோகை.

(6) கலப்பைகள் உழுவதனால் கிளர்ந்த பொன்னும், சங்குகள் உயிர்த்த முத்துக்களும், பரம்பு அடித்த நிலங்களில் ஒளி வீசும் நவமணிக் குவியல்களும், நெற்கதிர்களும், கருப்பங்கழிகளும், வண்டுகளும், மகளிரின் முகமும், தாமரை மலர்களும், கோசல தேசம் எங்கும் அழகுற விளங்கும்.

படையுழ எழுந்த பொன்னும்,
பணிலங்கள் உயிர்த்த முத்தும்,
இடறிய பரம்பிற் காந்தும்
இனமணித் தொகையும், நெல்லின்
மிடைபதங் கதிரும், மீனும்,
மென்தழைக் கரும்பும், வண்டும்
கடைசியர் முகமும், போதும்,
கண்மலர்ந்து ஒளிரும் மாதோ.

(7) தெளிந்த ஓசையையுடைய சிறந்த யாழ்ப்பாணர்கள், இனிதாகப் பிழிந்த கள்ளை யுண்டு, மத்தளங்கள் ஒலிக்க, ஆங்காங்கே இனிமையாகப் பாடுகின்ற பாடல்கள், மாட மாளிகைகளில், பசும்பொற் கட்டில்களின் மீது துயில்கின்ற மயில் போன்ற மகளிரை, வைகறைப் பொழுதில் துயிலெழச் செய்யும்.

தெள்விளிச் சீறியாழ்ப் பாணர்
தேம்பிழி நறவம் மாந்தி,
வள்விசிக் கருவி பம்ப,
வயின்வயின் வழங்கு பாடல்,
வெள்ளிவெண் மாடத் தும்பர்
வெயில்விரி பசும் பொற் பள்ளி,
எள்ளரும் கருங்கண் தோகை
இன்துயில் எழுப்பும்அன்றே.

(8) ஆலைகளினின்று பாயும் கரும்பின் தேனும், அரிந்த நுனிகளையுடைய தென்னை, பனை, கமுகு என்பனவற்றின் பாலைகளினின்று தோன்றிய கள்ளும், சோலைகளினின்று ஒழுகும் பழங்களின் சாறும், தேனடைகளினின்று பெருகிச் சிந்துகின்ற தேனும், ஆகிய இவைகளெல்லாம் ஒருங்கு கலந்து ஓடிக் கழனி, குளம், ஏரி, மடு முதலியவற்றையெல்லாம் நிரப்பிக், கடலின்கண் சென்று சேரும். மீன்களெல்லாம் அத்தேன் பெருக்கினை உண்டு களித்துத் திளைத்து மகிழும்.

ஆலைவாய்க் கரும்பின் தேனும்,
அரிதலைப் பாளைத் தேனும்,
சோலைவாய்க் கனியின் தேனும்,
தொடைஇழி இருலின் தேனும்,
மாலைவாய் உகுத்த தேனும்,
வரம்பிகந் தோடி வங்க
வேலைவாய் மடுப்ப, உண்டு
மீன் எலாம் களிக்கும் மாதோ.

(9) கோசல தேசத்தின் வயல்களில் களை பறிக்கச் செல்லுகின்ற உழவர்கள், தாம் பறிப்பதற்குரிய குவளையும், ஆம்பலும், தாமரையும் ஆகிய மலர்கள் முறையே தம்முடைய காதலியரின் கண் கை கால் முகம் வாய் முதலியவற்றைப்போல இருப்பதனால், அவற்றைக் களை பறிக்க மனம் வராமல் வறிதே உலாவிக் கொண்டிருப்பார்கள்.

''பெண்கள் பால் வைத்த நேயம்
பிழைப்பரோ சிறியோர் பெற்றால்''

(10) புது வெள்ளத்தில் நீராடுகின்ற மகளிருடைய கூந்தலின் மலரும் கத்தூரிக் குழம்பும் ஆகியவற்றின் நறுமணமே, அவ்வெள்ளம் சென்று சேர்கின்ற கடல் அலைகளிலெல்லாம் கலந்து வீசும். அங்ஙனமாயின் கோசலதேசத்து மகளிரின் சிறப்பை நம்மால் அளவிட்டு ஆய்ந்து கூறுதல் இயலுமோ?

புதுப்புனல் குடையும் மாதர்
பூவொடு நாணிப் பூத்த
கதுப்புறு வெறியே நாறும்
கருங்கடல் தரங்கம் எல்லாம்

(11) கோசல தேசத்து மகளிரின் நடை, அன்னநடையினும் அழகுற்று விளங்கும். ஆதலின், அந்நடையழகினைக் கற்பதற்கு, அன்னப்பறவைகள் அம்மகளிர்பால் செல்லும். அப்போது அவைகள் தம் குஞ்சுகளைத் தாமரை

மலர்களாகிய பள்ளியில் கிடத்தி விட்டுச் செல்லும். எருமைகள் நீர்நிலைகளில் சென்று படிந்து கிடந்து மகிழும். அப்போது அவைகள் தம் கன்றுகளை நினைவு கூரும். 'அங்ஙனம் நினைவு கூருங்கால் அவற்றின் மடியினின்று பால் சுரந்து பெருகிச் சோரும். அங்ஙனம் சோர்ந்த எருமைகளின் பாலினை அன்னப் பறவைகளின் குஞ்சுகள் உண்டு மகிழும். அந் நீர்நிலையில் தேரைகளும், தவளைகளும் மிகுதியாக இருக்கும். அவைகள் கத்துவது தாலாட்டுவது போல் இருக்கும். அத்தாலாட்டைக் கேட்டுக் கொண்டே, தாமரையாகிய படுக்கையில், அன்னப் பறவைகளின் குஞ்சுகளாகிய குழந்தைகள், இன்பமாக உறங்கும். இத்தகைய வளப்பம் மிக்கது கோசல தேசம்.

சேல் உண்ட ஒண்க ணாரில்
திரிகின்ற செங்கால் அன்னம்,
மால் உண்ட நளினப் பள்ளி
வளர்த்திய மழலைப் பிள்ளை,
கால் உண்ட சேற்று மேதி
கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பால் உண்டு துயிலப், பச்சைத்
தேரை தாலாட்டும் பண்ணை.

(12) கோசல தேசத்தில் எங்கும் சோலைகள் நிரம்பியிருக்கும். அவற்றில் சேவலும் பேடையுமாகிய குயில்கள் தம்மிற்கலந்து மணம் செய்து கொள்ளும். அச்சோலையின் மரக் கிளைகளில் மயில்கள் தம் தோகையை விரித்து நடனமாடும். அக்காட்சி, திருமண நிகழ்ச்சியின் போது, அழகிய மகளிர் ஆடுகின்ற நடனத்தினையும், நடன மேடையையும் விட, மிகவும் அழகுற்றுத் திகழும். அச்சோலைகளில் அழகிய பொய்கைகள் பல அமைந்திருக்கும். அவற்றில் உள்ள தாமரை மலர்களில் அரச அன்னங்கள் பள்ளி கொண்டு துயிலும். காலை வேளைகளில் அவ்வன்னங்கள் துயிலெழும்படி வண்டுகள் செவ்வழிப் பண்ணை இசைத்துத் திருப்பள்ளி எழுச்சி பாடும்.'

குயிலினம் வதுவை செய்யக்
கொம்பிடைக் குனிக்கும் அஞ்ஞை
அயில்விழி மகளிர் ஆடும்
அரங்கினுக் கழகு செய்யப்
பயில்சிறை யரச அன்னம்
பன்மலர்ப் பள்ளி நின்றும்
துயிலெழத், தும்பி காலைச்
செவ்வழி முரல்வ சோலை.

(13) கோசல தேசத்தில் ஆடவர்கள் பருவம் வடிவம் குலம் குணம் கல்வி செல்வம் முதலியவற்றால் தமக்குப் பொருத்தமுடைய மகளிரைத் தேர்ந்தெடுத்துத் திருமணம் செய்து கொண்டு இன்பமாக வாழ்வார்கள். பருந்தும் அதன் நிழலும் தொடர்ந்து பிரிவறச் செல்லுதல் போல இனிது கலந்து இயைந்த இயலிசைப் பயனை நுகர்ந்து மக்கள் இன்புறுவார்கள். அமிழ்தினும் இனிய நூற்கேள்விகளைத் தம் செவிகளால் மாந்தி மகிழ்வார்கள். அங்கே உள்ள மக்கள் அனைவரும் வீரம் மிக்கவர்கள். ஆதலின் கோழிப் போர், காளைப்போர் முதலியவற்றைக் கண்டு களித்துப் பொழுது போக்குவார்கள்.

(14) கோசல தேசத்தில் உழவர்கள் மிகுதியாக உள்ளனர். அவர்கள் தம் உழவுத் தொழிலைச் செம்மையுறச் செய்கின்றனர். அவர்கள் தாமரை மலர்களின் இதழ்கள் ஒடியவும், முத்தும் பொன்னும் கொழிக்கவும், மணிகள் சிதறவும், சலஞ்சலம் என்னும் சங்குகள் அழுது புலம்பவும், மீன்கள் துள்ளித் துடிக்கவும், ஆமைகள் தம் உறுப்புக்களைச் சுருக்கிக் கொண்டு ஒடுங்கவும், மதகுகளில் வரால் மீன்கள் ஒளித்துக் கொள்ளவும், உழுவதற்குத் தம்முடைய உழு பகடுகளை உரப்பிச் செலுத்துவார்கள்.

(15) உழவர்கள் நெல்லரிகளின் தொகுதிகளை வானளாவிய போர்களாகக் குவிப்பர். அவற்றைப் பகடுகளால் துவைப்பிப்பர். வறியவர்க்கு உதவுவர். விருந்தினருடன் இருந்து உண்டு மகிழ்வதற்காக எஞ்சிய நெற்குவியல்களை வண்டியில் நிறைத்து நிலத்தின் முதுகு நெளியும்படி தத்தம் வீடுகளுக்குக் கொண்டு செல்வர்.

(16) வயல்களில் கதிராக விளைகின்றதானியங்களையும், சோலைகளில் வளரும் பல மரங்களின் பழங்களையும், கொல்லைகளில் விளையும் அவரை உழுந்து முதலிய பருப்பு வகைகளையும், கொடிகளில் விளையும் பொருள்களையும், குழிகளினின்று அகழும் மஞ்சள் இஞ்சி போன்ற பொருள்களையும், பல மலர்களில் சென்று தேனைத் தொகுக்கும் வண்டுகளைப் போல உழவர்கள் ஒருங்கு தொகுப்பார்கள்.

(17) கோசல தேசத்தில் இல்லங்கள் தோறும், அறவோர்க்களித்தல், அந்தணர் ஓம்பல், துறவோர்க்கு எதிர்தல், விருந்தெதிர் கோடல் முதலிய சிறந்த அறங்கள் எப்பொழுதும் இடையறாது நிகழ்ந்து கொண்டேயிருக்கும். அங்குள்ள மக்கள், மா பலா வாழை என்னும் முப்பழங்களும், பலவகைப் பருப்புகளும், அவற்றை முழுத்துகின்ற சிறந்த நல்ல நெய்யும், செந்நிறமுள்ள தயிர்க் கட்டிகளும், கண்ட சர்க்கரைகளும், இவற்றிற்கு இடையிடையே நெருங்கிய சோறும் ஆகியவற்றை உறவினருடன் ஒன்று கூடியிருந்து உண்டு மகிழ்வார்கள்.

(18) கோசல தேசத்தில் உள்ள பருவ மங்கையர்களின் முகங்கள் பங்கய (தாமரை) மலர்கள் போல் விளங்கும். அவர்தம் மை தீட்டிய அழகிய கண்களைத் தம்முடைய பெண் வண்டுகள் என்று கருதி ஆண் வண்டுகள் மயங்கும். அதனால் அந்நாட்டின் மருத நிலத்தினின்று நீங்காமல் எப்போதும் வண்டுகள் தங்கியிருக்கும். தென்னம்பாளை முதலியவற்றில் இருந்து ஒழுகும் கள்ளைக் குடித்து வாழை மீன்கள் பருத்துக் கொழுத்துத் துள்ளிப் பாய்ந்து கொண்டிருக்கும். குளிர்ந்த நீரில் மூழ்கிக்கிடந்து வரும் எருமைகள் தரை மீது உலாவும் முகில்களை ஒத்திருக்கும். மேய்புலம் சென்று மீளும் அவ்வெருமைகள், தம் கன்றுகளை நினைப்பதனால் அவற்றின் மடியினின்று தாரை தாரையாகப் பால் சுரந்து சொரியும். அப்பாலின் வெள்ளத்தினால் அங்குப் பல்வகைப் பயிர்கள் தழைத்து வளரும்.

(19) அங்கு வீடுகள் தோறும் சமையற் கட்டினின்று அரிசி முதலியன களைந்து கழுவி வார்த்த நீரானது, வெள்ளமாகப் பெருகி அருகில் உள்ள கமுகஞ் சோலைகளை வளப் படுத்திச் செந்நெல்லின் நாற்றுக்களைச் செழித்து வளரச் செய்யும். அங்கே கோழிகள் குப்பை களைச் சீக்குங்கால் ஒளிமிக்க அழகிய மணிகள், குப்பை மேடுகளில் சென்று சிதறி ஒளிவீசும். அவற்றை மின்மினிப் பூச்சிகள் என்று கருதிக் குருவிக் கூட்டங்கள் தம் கூடுகளில் ஒளி விளக்கு களாகப் பயன்படக் கொண்டுபோய்ச் சேர்த்து வைக்கும்.

''முட்டில் அட்டின் முழங்குற வாக்கிய
நெட்டு லைக்கமு நீர்நெடு நீத்தந்தான்
பட்ட மென்கமுகு ஓங்கு படப்பைபோய்
நட்ட செந்நெலின் நாறு வளர்க்குமே''

கோசல தேசத்தில் முல்லை நிலங்களில் ஆயரும், ஆய்ச்சியரும் அகமகிழ்ந்து வாழ்வர். ஆய மகளிர் மத்தொலி துள்ளவும், தம் வெள் வளை அரற்றவும், நுண்ணிடை மெலியவும், அங்கை வருந்தவும், குடங்களில் தோயும் வெண் தயிர் கடைவர். அங்கே தினைப்புனங்களில் இளங்கிளிகள் சிலம்பும். வண்டுகள் பூவரும்பு களில் மிழற்றும். நீர் நிலைகளில் புள்ளினங்கள் ஒலிக்கும். வள்ளல்களின் இல்லங்களில் மங்கல வள்ளைப் பாடல்கள் விளங்கும்.

''தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளவும்
ஆய வெள்வளை வாய்விட்டு அரற்றவும்
தேயும் நுண்ணிடை சென்று வணங்கவும்
ஆயர் மங்கையர் அங்கே வருந்துவார்

(20) கோசல தேசத்தில் அழகிய சிறந்த பெண்கள் நிறைந்து வாழ்வர். அவர்கள் பெருந்தடங் கண்களையும், பிறைபோன்ற நுதலை யும் உடையவர்கள். அவர்கள் செல்வத்தில் மட்டுமன்றிக் கல்வியறிவிலும் சிறந்து திகழ்வர். அதனுல் அவர்கள் வாழும் இல்லங்கள் தோறும் ஈகையும் விருந்தும் இடையருது நிகழும்.

பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும், வைகலும்
விருந்தும் அன்றி, விளைவன யாவையே?

(21) அந்நாட்டின்கண் உள்ள குடி மக்கட் கெல்லாம் வாணிகம் குறித்துச் செல்லும் மரக் கலங்கள். கணக்கற்ற பொருள்களைக் கொணர்ந்து வழங்கும். நிலமானது மிகுந்த விளையுளை நிரம்ப வழங்கும். பிலங்களாகிய சுரங்கங்கள், ஒளிமிக்க நவமணிகளை அளிக்கும். அந்நாட்டுக் குடிமக்கள் சிறந்த நல்லொழுக்க மும், பண்புமுடையவராக விளங்குவர்.

''கலஞ் சுரக்கும் நிதியங் கணக்கிலா;
நிலஞ்சுரக்கும் நிறைவளம்; நன்மணி
பிலஞ் சுரக்கும்; பெறுதற்கு அரியதம்
குலஞ் சுரக்கும் ஒழுக்கம், குடிக்கெலாம்!

(22) அந்நாட்டில் எவரிடத்தும் தீய குற்றச் செயல்கள் நிகழ்வதில்லை. அதனுல் அங்கே அகால மரணங்கள் ஏற்படுவதில்லை. அந்நாட்டு மக்கள் உள்ளத்தில் செம்மை (நேர்மை)க் குணமே சிறந்திருப்பதனுல், அவர்களின்பால் சீற்றம் என்பது சிறிதும் ஏற்படுவதில்லை. அங்கு மிகுதியாக நிகழ்வது நல்லறமே யல்லாது தீச் செயல் எதுவும் நிகழ்வதில்லை. அதனுல் அந் நாட்டின்கண் இழிதகவு என்பது எதுவும் இல்லை. இவ்வாற்ருன் அந்நாடு ஏனைய பிற நாடுகளிலெல்லாம் மிக்க ஏற்றம் பெற்று இலங்கும்.

''கூற்றம் இல்லையோர் குற்றம் இலாமையால்,
சீற்றம் இல்லை தம் சிந்தையிற் செம்மையால்
ஆற்ற நல்லறம் அல்லது இலாமையால்,
ஏற்றம் அன்றி இழித்தகவு இல்லையே.''

(23) அந் நாட்டில் மக்கள் அனைவரும் நன்னெறியே கடைப்பிடித்து ஒழுகுவர். ஆத லின் அங்கு நெறி கடந்து பரந்து செல்வன நீர் வெள்ளம் மட்டுமேயாகும். அந்நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் சிறந்த குறிக்கோள் களை உடையவராவர். எனவே அங்குத் தொய் யிலாகிய குறி அழிந்தவை மகளிரின் தோள்கள் மட்டுமேயாகும். கோசல தேசத்தில் வாழும் மக்கள் அனைவரும் பெருந்தகைமை உடையவர் கள். சிறுமை என்பது அவர்கள்பால் சிறிதும் இல்லை. மகளிரின் நுண்ணிய மெல்லிய இடை கள் மட்டுமே அங்குச் சிறியனவாக இருக்கும். கோசல தேசத்து மக்கள் நெறியறிந்தொழுகும் நேர்மையராவர். அவர்கள்பால் எங்கும் எதிலும் வெறி உணர்வு என்பது ஏற்படுவதே யில்லை. அங்கு வாழும் அழகிய கற்புடைய மகளிரின் மென்மலர்க் கூந்தல் மட்டுமே, வெறி (வாசனை) உடையதாக விளங்கும்.

''நெறி கடந்து பரந்தன நீத்தமே,
குறி யழிந்தன குங்குமத் தோள்களே,
சிறிய மங்கையர் தேயும் மருங்குலே,
வெறியவும் அவர் மென் மலர்க் கூந்தலே''

(24) அந்நாட்டில் அகிலிடும் புகையும், அட்டிலிடும் புகையும், ஆலைகளின் புகையும், வேள்விகளின் புகையும் ஆகியவைகளே எங்கும் மேகங்களைப் போல விரவி நிற்கும். அங்கே வாழும் மகளிரின் அழகும் இயலும் பெற்று, மயில்கள் உலாவும். அம்மகளிரின் மார்பகத்தில் மணி மாலைகள் ஒளிரும். அவர்தம் கூந்தலைப் போலக் கருத்து நீண்டு, மேகங்கள் உலாவும். அந்நாட்டுக் கழனிகளில் கயல்மீன்கள் பிறழ்வது அழகிய மகளிரின் விழிகளைப் போலும். அந் நாட்டு மகளிரின் சிவந்த இதழ்களைப் போல அங்குச் செவ்வாம்பல்கள் மலரும். அவர்களின் சிவந்த அழகிய முகங்களைப் போலத் தாமரைகள் பூக்கும்.

''அகிலிடும்புகை, அட்டில் இடும் புகை,
நகலின் ஆலை நறும்புகை, நான்மறை
புகலும் வேள்வியில் பூம்புகை யோடளாய்,
முகிலின் விம்மி முயங்கின எங்கணும்.''

(25) கோசல தேச மகளிரின் விழிகள், தமக்கு உவமையாக நூல்களில் விதிக்கப் பெறு கின்ற வேல், வாள் சேல் கயல் கணை முதலிய பொருள்களை வெற்றி கொண்டு இகழும். அவர் தம் நடையழகு பிடியின் நடையழகினை வென்று

மேம்பட்டு நிற்கும். அவர்தம் தனங்கள் தாமரை அரும்புகளை விடக் கவினுற்று விளங்கும். அங்குள்ள மகளிரின் அழகிய முகங்கள் சந்திரனைப் போன்று, தண்மையும் ஒண்மையுமுடையன வாய், ஆனால் களங்கமின்றிக் கவினுற்று இலங்கும்.

(26) கோசல நாட்டில் ஆங்காங்கே பலப் பல குவியல்கள் காணப்படும். அவைகள் நெற் குவியல்களாகவோ அல்லது முத்துக் குவியல்களாகவோ இருக்கும். முத்தின் குவியல்கள் அல்லாதவை, தொடு கடல் அமிர்தமாகிய உப்பின் குவியலாக இருக்கும். மற்றும் அங்கே நதிகளால் கொணர்ந்து குவிக்கப்பட்ட பொன் மணி முதலியவற்றின் குவியல்களும் நிரம்பிக் காணப்படும். அங்கே இளமை மிக்க பெண்கள் பந்தாடிப் பயில்கின்ற இடங்கள், சந்தனச் சோலைகள் ஆயினும், அம்மகளிரின் மேனி மணத்தால், சண்பக மரச் சோலைகளை ஒத்திருக்கும். அங்கே இளைஞர்கள் விற் பயிற்சி செய்யுமிடம் நந்தவனங்களாக இருப்பினும், அவர்களின் மேனியின் மணத்தால் முல்லைவனம் போலத் திகழும்.

''பந்தினை யிளையவர் பயிலிடம் மயிலூர்
கந்தனை அனையவர் கலை தெரி கழகம்
சந்தன வனமல சண்பக வனமாம்
நந்தன வனமல நறைவிரி புறவம்''

(27) கோசல நாட்டில் குயில்கள் இனிமையாகப் பேசும். அதற்குக் காரணம் அவைகள் அந்நாட்டு இளமகளிர் பேசுகின்ற இனிய மழலைச் சொற்களை ஊன்றிக் கேட்டுப் பயின்று பேசுதலேயாகும். அங்கே மயில்கள் மிக அழகாய்த் தமது தோகையை விரித்து ஆடும். அதற்குக் காரணம் அம்மயில்கள் அந்நாட்டின் அழகிய மகளிரின் நடனத்தைப் பார்த்துப் பழகுதலேயாகும். அம்மட்டோ! அங்கே சங்குகள் பெண்களின் ஒளிமிக்க பற்களைப் போலவே முத்துக்களை ஈனும்.

''கோகிலம் நவில்வன இளையவர் குதலைப்
பாகியல் கிளவிகள், அவர்பயி னடமே
கேகயம் நவில்வன, கிளரிள வளையின்
நாகுகள் உமிழ்வன நகை புரை தரளம்''

(28) கோசல நாட்டில் வறுமை என்பது சிறிதும் இல்லை. அதனால் கொடுத்து மகிழ்தலாகிய தன்மை நிகழ்தற்கு வாய்ப்பில்லை. அந்நாட்டின் மீது படையெடுத்துப்போர் தொடுத்தற்கு எவரும் அஞ்சுவராதலால், அங்கு உள்ள மக்களின் வீரச் சிறப்பு விளங்குவதில்லை. அங்கே எவரும் பொய் பேசுவதேயில்லை. அதனால் அங்கு உண்மையின் சிறப்பை உணரத் தேவை நிகழ்வதில்லை. அங்குள்ள மக்கள் எல்லோரும் பலப்பல கலை நூல்களையும், கற்றும், கேட்டும் தெளிந்தவர்களாக இருத்தலின், அங்கு அறிஞர்கள் என்று எவரும் தனியாகச் சிறப்பித்துப் போற்றப்படுவதில்லை.

''வண்மை இல்லையோர் வறுமை யின்மையால்,
திண்மை இல்லைநேர் செறுநர் இன்மையால்,
உண்மை இல்லை பொய் யுரை இலாமையால்,
ஒண்மை இல்லை பல் கேள்வி யோங்கலால்''.

(29) கோசல தேசத்தில் அழகுகள் என்பன நற்குணங்களால் நிலைபெற்றிருந்தன. பொய்ம்மை இல்லாத மெய்ம்மையே அனைவராலும் கடைப்பிடித்து ஒழுகப்படுவதால் அங்கே நீதிகள் நிலைபெற்றுவிளங்கின. மேலும் மகளிரின் அன்பினால் பல்வேறு அறங்களும், அவர்தம் கற்பின் மாட்சிமையால் பருவ மழைகளும் தவறாமல் நிலைபெற்றுத் திகழ்கிறது.

''பொற்பில் நின்றன பொலிவு, பொய்யிலா
நிற்பில் நின்றன நீதி, மாதரார்
அற்பில் நின்றன அறங்கள், அன்னவர்
கற்பில் நின்றன கால மாரியே''

**முடிவுரை :**

கம்பர் தமிழ் நாட்டிற் பிறந்தவர். தமிழ் நாட்டிலேயே வாழ்ந்தவர். தமிழ் நலஞ்சான்றவர். தமிழில் பற்று மிக்கவர். தமிழ் வாழத் தாம் வாழ்ந்தவர். ஆதலின் கோசல நாட்டைப் பற்றிப் பாடுங்காலும் அவர்க்குத் தமிழ் நாட்டுணர்வே மேலோங்கி நின்றது. அதனால் தமிழ் நாட்டில் தாம் கண்டு உணர்ந்து மகிழ்ந்த நிலவளம், நீர்வளம், குடிவளம் முதலியவற்றையே, கோசல தேசத்தின் மீது ஏற்றிவைத்துப் புகழ்ந்து போற்றிப் பாடியுள்ளார் என்பது இங்கு அறிந்து மகிழ்தற்குரியது.

—ஆசிரியர்.

—தொடரும்

# உத்தரமேரூர்க் கல்வெட்டுக்கள்

**முன்னுரை:**

கல்வெட்டுக்கள் பண்டைக்காலத்துச் சமயம்-சமுதாயம்-காலவரலாறு- இலக்கியம் - மக்களின் வாழ்க்கை முறை-பழக்க வழக்கங்கள் என்பவற்றை இக்காலத்தில், நாம் அறிந்து கொண்டு பயன் பெறுதற்குப் பெரிதும் துணை புரிகின்றன. பழந் தமிழ்நாட்டில் சேர சோழ பாண்டியமன்னர்கள் செலுத்தி வந்த ஆட்சி, முடியரசு (Monarchy) முறையே எனினும், அது பெரும்பாலும் குடியரசு (Democracy) முறையைத் தழுவியே விளங்கி வந்தது. இக் காலத்திற்போலவே அக்காலத்திலும் தேர்தல் களும் (Elections) இத்தேர்தல் நடைமுறை களும் (Electoral Procedures) பிறவும் இருந்தன எனத் தெரிகின்றது.

**அகநானூறு**

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட ''அகநானூறு'' என்னும் சங்ககால நூலின் பாடல் ஒன்றில், பின்வரும் கருத்து அமைந்து காணப்படுகிறது: ''பாலை நிலத்தில் இறந்து கிடக்கும் வீரர்கள் சிலரின் பிணங்களைக் கொத்தித் தின்னும் கழுகு முதலிய பறவைகள் தம் அலகினால், இறந்து போனவர்களின் வயிற்றைக் குத்திக் குடைந்து அவற்றின் உள்ளேயிருந்து குடரை வெளியே இழுத்து வருகின்றது. இக்காட்சியானது ஊராட்சிக் குழுவின் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தற்பொருட்டு அதற்குத் தகுதியுடையார் பலரின் பெயர்களையும் ஆராய்ந்து எழுதி ஒரு குடத்தின் கண் போட்டு அதனை இலச்சினை இட்டு, ஊர்ப் பொதுமக்கள் பலரும் திரண்டிருந்து காண, ஆவணமாக்கள் ஓர் இளஞ்சிறுவனைக் கொண்டு, அக்குடத்தி லுள்ள ஓலைகளில் ஒவ்வொன்றை எடுக்கச் செய்து, தேர்தல் நடத்தும் செயல்போல உள்ளது.''

[முதுபாழ்—பாலை நிலம். கயிறுபிணி—கயிற்றுற் கட்டப்பட்டுள்ள. குழிசி—குடம், (Ballot Box). ஓலை—பெயர்களை எழுதிய பனை ஓலை, (Ballot-Paper). பொறி—இலச்சினை, (Seal). ஆவண மாக்கள்—பெயர் எழுதிய ஓலைகளை ஆராய்ந்து முடிவு கூறும் பெருமக்கள், (Presiding Officers). உயிர் திறம் பெயர—இறந்துபோக. அமர்க்கடந்த—போரில் வெற்றி பெற்ற, தறுகணாளர்—வீரர்களின். குடர் தரீஇ—குடலை இழுத்து (Entrails). தெறுவர—அச்சம் உண்டாக. எருவை—கழுகு, பருந்து. இருக்கும்—வெளியே கொண்டுவந்து போடும்.]

''குடிபதிப் பெயர்ந்த சுட்டுடை முதுபாழ்க்
கயிறுபிணிக் குழிசி ஓலை கொண்மார்
பொறிகண்டு அழிக்கும் ஆவண மாக்களின்
உயிர்திறம் பெயர நல்லமர்க் கடந்த
தறுகணாளர் குடர்தரீஇத் தெறுவரச்
செஞ்செவி எருவை அஞ்சுவர இருக்கும்.''

.—அகநானூறு, -77

**ஊராட்சிச் சபைகள்**

மேற்கண்ட அகநானூற்றுப் பாடலில் வரும் குறிப்பினால் ஊராட்சியமைப்பும், அதன் உறுப்பினர் தேர்தல் முறையும் பிறவும், மிகப் பழங்காலத்திலேயே தமிழகத்தில் நிலவி வந்தமை தெளியலாம். இத்தகைய ஊராட்சி யமைப்புகள் மானூர், உக்கல், திருவல்லம், ஆதன்பாக்கம், திருப்பாற்கடல், காவேரிப் பாக்கம், மணலி, அன்பில், கூரம், திருத்தணிகை, திருக்கடவூர் முதலிய பல இடங்களில் இயங்கி வந்த செய்தி பற்பல கல்வெட்டுக்களாற் புலனாகின்றது.

அவற்றுள் உத்தரமேரூர்ச் சதுர்வேதி மங்கலத்துச் சபை, மிகவும் புகழ்பெற்ற தொன்று, அங்குள்ள கல்வெட்டு மிகவும் வரலாற்றுப் புகழ் வாய்ந்ததாகும். திரு. கே.ஏ. நீலகண்ட சாத்திரியார், மற்றும் திரு. எஸ். கிருஷ்ண சாமி ஐயங்கார் போன்ற வரலாற்று அறிஞர்கள், இக்கல்வெட்டைப்பற்றித் தத்தம் நூல்களிற் சிறப்பித்துக் குறிப்பிட்டுள்ளனர்.

**பராந்தக சோழன்**

ஊராட்சித் தேர்தல் முறை, உறுப்பினர் ஆதற்கு உரிய தகுதிகள், உறுப்பினர் ஆக வொண்ணாத தகுதியின்மைகள், முதலியன பற்றிய செய்திகள் பலவும் உத்தரமேரூர் வைகுந்தப் பெருமாள் கோயிலின் மேற்குச் சுவரிலுள்ள இரண்டு கல்வெட்டுகளால் அறியப் படுகின்றன. அவை இரண்டும் முறையே முத

"The Uttaramerur Inscription is one of the most valuable documents in the South Indian Constitutional History. It throws a flood of light on the Committee syestem of village government, the method of village administra ion by the assembly, the speci-fied qualifications for membership etc. The real importance of the recordlies in the fact that according to it the Kudavolai or lot syestem was adopted by the Sabha of the place for the purpose of election to its various standing Committee.''

லாம் பராந்தக சோழன் (கி.பி. 907-953) காலத்தில், அவனது 12, 14-ம் ஆட்சியாண்டு களில் (கி.பி. 919-921) அமைந்தனவாகும். பழைமையும் பெருமையும் மிக்க அக்கல் வெட்டுகள் இரண்டையும் கீழே காண்போமாக!

—ஆசிரியர்.

## முதற் கல்வெட்டு (கி. பி. 919)

''ஸ்வஸ்திஸ்ரீ[1] மதுரை கொண்ட கோப்பர கேசரி வர்மருக்கு[2], யாண்டு பன்னிரண்டாவது உத்தமேரூர்ச் சதுர்வேதி மங்கலத்துச் சபை யோம்: இவ்வாண்டு முதல் எங்களே ஊர் ஸ்ரீ முகப்படி[3] ஆணையினல் தத்தனூர் மூவேந்த வேளான் இருந்து, வாரியம் ஆக ஆட்டொருக் காலும்[4] சம்வத்ஸர வாரியமும்[5] தோட்ட வாரியமும்[6] ஏரி வாரியமும்[7] இடுவதற்கு வியவற்ததை செய்த பரிசாவது:

குடும்பு[8] முப்பதாய், முப்பது குடும்பிலும் அவ்வவ குடும்பிலாரே கூடிக் கால் நிலத்து மேல் இறைநிலம்[9] உடையான் தன் மனையிலே அகம் எடுத்துக் கொண்டு இருப்பானய், அறுபது பிராயத்துக்குள் முப்பது பிராயத்து மேற்பட் டார், வேதத்திலும் சாத்திரத்திலும் காரி யத்திலும் நிபுணர் எனப்பட்டு இருப்பாரை, அர்த்த சௌசமும் ஆத்ம சௌசமும் உடைய ராய் மூவாட்டின் இப்புறம் வாரியஞ் செய்தி லாதார் வாரியஞ் செய்து ஒழிந்த பெருமக் களுக்கு அந்நியபந்துக்கள் அல்லாதாராய்க் குட வோலைக்குப் பேர் தீட்டிச் சேரி வெளியே திரட்டிப் பன்னிரண்டு சேரியிலும், சேரியால் ஒரு பேர் ஆமாறு, ஏடும் உருவறிய மாட்டான் ஒரு பாலனைக் கொண்டு குடவோலை வாங்கு வித்துப் பன்னிருவரும் சம்வத்ஸர வாரியம் ஆவதாகவும், அதின் முன்பே தோட்டவாரியத் துக்குஷி குடவோலை வாங்கிப் பன்னிருவரும் தோட்டவாரியம் ஆவதாகவும், நின்ற ஆறு குடவோலையும், ஏரிவாரியம் ஆவதாகவும். முப்பது குடவோலை பறிச்சு வாரியம் செய் கின்ற மூன்று திறத்து வாரியமும் முந்நூற்று அறுபது நாளும் நிரம்பவாரியம் ஒழிந்த அநந் தரம்[10] இடும் வாரியங்கள், இவ்வியவஸ்தை ஓலைப்படியே குடும்புக்குக் குடவோலை இட்டுக் குடவோலை பறிச்சுக் கொண்டே வாரியம் இடு வதாகவும், வாரியஞ் செய்தாருக்குப் பந்துக் களும் அந்நியமமே குடவோலையிற்பேர் எழுதி இடப்படாதார் ஆகவும்.

பஞ்சவாரியத்துக்கும்[12], பொன் வாரி யத்துக்கும்[13], முப்பது குடவோலை இட்டுச் சேரியால் ஒருத்தரைக் குடவோலை பறித்துப் பன்னிருவரிலும் அறுவர் பஞ்சவார வாரியம் ஆவதாகவும், சம்வத்ஸர வாரியம் அல்லாத வாரியங்கள் ஒருகால் செய்தாரைப் பின்னை அவ் வாரியத்துக்குக் குடவோலை இடப் பெருததாக வும். இப்பரிசே இவ்வாண்டு முதல் சந்திரா தித்த வத்[14], என்றும் குடவோலை வாரியமே இடுவதாகத் தேவேந்திர சக்ரவர்த்தி ஸ்ரீ வீர் நாராயணன் ஸ்ரீ பராந்தக தேவர் ஆகிய பர கேசரிவர்மர் ஸ்ரீ முகம் அருளிச் செய்துவரக் காட்ட, ஸ்ரீ ஆணையினல் தத்தனூர் மூவேந்த வேளான் உடன் இருக்க நம் கிராமத்துத் துஷ்டர் கெட்டுச் சிஷ்டர் வர்த்தித்து வருவாராக[15] வியவஸ்தை, உத்தரமேரூர்ச் சதுர்வேதி மங்க லத்துச் சபையாம்.

## இரண்டாம் கல்வெட்டு (கி. பி. 921)

''ஸ்வஸ்தி ஸ்ரீ மதுரை கொண்ட கோப்பர கேசரி வன்மருக்கு யாண்டு பதினலாவது, நாள் பதினறு, காலியூர்க் கோட்டத்துத் தன்கூற்று உத்திரமேரூர்ச் சதுர்வேதி மங்கலத்துச் சபை யோம். இவ்வாண்டு முதல் எங்களுக்குப் பெரு மானடிகள் எம்பெருமான் ஸ்ரீ வீர்நாராயணன் ஸ்ரீ பராந்தக் தேவன் ஸ்ரீ பரகேசரி வன்ம ருடைய ஸ்ரீ முகம் வரக்காட்ட, ஸ்ரீ முகப்படி ஆணையினல் சோழநாட்டுப் புறங்கரம்பை நாட்டு ஸ்ரீ வங்க நகர் கரஞ்சை கொண்டை யசுக்கிரம வித்தபட்டன்[16] ஆகிய சோமாசி[17] பெருமான் இருந்து வாரியம் ஆக, ஆட்டொருக் காலும் சம்வத்சர வாரியமும் தோட்ட வாரிய மும் ஏரி வாரியமும் இடுவதற்கு வியவஸ்தை செய்த பரிசாவது:

### உறுப்பினர் தகுதி

குடும்பு முப்பதாய் முப்பது குடும்பிலும் அவ்வவ குடும்பிலாரே கூடிக்,கால் நிலத்துக்கு, மேல் இறைநிலம் உடையான் தன் மனையிலே அகமும் எடுத்துக் கொண்டு இருப்பானய், எழுபது பிராயத்தின் கீழ் முப்பத்தையாண்டு பிராயத்தின் மேற்பட்டார் மந்திர பிராமணம் வல்லாஞ்ய் ஓதுவித்து அறிவானைக் குடவோலை இடுவதாகவும், அரைக்கால் நிலமே யுடையானு யினும், ஒரு வேதம் வல்லானய் நாலு பாஷ் யத்திலும் ஒரு பாஷ்யம் வக்காணித்து[16] அறி வானுயின், குடவாலை எழுதிப் புக இடுவதாக வும், அவர்களிலும் கார்யத்தில் நிபுணராய் ஆசாரம் உடையரானுரையே கொள்வதாகவும், அர்த்த சௌசமும் ஆன்ம சௌசமும் உடை யராய் மூவாட்டின் இப்புறமும் வாரியம் செய்திலாதாரைக் கொள்வதாகவும்.

### கடும் தண்டனை

எப்பேர்ப்பட்ட வாரியங்களிலும் செய்து கணக்குக் காட்டாதாரையும், இவர்களுக்குச் சிற்றவ்வை பேரவ்வை மார்களையும், இவர் களுக்கு அத்தை மாமன் மக்களையும், இவர் களுக்குத் தாயோடு உடன் பிறந்தானையும், இவர்கள் தகப்பனேடு உடன் பிறந்தானையும், தன்னெடு உடன் பிறந்தானையும், இவர்களுக் குப் பிள்ளை கொடுத்த மாமனையும், இவர்கள் பிராமணியோடு உடன் பிறந்தானையும், தன் னேடு உடன்பிறந்தாளை வேட்டானையும், உடன் பிறந்தாள் மக்களையும், தன் மகளை வேட்ட மருமகனையும் தன் தமப்பனையும் தன் மகளை யும், ஆகஇச் சுட்டப்பெற்ற பந்துக்களையும் குடவோலை எழுதிப்புக இடப்பெருதார் ஆக வும்.

### உறுப்பினராகத் தகுதி இழந்தோர்

அகம்யா கன்மத்திலும்[17], மகாபாதகங் களில் முன்படைத்த நாலு மகாபாதகத்திலும் எழுத்துப் பட்டாரையும்[18], இவர்களுக்கும்

முன் சுட்டப்பட்ட பந்துக்களையும் எழுதிப்புக இடப்பெறுதார் ஆகவும், சம்சர்க்க பதிதரைப்[19] பிராயச் சித்தம் செய்யும் அளவும் குடவோலை இடாததாகவும். தீயசகசியராய் இருப்பாரையும் குடவோலை எழுதிப் புகவிடப் பெறுதாராகவும். பரதிரவியம் அபகரித்தானையும்[20], குடவோலை எழுதி இடப்பெறுதாராகவும். எப்பேர்ப்பட்ட கையூட்டுங்[21] கொண்டான், கிருதப் பிராயச்சித்தம் செய்து சுத்தரானுரையும், அல்லவர் பிராணுந்திகம்[22] வாரியத்துக்குக் குடவோலை எழுதிப்புகவிடப் பெறுதாராகவும், பாதகம் செய்து பிராயச் சித்தம்[23] செய்து சுததரானுரையும், கிராம கண்டகராய்ப் பிராயச்சித்தம் செய்து சுத்தமானுரையும் அகம்யாகன்மம் செய்து பிராயச்சித்தம் செய்து சுத்தரானுரையும் ஆக இச்சுட்டப்பட்ட அனைவரையும் பிராணுந்திகம் வாரியத்துக் குடவோலை எழுதிப் புகவிடப் பெறுதாராகவும்.

158606

### தேர்தல் நிகழ்த்தும் முறை

ஆக இச்சுட்டப்பெற்ற இத்தனைவரையும் நீக்கி, முப்பது குடும்பிலும் முப்பது குடவோலைக்குப் பேர் தீட்டிப் பன்னிரண்டு சேரியிலுமாக, இக்குடும்பும் வெவ்வேறு வாயோலை பூட்டி முப்பது குடும்பும் வெவ்வேறே கட்டிக்குடம் புக இடுவதாகவும்.

குடவோலை பறிக்கும் பொழுது மகாசபைத் திருவடியாரைச்[24] சபல விருத்தம்[25] நிரம்பக் கூட்டிக் கொண்டு, ஆண்டு உள்ளூரில் இருந்த நம்பிமார்[26] ஒருவரையும் ஒளியாமே மகா சபையிலே உள் மண்டகத்திலே இருத்திக் கொண்டு அந்நம்பிமார் நடுவே, அக்குடத்தை நம்பிமாரில் விருத்தராய் இருப்பார் ஒரு நம்பி மேல் நோக்கி, எல்லா ஜனமும் காணுமாற்றுல் எடுத்துக் கொடுத்து நிற்க, பகலே அந்தரம் அறியாதான் ஒரு பாலனைக் கொண்டு ஒரு குடும்பு வாங்கி, மற்றொரு குடத்துக்கே புக விட்டுக்குலைத்து அக்குடத்தில் ஓர் ஓலை வாங்கி மத்யஸ்தரின் கையிலே குடுப்பதாகவும்.

அக் குடுத்த ஓலை மத்யஸ்தன் வாங்கும் போது அஞ்சு விரலும் அகல வைத்து, உள்ளங் கையிலே ஏற்றுக்கொள்வானுகவும், அவ்வேற்று வாங்கின வோலை வாசிப்பானுகவும், வாசித்த ஒலி அங்கு உள் மண்டபத்திருந்த நம்பிமார் எல்லாரும் வாசிப்பாராகவும், வாசித்த அப்பேர் தீட்டுவதாகவும், இப்பரிசே முப்பது குடும்பிலும் ஒரோ பேர் கொள்வதாகவும் இக் கொண்ட முப்பது பேரிலும் தோட்ட வாரியமும் ஏரி வாரியமும் செய்தாரையும் வித்யா விருத்தரையும்[27],வயோ விருத்தர்களையும்[28], சம்வத்சர வாரியராகக் கொள்வதாகவும்.

மிக்கு நின்றுருட் பன்னிருவரைத் தோட்ட வாரியம் கொள்வதாகவும், நின்ற அறுவரையும் ஏரிவாரியமாகக் கொள்வதாகவும். இவ்விரண்டு திறத்து வாரியமும் கரைகட்டிக் கொள்வதாகவும் இவ்வாரியம் செய்கின்ற மூன்று திறத்து வாரியப் பெரு மக்களும் 360 நாளும் நிரம்பச் செய்து ஒழிவதாகவும், வாரியம் செய்யா நின்றுரை அபராதம் கண்டபோது அவனை ஒழித்து இடுவதாகவும்.

இவர்கள் ஒழிந்த அநந்தரம் இடும் வாரியங்களும் பன்னிரண்டு சேரியிலும் தன்மகிருத்தியம் கடைக்காணும் வாரியரே மத்யஸ்தரைக் கொண்டு குறி கூட்டிக் குடுப்பாராகவும். இவ் வியவஸ்தை ஓலைப்படியே குடவோலை பறித்துக் கொண்டே வாரியம் இடுவதாகவும்.

பஞ்ச வார வாரியத்துக்கும் பொன் வாரியத்துக்கும் முப்பது பேர் தீட்டி முப்பது வாயோலைக் கட்டும் புக இட்டு, முப்பது குடவோலை பறித்து, முப்பதிலும் பன்னிரண்டு பேர் பறித்துக் கொள்வதாகவும், பறித்த பன்னிரண்டில் அறுவர் பொன் வாரியமும், அறுவர் பஞ்சவார வாரியமும் ஆவன ஆகவும்.

பிற்றை யாண்டும் இவ்வாரியங்கள் குடவோலை பறிக்கும்போது, இவ்வாரியங்களுக்கு முன்னம் செய்த குடும்பு அன்றிக்கே நின்ற குடும்பிலே கரை பறித்துக் கொள்வதாகவும். கழுதை ஏறினுரையும்[29], கூடலேகை[30] செய்தானையும், குடவோலை எழுதி இடப்பெறுதாராகவும் மத்யஸ்தருள் அர்த்த சௌசம் உடையானே கணக்கெழுதுவானுகவும்.

கணக்கெழுதினுன் கணக்குப் பெருங்குடிப் பெருமக்களோடு கூடக் கணக்குக் காட்டிச் சுத்தன் ஆக்கினதன்பின் அன்றி, மற்றுக் கணக்குப் புகப் பெறுதான் ஆகவும். தான் எழுதின கணக்குத்தானே காட்டுவானுகவும். மற்றுக் கணக்கர் புக்கு ஒதுக்கப் பெறுதார் ஆகவும்.

இப்பரிசே இவ்வாண்டு முதல் சந்திராதித்யவத் என்றும் குடவோலை வாரியமே இடுவதாகத் தேவேந்திரன் சக்கரவர்த்தி பண்டித வத்சலன் குஞ்சரமல்லன் சூரசூளாமணி கல்பக சரிதை[31] ஸ்ரீ பரகேசி பன்மர்கள் ஸ்ரீ முகம் அருளிச் செய்து வரக் காட்ட.

ஸ்ரீ ஆணையால் சோழ நாட்டுப் புறங் கரம்பை நாட்டு ஸ்ரீ வங்க நகர் கரஞ்சை கொண்ட யசுக்கிரமவித்த பட்டன் ஆகிய சோமாசிப் பெருமான் உடன் இருந்து இப்பரிசு செய்விக்க, நம் கிராமத்துக்கு அப்யுதயம் ஆகத் துஷ்டர் கெட்டு விசிஷ்டர் வர்த்திப்பதாக வியவஸ்தை செய்தோம். உத்தர மேரு சதுர்வேதி மங்கலத்துச் சபையோம். இப்பரிசுக் குறியுள் இருந்து பெருமக்கள் பணிக்க வியவஸ்தை எழுதினேன். மத்யஸ்தன் காதடிப்போத்தன் சிவக்குறி ராஜ மல்ல மங்கலப் பிரியன். * Ed.

---

1. நலம் தழைக. 2. முதல் பராந்தக சோழர். 3. Royal order. 4. ஆண்டுக்கு ஒருமுறை. 5. Annual Committee. 6. Garden Committee. 7. Irrigation Committee 8. Ward. 9. Taxable land. 10. பிறகு. 12. Famine-relief Committee. 13. Gold Committee 14. சந்திர சூரியர் உள்ள வரையில். 15. தீயவர்கள் அழிந்து நல்லவர்கள் பெருகி. 16. யசுர் வேதத்தின் கிரமபாடத்தில் வல்ல பிராம்மணன். 17. சோமயாகம் செய்து முடித்தவன் (சோமயாஜி).

16. விளக்கியுரைத்து. 17. செய்யத்தகாத தீய செயல்கள். 18. குற்றவாளிகள் என்று பதிவு செய்யப்பட்டிருப்பவர்கள். 19. Those who have Committed incest. 20. பிறர் பொருளை வஞ்சனையாற் கவர்ந்து கொண்டவன். 21. இலஞ்சம் வாங்கியவன் 22. உயிருள்ள வரையில். 23. கிராம நலத்திற்குத் துரோகம் செய்தவர்கள். 24. பெருமக்கள். 25. Quorum. 26. கோயிற் குருக்கள். 27. கல்வியறிவில் முதிர்ந்தவர்கள். 28. ' வயதினுல் முதிர்ந்தவர்கள். 29. பெருங் குற்றங்களுக்காகக் கழுதை மேல் ஏற்றித் தண்டிக்கப்பட்டவர்கள். 30. பொய்க் கையெழுத்து (Forgery). 31. பராந்தக சோழனின் பட்டப் பெயர்கள்.


# பூம்புகார் கலைக்கூடம் காண வாரீர்!

- கல்லெல்லாம் கதை சொல்லும் சிலப்பதிகாரக் காட்சிகள்!
- புதையுண்ட பூம்புகார் புது வடிவம் பூண்டுள்ளது!
- சிந்தைக்கும் கண்ணுக்கும் தெவிட்டாத தமிழ் விருந்து!
- மனதைக் கவரும் மாதவியின் அழகுச் சிலை.


**இவற்றைக் காண பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்திற்கு வருகை தாரீர்!**

பூம்புகார் கலைக்கூடம், சீர்காழியிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும், மாயவரத்திலிருந்து 29 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.


இயக்குநர்
**செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை-600009**



நெடுங்கல் மன்றம்



எழுநிலை மாடம்



சென்னை சைதாப்பேட்டை செங்குந்தக்கோட்டம் என்னும் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழாக்காட்சி (23-6-1975)

வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந.ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.